மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

காமதகனம்

மகாகவி காளிதாஸன்

அந்தக் காட்டிலே ஒரு மரத்திலாவது இலை அசையவில்லை; வண்டினம் முரலவில்லை; பறவை கூவவில்லை; மிருகங்களின் நடமாட்டம் இல்லை. நந்திபகவானுடைய ஆதிக்கத்தில் இருந்த அந்த வனம் முழுவதும், ஓவியத்துக்கு ஆரம்பத்திலே கோடிழுத்த வடிவம் போல, அசைவற்றுக் கிடந்தது.

சுக்கிரனை எதிர்நோக்கிப் போவதைத் தவிர்க்கும் பிரயாணிபோல, மன்மதன் அந்த நந்திகேசுவரருடைய பார்வைக்குத் தென்படாமலே மெதுவாக நழுவினான். அடர்ந்து பின்னிக்கிடந்த சுரபுன்னைக் கிளைகளிலே மறைந்து மறைந்து, அவன் மெல்ல மெல்ல நகர்ந்து, சிவபெருமான் தியானத்திலே வீற்றிருந்த இடத்தை நண்ணினான்.

காமதகனம் புனிதப் பொருள் நிறைந்ததோர் அபூர்வ சம்பவம். கிராமத்துக்குக் கிராமம் அது பற்றிய விழா இன்றும் நடக்கிறது. எரிந்த கட்சி, எரியாத கட்சிப் பாடல்களும் உண்டு. அவற்றை நம்மில் பலர் கேட்டிருப்போம். இதே காமதகனம் பற்றிக் 'குமார சம்பவ'த்தில் மகாகவி காளிதாஸன் வர்ணித்திருக்கும் இந்தச் சித்திரத்தில் காவியரஸம் ததும்புகிறது.

அங்கே தேவதாரு மரத்தடியில், புலித்தோல் பரப்பிய மேடையில், சமாதியிலே ஆழ்ந்து அமர்ந்திருந்த முக்கண்ணரை அவன் தரிசித்தான்.

வீராசனத்தில் வீற்றிருந்த அந்தப் பெருமானுடைய முன்னுடலம் அசைவற்றிருந்தது. அவருடைய வடிவம் நேராகவும் பரந்தும் இருந்தது. தோள்கள் இரண்டும் வளைய, கைத்தலங்கள் இரண்டும் மேலெழ, மடியிடையிலே தாமரை மலர் பூத்தாற்போல இருந்தது.

நாகத்தினால் எடுத்துக் கட்டிய சடைமுடி. காதிலே தொங்கும் இரட்டைவட அட்சமாலை. கழுத்தின் ஒளிபட்டு ஆழ்ந்த நீலநிறமாகத் தோற்றிய மான்தோலை அவர் முடிந்து அணிந்திருந்தார்.

அவருடைய கண்ணின் மணிகள் மெல்லொளி பரப்பி அசைவற்று உக்கிரமாக இருந்தன. புருவத்தை வளைக்காமல், இமையா நாட்டத்தோடு, கண்ணின் ஒளி கீழ்நோக்கி வீச, மூக்கிலே பார்வையைச் செலுத்தி அவர் வீற்றிருந்தார்.

மூச்சை உள்ளடக்கிய அந்தப் பெருமான் மழை பொழியாத கருமுகிலைப் போலவும், அலை வீசாத பெருங்கடலைப்போலவும், காற்

றெழுந்த இடத்திலே அசையாத விளக்கைப் போலவும் விளங்கினர்.

கபாலக்கண் வழியே பிரம்மரந்திரத்திலிருந்து வீசிய ஜோதியின் முன்பு, தாமரைத்தண்டின் நூலை விட மென்மையான இளம் பிறையின் எழில் மங்கியது.

ஒன்பது வாயில்களை அடைத்து, சமாதியினல் மனத்தை இருதயத்துள்ளே இருத்தி, என்றும் அழிவற்றதென்று பெரியோர் புகலும் அந்த ஆத்மாவைத் தம்மிடத்தே கண்டவண்ணம் சிவபெருமான் வீற்றிருந்தார்.

அந்த நிலையிலே அவரைக் கலைக்க எவனும் மனத்தாலும் எண்ண முடியாது. மிகவும் அருகிலே அவரைப் பார்த்ததும், பயத்தினல் மாரனுடைய கைகள் நடுங்கின. வில்லும் அம்பும் நழுவிக் கீழே விழுந்ததைக்கூட அவன் அறியவில்லை.

அடியோடு ஒடுங்கிப்போன அவனுடைய வலிமையைத் தன் அழகினல் உயிர்ப்பிக்க வந்தவள்போல, அப்பொழுதுதான் பர்வதராஜன் மகள் வனதேவதைகள் புடைசூழ அங்கே தோன்றினள்.

பத்மராகத்தைப் பழிக்கும் அசோக மலர், பொன்னின் ஒளியைக் கவரும் மஞ்சள் கொன்றை மலர், முத்துக்குவியலை நிகர்த்த நொச்சி மலர் - ஆகிய வசந்த புஷ்பங்களையே அவள் ஆபரணமாக அணிந்திருந்தாள்.

ஸ்தன பாரம் தாங்காமல் அவள் சற்றுக் குனிந்தவள் போலத் தோன்றினள். இளம் வெயில் போன்ற நிறமுள்ள துகிலை அவள் உடுத்திருந்தாள். பூவும் மொட்டும் குலுங்கித் தலைசாய்ந்து, தளிர்விட்ட கொடிபோல அவள் அசைந்து வந்தாள்.

தனது வில்லின் நாணுக்குப் பதிலாக மாரன் சரியான இடத்தை அறிந்து பூட்டிய மற்றொரு நாண் போன்ற மகிழமாலையாகிய மேகலை அடிக்கடி அவளுடைய இடையிலிருந்து நழுவியது. அவள் மீண்டும் மீண்டும் அதைக் கையிலே தாங்கி வந்தாள்.

மணம் வீசும் மூச்சினல் வேட்கை மிகுந்து கொவ்வையிதழை அணுகும் வண்டைக் கணந்தோறும் லீலாரவிந்தத்தினல் விரட்டிக்கொண்டே, கண்ணில் மருட்சியோடு அவள் வந்தாள்.

ரதியையும் வெட்கச் செய்யும் அப்பழுக்கற்ற எழில்மேனியோடு நின்ற அந்தப் புவனமோகன சுந்தரியைக் கண்டதும், புலனடக்கங்கொண்ட சிவபிரானிடத்திலே இனிமேல் தன் காரியம் பலித்துவிடும் என்று மலர்க்கணையோன் மறுபடியும் எண்ணமிட்டான்.

உமை தனக்குக் கணவராகப் போகும் பரமசிவன் தவம் புரியும் இடத்தின் வாயிலை அடைந்தாள். அவரும் அந்தக் கணத்திலே தம்முள்ளே பரமாத்ம ஜோதியைத் தரிசித்துவிட்டுத் தியானத்தை முடித்தார். ஆதிசேடன் மிகுந்த சிரமத்தோடு கீழே பூமியைத் தாங்கிக் கொள்ள, அவர் மெதுவாக மூச்சை வெளியே விட்டு, இறுக்கமான வீராசனத்தைத் தளர்த்திக்கொண்டார்.

அப்பொழுது நந்தி அவரிடம் வந்து வணங்கி, மலைமகள் பணிவிடைக்காக வந்திருப்பதை அறிவித்தார். சிவபெருமான் புருவத்தை அசைத்து அவள் வருவதை அனுமதித்தார். நந்தி அவளை ஆண்டவன் பக்கலில் கொண்டுவிட்டார்.

பார்வதியின் தோழிகள் முக்கண்ணரைத் தொழுது, தாங்கள்

கொண்டுவந்த தளிரிணுக்குகள் கலந்த வசந்த மலர்களை அவர் திருவடிகளிலே தூவினார்கள். கருங் குழல் நடுவே மிளிர்ந்த கொன்றை மலர் அவிழ, காதிலிருந்து செந் தளிர் நழுவ, உமையும் விருஷபத் துவஜரைத் தலைகுனிந்து வணங் கினாள்.

"உன்னை விட்டு அகலாத கண வனைப் பெறுவாயாக" என்று அவளுக்கு அவர் கூறிய ஆசி உண் மையாயிற்று. பெரியோர்களின் வாக்கு உலகத்திலே என்றும் மாறுவ தில்லை.

அம்பைத் தொடுக்க இதுவே தருணம் என்று நினைத்த காமன், உமைக்கு எதிரே அரனைக் குறி பார்த்து வைத்துக்கொண்டு, அடிக் கடி வில்லின் நாணைத் தொட்டு வந்தான். அந்தச் சமயத்திலே பார் வதியும், மந்தாகினியிலிருந்து எடுத்து வெயிலிலே நன்றாகக் காயவைத்துக் கோத்த தாமரை மணிமாலையைத் தவசியான சங்கர ருக்குத் தன் செங்கரங்களால் சமர்ப்பித்தாள்.

அன்பர்களிடத்தில் ஆதரவு கொண்ட திரிலோசனர் அந்த ஜபமாலையை ஏற்றுக்கொள்ளக் கை நீட்டினார். பூங்கணையோன் தன் வில்லிலே ஸம்மோகனம் என்ற அம்பைத் தொடுத்தான்.

சந்திரோதயத்தின் ஆரம்பத்திலே எழும்பும் கடல்போல, பரம சிவன் சற்று நெகிழ்ச்சியோடு உமை யின் முகத்திலே கொவ்வைக்கனி யிதழிலே பார்வையைச் செலுத் தினார். மலைமகளும் சிறு கதம்பச் செடிபோல் அங்கங்கள் துடிக்கத் தன் மனநெகிழ்ச்சியைப் புலப் படுத்தி, முகத்தைச் சாய்த்துக் கொண்டு, நாணத்தினால் கண்கள் மருள, அழகாக நின்றாள்.

ஜிதேந்திரியரான முக்கண்ணர் உடனே தம் புலன்களைப் பலமாக அடக்கிக்கொண்டு, 'இப்படி மனங் கலங்கக் காரணம் என்ன?' என்று சுற்று முற்றும் பார்த்தார். வலது கடைக்கண்ணருகே கையை ஊன்றி, தோள்கள் வளைய, வலது காலைச் சற்று மடக்கி, அழகிய வில்லை வட்ட மாக வளைத்துத் தம்மை எய்ய ஆயத்தமாக இருக்கும் மன்மதனை அவர் கண்டார்.

தவம் கலைந்ததனால் அவருக்குச் சினம் பொங்கியது. அவர் புரு வத்தை நெறித்தது, பார்க்கப் பயங் கரமாக இருந்தது. திடீரென்று அவருடைய மூன்றாவது நயனத் திலிருந்து நெருப்பின் ஜ்வாலை கொழுந்துவிட்டுத் தகதகவென்று வெளியே வீசியது.

"சினத்தைத் தவிருங்கள், ஆண்டவனே, தவிருங்கள்!" என்று வானத்திலே தேவர்களின் குரல் எழும்புவதற்குள்ளே, சிவபிரா னுடைய நெற்றிக்கண் நெருப்பிலே மதனனுடைய சாம்பல் மட்டுமே எஞ்சியது.

பொறிகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அந்தப் பொறுக்க முடியாத துயரத் தினால் ரதி மூர்ச்சையடைந்தாள். கணவன் இறந்த துயரத்தைச் சிறிது நேரத்துக்கு மறக்கடித்து அந்த மூர்ச்சை அவளுக்கு உதவி புரிந்தது.

தவநிலையிலே இருந்த சிவபெரு மான் தமது தவத்துக்கு இடை யூறாக வந்த காமனை, வனமூலிகை யை இடி தாக்கியதுபோல எரித்து விட்டு, பெண்வாடையைத் தவிர்க்க

எண்ணி, உடனே பூதகணங்களோடு அங்கிருந்து மறைந்தார்.

மலைமகளோ, வானமளாவி நிற்கும் தந்தையின் பெருவிருப்பமும் தன் வனப்பான மேனியும் வீணுவதைக் கண்டு, அதிலும் தோழிகளின் முன்னுல் இந்தச் சம்பவம் நடந்ததை நினைந்து நினைந்து வெட்கம் மிகுந்தவளாய், பாழடைந்த உள்ளத்தோடு, மிகவும் சிரமப்பட்டு ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்துத் தன் வீட்டை நோக்கி நகர்ந்தாள். ருத்திரனுடைய கோபத்தை எண்ணியதும் அவள் பயந்து சட்டென்று கண்ணை மூடிக்கொண்டாள்.

உடனே இமவான் தன் புதல்வியிடம் இரக்கங்கொண்டு, தாமரை மலரைத் தந்தத்திலே ஏந்திச் செல்லும் ஐராவதம்போல, அவளைத் தன் இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு அங்கிருந்து வேகமாக நடந்தான். பாதையிலே அவன் சென்ற வேகத்தில் அவனது உடல் நீளமாகத் தென்பட்டது.

எது சரி?

1. பஞ்சகல்யாணி: (அ) கர்நாடக ராகங்களுள் ஒன்று (ஆ) சிறந்த குதிரை வகைகளுள் ஒன்று (இ) அம்பிகையின் திருநாமம் (ஈ) பொய்யாமொழிப் புலவரின் மனைவி.

2. சிறுபஞ்சமூலம்: (அ) ஒரு நட்சத்திரம் (ஆ) பஞ்ச காலத்தில் தோன்றும் ஒரு கிரகம் (இ) மாயை (ஈ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

3. தொண்டகம்: (அ) வடநாட்டில் உள்ள ஒரு சிற்றரசு (ஆ) தொண்டர்கள் வாழும் வீடு (இ) குறிஞ்சி நிலத்துக்குரிய பறை (ஈ) ஒருவகைச் செய்யுள்.

4. மகதி: (அ) நாரதருடைய யாழ் (ஆ) மகதநாட்டில் இருந்த பெண் ஒருத்தி (இ) அகதி (ஈ) தவளை.

5. பிரமபுரம்: (அ) பிரமலோகத்தின் தலைநகர் (ஆ) சீகாழி (இ) திருவிடைமருதூர் (ஈ) மயானம்.

6. சாமன்: (அ) சேரனுடைய சேனுதிபதி (ஆ) காமனுக்குத் தம்பி (இ) நீல நிறம் படைத்த மனிதன் (ஈ) முருகக் கடவுள்.

7. கற்கவி: (அ) அவியலைப் போன்ற உணவு (ஆ) கடினமான கவிதை (இ) வாயில் நிலைக்கு மேல் வளைவாக உள்ள பகுதி (ஈ) மலைக் குகை.

8. புதினம்: (அ) பத்திரிகை (ஆ) மனித இனம். (இ) நல்ல நாள் (ஈ) விருந்தினர்.

இதுதான் சரி

1. ஆ. 2. ஈ. 3. இ. 4. அ.
5. ஆ. 6. ஆ. 7. இ. 8. அ.

விலகும் கவர்னர் ஜெனரல்

வீரன் மவுண்ட்பாட்டன்

★

இந்தியாவின் கடைசிப் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலான மவுண்ட்பாட்டன் வாழ்க்கை முழுவதும் ஒரு சிறந்த வீரன். (1) டேல் கார்னீஜி எழுதியுள்ள வாழ்க்கை வரலாறு, (2) லாரென்ஸும் ஸில்வியா மார்ட்டினும் 'நேஷனல் ஹோம் மன்த்லி'யில் எழுதியுள்ள கட்டுரை இந்த இரண்டிலும் உள்ள விவரங்களை ஆதாரமாகக் கொண்டது இந்த வரலாறு.

ஆயிரமாயிரக் கணக்கான வாலிப வீரர்கள் இரண்டாவது உலக யுத்தத்தில் தென்கிழக்கு ஆசியப் போர்முனையில், விக்டோரியா மகாராணியின் கொள்ளுப் பேரன் ஒருவருடைய தலைமையில் தீரமாய்ப் போரிட்டார்கள். பூமியின் மேற்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி விஸ்தீரணத்துக்கு அவர் தளபதியாக இருந்தார். அவர்தாம் லார்டு லூயி மவுண்ட்பாட்டன்; தற்போது விலகப்போகிற இந்தியாவின் கடைசிப் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல். இவரை இவருடைய நெருங்கிய நண்பர்கள் 'டிககீ' என்று அழைப்பார்கள். ஆனால், லார்டு லூயி பிரான்ஸிஸ் ஆல்பர்ட் விக்டர் நிக்கொலஸ் மவுண்ட்பாட்டன் என்பதுதான் இவருடைய முழுப் பெயர்.

இவருடைய தாய் விக்டோரியா மகாராணியின் பேத்தி. தகப்பனார் ஒரு ஜெர்மானிய ராஜகுமாரர்; ஆனால், அவர் பிரிட்டிஷ் பிரஜையாகிவிட்டார். இந்தத் தம்பதிகளுக்கு மகனாக 1900-ஆம் ௵ ஜூன் மீ 25-ஆம் தேதி பிறந்தார் மவுண்ட்பாட்டன்.

ருஷ்ய சக்கரவர்த்தியான ஜார் நிக்கொலஸ் இவருக்கு மாமன். அவர்தாம் இவருக்குப் பெயரிட்ட ஞானத் தந்தை. நிக்கொலஸ் என்பது வரையில்தான் அவர் சூட்டிய பெயர். மவுண்ட்பாட்டன் என்பது, பல வருஷங்களுக்குப்பின் சொந்தத் தந்தை சேர்த்த பெயர். நாமகரண வைபவம் நடந்துகொண்டிருந்த போது, இந்த மவுண்ட்பாட்டன் குழந்தை என்ன செய்தது தெரியுமா? பாட்டி விக்டோரியாவின் மூக்குக் கண்ணாடியைப் பிடுங்கி விட்டது. 1917-ஆம் ௵ ஜெர்மானியர் என்றாலே பிரிட்டிஷ் ஜனங்களுக்கு ஆத்திரம் வந்தது. அப்போதுதான் இவருடைய தந்தை இவருக்கு மவுண்ட்பாட்டன் என்ற ஆங்கிலப் பெயரைச் சூட்டினார்.

இவருடைய தகப்பனார் மார்க்விஸ் அவ் மில்போர்டு பிரிட்டிஷ் கடற்

படையில் மிக உன்னதப் பதவியான கடற்படையின் முதல் லார்டு என்ற தலைமைப் பதவியைப் பெற்றார். தந்தையைப் போலவே தாமும் கடற்படையில் கீர்த்தி பெறவேண்டும் என்று சிறு வயதிலேயே மவுண்ட்பாட்டனுக்கு ஆசை. பதின்மூன்று வயதிலேயே பொம்மை யுத்தக் கப்பல்களை வைத்துக் கொண்டு இவர் விளையாடுவார்.

படிப்பில் சூடிகையானவர் என்று சொல்ல முடியாது; ஆனால், மகா உழைப்பாளி. அதனால் பரீட்சைகளில் முதல் தரமாய்த் தேறினார். வாழ்க்கையிலே இவருடைய அபூர்வ வெற்றிகளைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இவரைக் கேட்டால், "நான் இயற்கையிலே ஒரு மந்தபுத்தி. ஆனால் பாடுபட்டு உழைப்பேன்; வெற்றி கிட்டுகிறது" என்று சொல்லுகிறார்.

கடற்படையில் இவர் பயிற்சி பெறுகையில் மார்ஸ் கோட் என்ற தந்தி பாஷை இவருக்கு மூளையில் ஏறவில்லை. தாம் தூங்கும்போது இரவு முழுவதும் தம் தலைமாட்டில் தந்தியடித்துக்கொண் டிருக்கும்படி ஒரு நண்பனை ஏற்பாடு செய்து கொண்டார். அப்படியும் இவருடைய உள் மனம் அதைக் கிரகித்துக் கொள்ளவில்லை. எந்த விஷயத்தைக் கற்பதானாலும் அதன் அடிப்படைத் தத்துவங்களை நன்றாக மனத்தில் பதிந்துகொள்வதே வழி என்று கண்டார். அவ்விதமே செய்தார். தந்திபாஷை பிடிபட்டு விட்டது. தந்தி, ரேடியோ இரண்டையும் தாம் கற்றுக்கொள்வதற்காக அவைபற்றித் தாமே பல அருமையான பாடபுத்தகங்களை எழுதிவிட்டார்!

இன்று விண்ட்ஸர் கோமகனை இருக்கிறாரே, அவர் வேல்ஸ் இளவரசராக இருந்த காலத்தில், அவருடைய மெய்காவலராகவும் விளையாட்டுத் தோழராகவும் பதவிபெற்றார் மவுண்ட்பாட்டன். போலோ என்ற குதிரைப் பந்தாட்டத்தில் விண்ட்ஸர் கோமகனுக்கு வெகு பிரியம். மவுண்ட்பாட்டனுக்கோ அது நன்றாய்த் தெரியாது. இவரை அவர் ஒரு பொம்மையாய் நிறுத்தி வைத்துவிடுவார். இவர் உடனே அந்த விளையாட்டை ஒரு சினிமாப் படம் எடுத்துக்கொண்டார். படத்தை மிக மெதுவாக ஓடவிட்டு, குதிரைகளின் இயக்கங்களைக் கூர்மையாய் ஆராய்ந்துகொண்டார். பின்பு, பில்லியர்ட்ஸ் டேபிளில் பந்துகளைப் போலோ மாதிரி ஆடிப் பார்த்துச் சில வழிகளை வகுத்துக்கொண்டார். பிறகு, கடற்படை வீரர்களின் போலோ கோஷ்டி ஒன்றைச் சேர்த்து, தரைப்படை, விமானப் படைப்போலோ கோஷ்டிகளையெல்லாம் தோற்கடித்தார். போலோ விளையாட்டு நுட்பம் பற்றி ஒரு புஸ்தகமும் எழுதிவிட்டார். அந்த விளையாட்டை விளக்கும் புத்தகங்களுக்குள்ளேயே அதுதான் இப்போது தலைசிறந்ததாக விளங்குகிறது.

லண்டனிலே இவர் புதுமையாக ஒரு வீடு கட்டினார். வீட்டிலே இருபத்தைந்து அறைகள். வீடுமுழுவதும் மின்சாரக் கண்களும், பட்டன்களும், விசைகளும் நிறைந்திருக்கின்றன. விருந்துக் கூடத்தை ஒரே நிமிஷத்தில் ஸினிமா தியேட்டர் ஆக்கிவிடலாம். அமெரிக்காவிலிருந்து வந்த மிக உயரமான எலிவேட்டர் என்ற விசைப்படி. வீட்டுக்குள்ளே நாயும் பூனையும் செல்லமாய் வளர்ப்பது பல பிரிட்டிஷ்காரர் வழக்கம். இவர் வீட்டிலோ சிங்கக்குட்டிகள், கங்காரு முதலிய விசித்திர மிருகங்களைத் தான் விருந்தாளிகள் காணமுடியும்.

அவை இவருடைய மனைவியின் உபயம். இவர் யுத்தகளங்களுக்குப் போயிருந்தபோது அவள் ஆஸ்திரேலியா, ஈரான், சீனு முதலிய நாடுகளின் காடுகளுக்குப் போய் அங்கே இந்த மிருகங்களைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டாள்.

கடற் போரில் மவுண்ட்பாட்டனைப் பிரலித்தி பெற்ற நெல்ஸனுக்கு ஒப்பிடுகிருர்கள் பிரிட்டிஷ்காரர்கள். கெல்லி என்ற டெஸ்டிராயர் கப்பலின் தலைவராக இருந்து இவர் புரிந்த தீரச் செயல்கள் உலகப் பிரசித்தம். அது ஒரு முறை கடற்கண்ணிபட்டுச் சேதமாயிற்று. உடனே இவர் அதைப் பழுதுபார்த்துக் கடலுக்குள் ஓட்டிச் சென்ருர். அதை எதிரிகளின் டார்ப்பிடோ தாக்கியது. மீண்டும் இவர் அதைச் சீர் செய்து கடலில் செலுத்தினர். நூற்றுக்கணக்கான குண்டுகளை இவருடைய கப்பலின்மீது ஜெர்மன் விமானங்கள் சொரிந்தன. இவருடைய கப்பல் எந்த நிமிஷத்திலும் கவிழக்கூடிய நிலையில் இருந்தது. "என்ன நடந்தாலும் சரி; நம்முடைய பீரங்கிகள் இடைவிடாமல் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும்" என்று தம் வீரர்களுக்கு இவர் உத்தரவிட்டார். அப்படியே கடைசி நிமிஷம் வரைக்கும் அக்கினி கக்கிக்கொண்டிருந்து விட்டு, கெல்லி கவிழ்ந்தது. மவுண்ட்பாட்டனும் அவருடைய வீரர்களும் ஒரே எண்ணெய்ப் படலமாக இருந்த கடலிலே மூழ்கிவிட்டார்கள். மணிக்கணக்காய் நீந்தித் தத்தளித்தார்கள். இவர்களை நோக்கி ஜெர்மன் விமானங்கள் சரமாரியாக மெஷின் கன்னுல் சுட்டுக்கொண்டிருந்தன. கடைசியிலே அதிருஷ்டவசமாய் இவர்களுடைய சொந்த டெஸ்டிராயர் கப்பல் ஒன்றே வந்து இவர்களை ஏற்றிக்கொண்டு காப்பாற்றியது.

படைத் தலைவராக முதல் முதலில் இவர் நியமனம் பெற்ற போது, "நான் செய்யாத எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்யும்படி உங்களை நான் ஏவமாட்டேன்" என்று தம் வீரர்களுக்கு இவர் அறிவித்தார். ஒவ்வொரு படையெடுப்பின் பிறகும், தம் வீரரைக் கூட்டி வைத்துக்கொண்டு, அதன் குணதோஷங்களை ஆராயாமல் விடமாட்டார். ஒருநாள் அப்படி நடந்த ஒரு கூட்டத்தில் தம் வீரர்களைப் பார்த்து, "நாம் போய்ச் சேரக் குறித்த நேரம் 8 மணி 30 நிமிஷம். ஆனுல், முதல் மனிதன் கரையிலே போய் ஏறியபோது மணி 8 நிமிஷம் 31" என்ருர். இவர் விளையாடவில்லை. ஒரு நிமிஷம் என்ருல் ஒரு நிமிஷம். அந்த ஒரு நிமிஷத் தாமதத்தினுல் பல உயிர்கள் சேதமாகக் கூடும்.

பர்மாவில் போரிட்டுக்கொண்டிருந்தபோது மவுண்ட்பாட்டனுக்குக் கடுமையான வயிற்றுக்கடுப்பு வந்தது. "நீங்கள் ஒரு மாதம் படுக்கையிலே படுத்து ஓய்வெடுத்துக்கொள்ளவேண்டும்" என்று இவரை எச்சரித்தார் டாக்டர். அதெல்லாம் முடியாது என்று இவர் மறுத்துவிட்டார். இந்தப் பிடிவாதக்கார மனிதரைப் படுக்கையில் கிடத்த மருந்து கொடுப்பதுதான் சரியான வழி என்று எண்ணினுர் டாக்டர். தூக்க மருந்து ஒன்றையும் இவருக்குக் கொடுத்தார். இவரோ அன்று ராத்திரிதான் ஒரு நிமிஷங்கூடத் தூங்காமல் பொழுது விடிகிறவரையிலும் பாபரவென்று உழைத்தார்.

இவரைப் பெரிய ராணுவப் பதவிகளுக்கு முதல் முதலாக நியமித்த பெருமை பிரிட்டனின் யுத்த காலப் பிரதம மந்திரி வின்ஸ்டன்

சர்ச்சிலைச் சேரும். அப்போது சிலர் அதைக் கண்டு முணுமுணுத்ததும் உண்டு. இவர் யுத்தத்திலே சிறந்த வீரர்தாம். ஆனால், இந்திய வைஸிராய் ஆகும் வரையில் இவருக்கு அரசியல் அநுபவம் எதுவுமே இல்லை. அப்படியிருந்தும், இந்தப் பதவி அவருக்கு எப்படிக் கிடைத்தது? இதற்குப் பெரிதும் பொறுப்பு, நம் அருமந்த பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால்தாம். 1945-ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ராணுவத்தலைவராக இருந்தார் மவுண்ட்பாட்டன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பரம விரோதிகளில் ஒருவரான ஜவாஹர், தேசீய காரியமாக அங்கே போனார். இருவரும் பரம சிநேகிதர்கள் ஆகிவிட்டார்கள்.

அடுத்த வருஷம் ஆகஸ்ட் மாதம் பண்டித ஜவாஹரின் தலைமையில் முதல் இந்திய தேசீய சர்க்கார் அமைந்தது. ஆனால், அப்போது பாகிஸ்தான் பிரிவினை ஏற்படவில்லை. நேரு சர்க்காரில் லீகர்கள் முதலில் சேரவில்லை. பின்னால் சேர்ந்து முட்டுக்கட்டை போட்டார்கள். அதற்கு உடந்தையாய் இருந்தார், அப்போதைய வைஸிராய் லார்டுவேவல். அவருக்குப் பதிலாக மவுண்ட்பாட்டனை அந்தப் பதவிக்கு நியமிக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காருக்கு யோசனை கூறினார் ஜவாஹர். பிரிட்டிஷ் தொழிற்கட்சிச் சர்க்காரும் தைரியமாக அந்த யோசனையை ஏற்றுக்கொண்டது.

1947-ஆம் ஆண்டு மார்ச் மீ மவுண்ட்பாட்டன் பதவி ஏற்றார். ஜூன் மீ பிரிவினைத் திட்டத்தை லீகும் காங்கிரஸும் அங்கீகரித்தன. பாகிஸ்தான், இந்தியா இரண்டுக்குமே மவுண்ட்பாட்டன் இடைக்கால வைஸிராயாக இருப்பதென்ற ஏற்பாட்டைக் குலைத்து, தாமே பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றார் ஜின்னா. காங்கிரஸ்காரர்கள் அப்படிச் செய்யாமல் மவுண்ட்பாட்டனையே அந்தப் பதவியில் நிறுத்திக்கொண்டார்கள்.

இன்னும் சில தினங்களில் கவர்னர் ஜெனரல் பதவியை நம் ராஜாஜியிடம் ஒப்பித்துவிட்டு இவர் ஊருக்குத் திரும்புகிறார். "இனி என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று இவரைக் கேட்டால், "கடற்படைக்குத் திரும்புவேன்" என்றே இவர் எப்போதும் பதில் சொல்லுகிறார். ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் தாய்நாட்டு நிர்வாகத்தில் உயர்ந்த அரசியல் பதவி எதுவும் வகிக்கக் கூடாது என்பது பிரிட்டிஷ் சம்பிரதாயம். கன்ஸர்வேடிவ் கட்சிச் சர்க்காராக இருந்தால் எந்தச் சம்பிரதாயத்தையும் மீறாது. தொழிற்கட்சிச் சர்க்கார் தான் சம்பிரதாயங்களை யெல்லாம் மீறவல்லது. ஆகையால், பிரிட்டனில் ஏதோ ஓர் உயர்ந்த அரசியல் பதவி இவருக்குக் காத்திருக்கிறது என்றே அரசியல் ஹேஷ்ய நிபுணர்கள் எண்ணுகிறார்கள்.

கட்டுரைப் போட்டி

'தமிழ்நாட்டுப் பொதுஜனம்' என்ற கட்டுரைப் போட்டியைப் பற்றி முதல் இதழில் குறிப்பிட்டிருந்தோம். இந்தப் போட்டிக்குப் பல கட்டுரைகள் வந்திருக்கின்றன. போட்டி முடிவும் பரிசு பெற்ற கட்டுரையும் அடுத்த இதழில் வெளியாகும்.



அமரும் கவர்னர் ஜெனரல்

ஞானி ராஜாஜி

★

ஜோதிஷம் பலபேர் விஷயத்தில் பலிப்பதில்லை; சிலர் விஷயத்தில் ஜாதக பலாபலன் அத்தனையும் பலித்துவிடுகிறது. அப்படிப்பட்ட அதிருஷ்டசாலிகளில் ஒருவர் ராஜாஜி. சேலம் ஜில்லா ஹொஸூர் கிராமத்தின் முன்ஸீப் சக்கரவர்த்தி ஐயங்கார் என்ற வைஷ்ணவருக்கு மகனாக 1879-ஆம் வருஷத்தில் பிறந்தார் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார். குழந்தை பிறந்ததும் ஜாதகத்தைப் பார்த்தார் தகப்பனார். திடுக்கிட்டுப் போய்விட்டார். புராண புருஷர்களான ராமன், கிருஷ்ணன், மதஸ்தாபகர்களான சங்கரர், ராமாநுஜர் ஆகியவர்களைப்போல் ராஜாஜி வாழ்வார் என்று ஜாதகம் காட்டியது. அதோடு நிற்கவில்லை. மகா உன்னத பதவி தொடங்கி மகா மோசமான கஷ்டங்கள், சமூகத் துவேஷங்கள் வரையில் சகலமும் இவர் அநுபவித்துவிடுவார் என்றும் அது காட்டியது. தகப்பனார் திகிலடைந்தார். ஜாதகபலன்களை யாருக்கும் சொல்லாமல் வெகு நாள் வரையில் தம் மனத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டார். மனைவி திரும்பத் திரும்ப அலட்டியதால், அவளுக்கு மாத்திரம் சொன்னார். ஜாதகம் இதுவரையில் பலித்து வருகிறது. இந்த '48-ஆம் ௵

இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலும் அநேகமாகக் கடைசி கவர்னர் ஜெனரலுமான சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் நம் ராஜரிஷி ஜனகனைப் போல் ஞானி. (1) இ. பி. என்பவர் 'பம்பாய் கிரானிக்கிளி'ல் எழுதியுள்ள கட்டுரை, (2) என். பி. என்பவர் 'இந்தியா'வில் எழுதியுள்ள கட்டுரை இந்த இரண்டையும் ஆதாரமாகக் கொண்டது இது.

ஜூன் ௴ 21-ஆம் ௳ இந்தியாவின் முடிசூடிய மன்னருக்குச் சமதையான கவர்னர் ஜெனரல் பதவியையும் ராஜாஜி வகிக்கப் போகிறார்.

ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவி வகிக்கப் போவதுபற்றிப் பற்பல கதைகள் உண்டு. அவற்றில் ஒன்று மிகவும் ரசமானது.

1929-ஆம் ௵ புது டில்லியில் ஸர் டி. விஜயராகவாசாரியாருடன் ராஜாஜி தங்கியிருந்தார். ஸர் டி. வி. யின் மகன் ராமபத்திரனும் கணிதப் புரொபஸர் டாக்டர் விஜயராகவன் என்ற ஒரு நண்பரும் வைஸிராய் மாளிகைக்கு ஏதோ காரியமாகப் போய் வந்தார்கள். வைஸிராய் மாளிகையை ஸர் டி. வி. அவர்களின் மகன் தம் தந்தையிடம் புகழ்ந்து வர்ணித்துக்கொண்டிருந்தார். அப்போது டாக்டர் விஜயராக

வன் என்ற நண்பர் திடீரென்று ஸர் டி. வி. யை நோக்கித் திரும்பி, "ஸார், ஒருவேளை நீங்கள் ஒரு நாள் இந்த மாளிகையில் வசித்தாலும் வசிக்கலாம்" என்றார். அவர் அதோடு நிற்கவில்லை. மறுபடியும் ராஜாஜியை நோக்கி, "அல்லது நீங்கள் ஒரு நாள் இதை அலங்கரிக்கலாம்" என்றார்.

ராஜாஜி புன்சிரிப்புப் பூத்து, "அப்படியே நிகழலாம். யார் கண்டது?" என்றார்.

இது நடந்து பதினெட்டு வருஷங்கள் கழித்து, ராஜாஜி அந்த மாளிகையை இப்போது அலங்கரிக்கப் போகிறார்.

ராஜாஜி சென்னையில் சட்ட கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த போதே, அவருக்குச் சமூகச் சீர்திருத்த ஆவல் உண்டாகிவிட்டது. அப்போது சுவாமி விவேகானந்தரை ராஜாஜி சந்தித்தார். அதிலிருந்தே ராஜாஜிக்கு இந்த ஆவல் வலுத்தது. தீண்டாமைக் கொடுமையையும் மதுபானத்தையும் நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டுமென்று அவர் உள்ளம் துடித்தது.

சேலத்தில் தம் வீட்டிலே தீரமாய்ச் சமபந்தி போஜனத்தை அநுஷ்டித்தார். அவர் சேலம் நகர சபைத் தலைவராக வந்ததும், பிராம்மணர் வசிக்கும் அக்கிரகாரங்களில் தண்ணீர்க் குழாய்களைத் திறந்து விடுவதற்கு ஹரிஜன சிப்பந்திகளை நியமித்தார். இதனால் வைதிகர்களெல்லாம் அவரைச் சீறினார்கள். ஜாதி பிரஷ்டமும் செய்தார்கள்.

கிழவரான தந்தை இதையெல்லாம் கண்டு வருத்தங் கொண்டார். "இம்மாதிரியெல்லாம் செய்யாதே. நான் செத்தால் என் சம்ஸ்காரத்தைச் செய்யக்கூடப் பிராம்மணர்கள் உதவிக்கு வரமாட்டார்களே!" என்று மகன் ராஜாஜியிடம் சொன்னார்.

"தெய்வத்துக்குப் பக்தியும் மனிதனுக்குச் சேவையும் புரிந்தால், ஊராருக்குப் பயப்பட வேண்டியதில்லை. எனக்கு வேண்டிய நண்பர்கள் இருக்கிறார்கள்; போதிய துணிவு இருக்கிறது. எந்த நெருக்கடி வந்தாலும் சமாளித்துக்கொள்ளுவேன்" என்று தந்தைக்கு ராஜாஜி சமாதானம் சொல்லிவிட்டார்.

மகாத்மா காந்தி தமது முதல் சத்தியாக்கிரக இயக்கம் சம்பந்தமாகச் சென்னைக்கு வந்தபோது, ராஜாஜி சென்னையில் பிரபல வக்கீல். ராஜாஜியின் வீட்டில்தான் காந்திஜி தங்கினார். ஆனால், இருவருக்கும் அதற்கு முன்பு பரிசயம் இல்லை. தம் வீட்டிலே காந்திஜி தங்கியிருந்தும், அவரைப் போய்ப் பார்த்துத் தொல்லை கொடுக்க ராஜாஜிக்கு இஷ்டமில்லை. யார் தம்மை உபசரிக்கும் விருந்தாளி என்பதைப்பற்றிய சிந்தனையே காந்திஜிக்கும் இல்லை. மகாதேவ தேசாய்தாம், "நாம் யார் வீட்டில் தங்கியிருக்கிறோம் தெரியுமோ? ஸி. ராஜகோபாலாசாரியார் என்ற வக்கீல் வீட்டில். அவர் அபூர்வ குணவந்தர்; சிறந்த புத்திமான்" என்று காந்திஜிக்குத் தெரிவித்தார்.

உடனே ராஜாஜிக்கு ஆள் விட்டார் மகாத்மா. அவரும் வந்தார். அப்போதுதான் இருவரும் முதல் முதலாகச் சந்தித்துப் பேசினார்கள்.

இதே காலத்தில் இன்னொரு சம்பவம் நடந்தது. தம்மை வந்து பார்த்தவர்களுக்கெல்லாம் தம் சத்தியாக்கிரகக் கொள்கைகளைப் பற்றிக் காந்திஜி விளக்கிச் சொன்னார். சில சமயம் இடையிடையே ராஜாஜியும் அருமையான உபமான உபமேயங்களைக் கூறி, நண்பர்களின் சந்தேகங்களைத் தீர்க்கலானார்.

காலஞ்சென்ற ஸ்ரீ வி. விஜயராகவாசாரியார் இப்படிப்பட்ட ஒரு சம்பாஷணையின்போது, கூட இருந்தார். ராஜாஜியின் சமாதானங்களைக் கேட்டதும், காந்திஜியைப் பார்த்து ஸ்ரீ விஜயராகவாசாரியார், "சத்தியாக்கிரகத்தைப் பற்றி நீங்கள் ஏதாவது புஸ்தகம் எழுதி, அதை இவருக்கு இரவல் கொடுத்திருக்கிறீர்களோ?" என்று கேட்டார்.

"இல்லை. இதுவரைக்கும் அப்படியொன்றும் நான் புஸ்தகம் எழுதவில்லை. மற்றவரோடு சர்ச்சை செய்வதுபோலவே, அவரோடும் ஒரு முறை சர்ச்சை செய்திருக்கிறேன். அவருக்கு நல்ல புத்திக் கூர்மை இருக்கிறது. சத்தியாக்கிரகத்தின் அடிப்படைத் தத்துவத்தையும் பலாபலன்களையும் நன்ருகக் கிரகித்துக்கொண்டிருக்கிருர். சத்தியாக்கிரகத்தின் கர்த்தாவான என்னைப்போலவே, அவரும் அதற்கு வியாக்கியானம் செய்யக்கூடிய சிறந்த பிரமாணகர்த்தா என்று நான் சிறிதும் தயக்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறேன்" என்ருர் காந்திஜி.

திருச்செங்கோட்டில் ராஜாஜி ஒரு சத்தியாக்கிரக ஆசிரமம் தொடங்கினுர். அதில் ஹரிஜனங்களும் பிராம்மணர்களும் ஒன்ருகச் சமபந்தி போஜனம் செய்தார்கள். இதைக் கண்டு ஊராரெல்லாரும் தூஷித்தார்கள். ஜனங்களின் அறியாமையும் மூட நம்பிக்கையும் மிதமிஞ்சி இருந்தன. ஆசிரமத்துக்கு நூல் கொண்டுவந்து கொடுக்க ஒரு நாள் இரண்டு நாட்டுப்புறப் பெண்கள் வந்தார்கள். அவர்கள் படிப்பறியாத பாமரர்கள். ஆசிரமவாசிகளில் ஒருவர் தலைகீழாக நின்று யோகப்பயிற்சி செய்துகொண்டிருந்தார். அந்த இரண்டு பெண்களும் இதைக் கண்டு, கிராமத்துக்குள்ளே போய் ஒரு கதையைப் பரப்பிவிட்டார்கள். "அந்தப் பிராம்மணரின் ஆசிரமத்திலே சில பயல்கள், வானத்தைப் பார்த்துக் காலை நீட்டிக்கொண்டிருக்கிருர்கள். வானத்துக்கு இதிலே கோபம் வந்துவிட்டது. அதனுல்தான் மழை பெய்யவில்லை" என்று சொன்னுர்கள்! கிராமவாசிகளின் இத்தகைய மூட நம்பிக்கைக்கு நடுவே, ராஜாஜியின் ஆசிரமம் போராடவேண்டியிருந்தது.

மகாத்மாவின் சத்தியாக்கிரக இயக்கங்களிலெல்லாம் அவருக்கு வலது கையாக விளங்கியவர் ராஜாஜி. ராஜாஜியிடம் மகாத்மாவுக்கு அளவிறந்த மதிப்பு. மகாத்மாவுக்குக்கூட ஒரு திட்டம் வகுக்க முடியாத காலங்களில் ராஜாஜியைத்தான் அவர் உதவிக்கு அழைப்பார்.

ராஜாஜி தமிழ்ப்பற்று நிறைந்தவர். பல தமிழ்ப் புஸ்தகங்கள் எழுதியுள்ளார். உபநிஷத்தையும் கீதையையும் அழகாக விளக்கியிருக்கிருர். சிறுகதைகள் எழுதியிருக்கிருர்.

அவர் துறவியைப்போல் பற்றற்று மனத்தூய்மையுடன் வாழ்பவர். 1915-ஆம் ஆண்டு மனைவியை இழந்தார். நண்பர்களெல்லாரும் அவரை மறுமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினுர்கள்.

"உங்களுக்கு ஐந்து குழந்தைகள் இருக்கிருர்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா? அதற்காக வாவது கட்டாயம் நீங்கள் மறுமணம் செய்துகொள்ளவேண்டும்" என்று அவர்கள் சொன்னுர்கள்.

"ஆமாம்; வீட்டிலே இப்போதே ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. ஆருவது குழந்தை ஒன்றையும்

கொண்டு வந்து வைத்துக்கொள்ள வேண்டுமோ?'' என்று பளிச்சென்று பதிலளித்தார் ராஜாஜி.

நம் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக (ஒருவேளை கடைசி கவர்னர் ஜெனரலும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரலுந்தானே என்னவோ), இப்போது அவர் பதவி ஏற்கப்போகிறார். ராஜாஜி பொம்மை கவர்னர் ஜெனரலாக இருக்கமாட்டார். அவர் வங்காள கவர்னர் பதவி வகித்துவரும் விதமே இதற்குச் சான்றாகும். 'அவருடைய மதியூக ராஜதந்திரத்தினால், காஷ்மீர், ஹைதராபாத் பிரச்னைகளில் ஒரு முடிவு ஏற்படும்; பாகிஸ்தான், இந்திய யூனியன் உறவு வளரும்; நாட்டுக்கு க்ஷேமம் ஏற்படும்' என்றே அரசியல் அறிஞர்களெல்லாம் எதிர்பார்க்கிறார்கள்.

அமெரிக்க விருந்து

ஜெக்கோஸ்லாவாகியா நாட்டின் அயல்நாட்டு மந்திரியாக இருந்த காலஞ் சென்ற ஜான் மஸாரிக்கை ஒரு ராஜதந்திரி சந்தித்தார். "அமெரிக்கர்கள் அளிக்கும் விருந்துகளில் அற்புதமான சாப்பாடுதான் வட்டிக்கிறார்கள். ஆனால், அதை அநுபவிக்க மட்டும் முடிவதில்லை. பக்கத்தில் உள்ள பெண்கள் என்னவாவது தொணதொணவென்று நம்மைக் கேள்வி கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்'' என்றார்.

எத்தனையோ அமெரிக்க விருந்துகளைச் சாப்பிட்டுப் பழக்கமுள்ள நிபுணர் மஸாரிக் சொன்ன பதிலாவது: "நான் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்துவிட்டேன். என் வலது பக்கம் உள்ள பெண்மணியை, 'உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதோ?' என்று கேட்பேன். அவள் 'ஆம்' என்பாள். 'குழந்தைகள் உண்டோ?' என்று கேட்பேன். அவள் 'உண்டு. இரண்டு குழந்தைகள்' என்பாள். 'பூ! இவ்வளவுதானா?' என்பேன். அவள் இத்துடன் பேச்சை நிறுத்திக்கொள்வாள்.

"அப்புறம் என் இடது பக்கம் இருப்பவளை, 'கல்யாணம் ஆகிவிட்டதோ?' என்று கேட்பேன். அவள் 'ஆம்' என்பாள். 'குழந்தைகள் உண்டோ?' என்று கேட்பேன். அவள் 'இல்லை' என்பாள். 'பூ! இவ்வளவுதானா!' என்பேன். அவள் வாயும் அடைத்துப் போகும்.

"பிறகு என் எதிரே இருக்கும் பெண்மணியை, 'கல்யாணம் ஆகிவிட்டதோ?' என்று கேட்பேன். அவள் 'இல்லை' என்பாள். 'குழந்தைகள் உண்டோ?' என்று கேட்பேன். அவளும் மௌனமாவாள். பின்பு நான் நிம்மதியாகச் சாப்பிடுவேன்."

—லியனர்ட் லயான்ஸ் (மகஸீன் டைஜெஸ்ட்).

பொருந்தும் சொல்

1. க, ச	5. ந	9. ப
2. ங,	6. த	10. வ
3. ண	7. ம	11. ல
4. ஞ, ட	8. ய	12. ர

திரட்டு

நடிகர்கள் எந்த வரியையும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லாதபடி செய்யும் ஒரு சிறு ரேடியோக் கருவி செய்திருக்கிறார்கள். ஸினிமாவில் நடிக்கும் நடிகர்கள் ஒவ்வொருவரும் அதைக் காதிலே கட்டிக்கொள்ள வேண்டியது. அவர்கள பேசவேண்டிய வாக்கியங்களைத் திரைக்குப்பின் உள்ள டைரக்டர் சொல்லிக்கொண்டேயிருப்பார். அவற்றை நடிகர்கள் அப்படியப்படியே ஒப்பிக்க வேண்டியதுதான்.

—அட்வர்டைஸிங் அண்ட் ஸெல்லிங்.

* * * *

"என்ன ஸார், திரும்பி வருகிறீர்கள்? ரெயில் தப்பிவிட்டதோ?"

"இல்லை. அதை எனக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. அதனால், அதை ஸ்டேஷனை விட்டுத் துரத்திவிட்டு வருகிறேன்."

* * * *

ஒரு சிறுமியின் தந்தை இன்புளுயென்ஸா வந்து படுத்த படுக்கையாய்க் கிடந்தார். அவர் குடித்த குவளை, தின்ற தட்டு எல்லாவற்றையும் கொதிக்கிற நீரில் போட்டுச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள் தாய்.

"அம்மா, ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று சிறுமி கேட்டாள்.

"அப்பாகிட்ட வியாதிப் பூச்சி இருக்கு. அதை எல்லாம் கொல்வதற்காகவே இப்படிக் கொதிக்கிற வெந்நீரில் இதை எல்லாம் போடுகிறேன்" என்றாள் தாய்.

சிறுமி சற்று யோசித்துப் பார்த்தாள். "ஏன் அம்மா, அப்படியானால் அப்பாவையே கொதிக்கிற வெந்நீரில் போட்டு, அத்தனை பூச்சியையும் ஒரேயடியாகக் கொன்றுவிடலாமே!" என்றாள்.

* * * *

ஒரு நண்பர், "காந்தியின் நினைவைக் குறிக்க அசோகஸ்தம்பம் போன்ற ஸ்தம்பங்கள் எழுப்பினால் என்ன?" என்று கேட்டார்.

நான் அதற்கு, "மக்களிடம் சென்று, 'உங்களுக்கு அசோக ஸ்தம்பம் தெரியுமா?' என்று கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு அசோகனின் பெயரே தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தவர் கபீர், நானக், துளசிதாஸ் ஆகியோரே. அவ்வாறே காந்திஜியும் மக்களின் உள்ளத்தை உறைவிடமாகக் கொண்டவர். அவருடைய நினைவை நிலைநிறுத்தத் தூண்கள் எதற்கு? அவருடைய கருத்துக்களைத் தாங்கிக்கொண்டு, நாம் மக்களிடையே புக வேண்டும்" என்று பதில் சொன்னேன்.

—விநோபா பாவே (கதர் மலர்)

குழந்தைகள் குறும்பு

எங்கள் வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்தால், ரெயில் பாதையின் லெவல் கிராஸிங் தெரியும். அன்று 'டெக்கன் க்வீன்' வண்டியில் மகாத்மா காந்தி வரப்போகிறார். இதுபற்றி நாங்கள் பரபரப்புடன் இருந்தோம். 'இதோ வந்தாச்சு!' 'அதோ வந்தாச்சு!' என்று ஓயாமல் பேசிக்கொண் டிருந்தோம். வண்டி வந்து நின்றது. மகாத்மாவை ஜன்னல் வழியாகத் தரிசித்தபடி கைகூப்பித் தொழுதோம். வண்டி போய்விட்டது.

மறுநாள் பத்து மணி இருக்கும். ஐந்து வயதுக் கோபு எதையோ பார்ப்பவன் போல் ஜன்னலை விட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தான். மணி $10\frac{1}{2}$ ஆயிற்று. 'டெக்கன் க்வீன்' வழக்கம்போல் கடகட வென்று ஓடியது.

சிறுவன் ஜன்னலை விட்டு இறங்கிக் கொண்டே, "அம்மா, இன்னிக்கிக்



காந்தி நிக்கல்லையே. நேரே ஓடிப்போச்சே! ஏன்?" என்று கேட்டான்.

—அலமேலு, மாடுங்கா.

*   *

சிறுவன் பாலு அவசரம் அவசரமாகத் தாத்தாவிடம் ஓடி வந்து, "தாத்தா, தாத்தா, இந்த முறுக்கைக் கொஞ்சம் வெச்சிண்டிரு; நான் விளையாடிட்டு வந்து வாங்கிக்

கறேன்" என்று சொல்லி, ஒரு முறுக்கை அவரிடம் கொடுத்தான்.

"ஏண்டா பாலு, இதை உன் அக்காளிடம் கொடுத்து வைக்கிறது தானேடா. ஏண்டா என்னை வந்து தொல்லைப் படுத்தறே?" என்றார் தாத்தா.

சிறுவன் உடனே சிறிதும் தயங்காமல், "இல்லே, தாத்தா. அவகிட்டக் கொடுக்கப் படாது. அவளுக்குப் பல் இருக்கு. அவள் தின்னுடுவ" என்றான்.

—பார்த்தசாரதி, குளித்தலை

கிருஷ்ணனும் கமலமும் புருஷன் பெண்டாட்டி விளையாட்டு விளையாடினார்கள். ஒரு செங்கல்லை எடுத்துக் குழந்தையாக வைத்துக்கொண்டார்கள். "இது நம்ம மகள்" என்றாள் கமலம். "இல்லே; இது நம்ம மகன்" என்றான் கிருஷ்ணன். வழக்கப்படி குடும்பச் சச்சரவு வலுத்தது. முடிவும் வழக்கப்படி தான். செங்கல் பெண் குழந்தை என்றே தீர்மானமாயிற்று.

"நான் கடைக்குப் போயிட்டு வர்றேன். குழந்தையைப் பதனமாப் பாத்துக்கோ" என்று சொல்லி விட்டுக் கிருஷ்ணன் வெளியே ஓடினான்.

கமலம் ஒரு துண்டுத் துணியைத் தூளி கட்டி, அதிலே குழந்தையை விட்டு, "கண்ணே உறங்குறங்கு" என்று தாலாட்டினாள். செங்கல் குழந்தை பொதீர் என்று கீழே விழுந்து இரண்டு துண்டாகப் போயிற்று.

இதற்குள் திரும்பிவந்த கிருஷ்ணன் இதைக் கண்டு, "பாத்துக்கிட்டியா! இது நம்ம மகனா இருந்தா, இப்படி உடையாமல் சமத்தா இருந்திருக்கும் இல்லியா? கேக்கமாட்டேன்னியே. பாத்துக்கோ" என்றான்.

—ச. வடிவேலு, வரதராஜபுரம்.



என் மூத்த பெண்ணின் கல்யாணம் நடந்தபோது, அடுத்த வீட்டுப் பாட்டி அயலூருக்குப் போயிருந்தாள். அவள் திரும்பி வந்ததும், "எண்டீ ஜயம், உன் பெண் லீலாவுக்குக் கல்யாணம் ஆச்சா?" என்று கேட்டாள்.

"ஆச்சு, எல்லாம் சுவாமி நடத்தி வெச்சார்" என்று நான் சொன்னேன்.

பக்கத்தில் இருந்த என் குழந்தை ஸ்ரீதரன், "அப்பான்னா அலஞ்சு அலஞ்சு வரன் தேடிக் கல்யாணத்தை நடத்தி வெச்சார், சுவாமி பேரை ஏன் இழுக்கறே, அம்மா?" என்று கேட்டான்.

"போடா, அசடு. எல்லாம் சுவாமி நடத்தி வைக்கிற படிதான் நாம் நடக்கிறோம்" என்று நான் சமாதானம் சொன்னேன்.

மறுநாள் நான் கொடுத்த இரண்டு சாக்கலேட்டை அவன் தின்று கொண்டிருந்தான். அவன் அப்பா வந்தார்.

"யார்டா சாக்கலேட் கொடுத்தா?" என்று அவர் கேட்டார்.

குழந்தை, "சுவாமி கொடுத்தார், அப்பா" என்றான்!

—ஜயலட்சுமி ஆர். சீனிவாசன், பெங்களூர்.

பொலிவிழந்த டில்லி

‘நீல்’

> உத்தியோகஸ்தர்களின் நகரம் டில்லி. அந்தக் காலத்தில் வைஸிராய் ஒரு விசேஷத்தில் கலந்துகொள்வதாக இருந்தால், எல்லோருமே பயபக்தியோடு நடந்துகொள்வார்கள். இன்று நம்முடைய பிரதம மந்திரியே விஜயம் செய்தாலுங்கூட அந்தப் பொலிவு இல்லை. ஏன் இப்படி?

எட்டு வருஷங்கள் கழித்து டில்லிக்குப் போனேன். அப்போது இருந்த டில்லியாகவா அது இப்போது இருக்கிறது? அப்பாடா! எல்லாம் எப்படித் தலைகீழாக மாறிப் போயிருக்கிறது! இன்னும் அந்தப் பழைய நாள் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

அந்தக் காலத்தில் டில்லியில் சமூக வாழ்க்கை இருந்த உன்னத நிலை என்ன? அதில்தான் என்ன தளுக்கு! என்ன சொகுசு! வெள்ளைக்காரர்களை அப்படியே காப்பியடிக்க நம்மவர்கள் பட்ட பாடு சொல்லத் தரமா! சகோதரச் சுதேசிகளோடு கலந்துவிடக் கூடாது என்பதில் நம்மவர்களுக்குத்தான் எத்தனை கவலை! குடும்ப வாழ்க்கையில் சந்திக்கும் சுதேசிகளோடு பழக நேர்ந்தபோதுகூட, அவர்கள் எப்படிப் பட்டும் படாமலும் நடந்துகொண்டார்கள்!

யாரைப் பார்த்தாலும் ஆங்கிலந்தான் பேசுவார்கள். தப்போ சரியோ, எல்லோரும் அதைப் பேசுவார்கள். அதிலும் அப்படியே ஆக்ஸ்போர்ட் உச்சரிப்போடு பேசுவதாகவே அத்தனை பேரும் பாவனை செய்வார்கள். அந்த உச்சரிப்போ அவரவருடைய சக்திக்கு ஏற்றபடி வெவ்வேறு விதமாக வெளிவரும். சிலர் சாமர்த்தியமாக அந்த உச்சரிப்பைப் பிடித்துக்கொள்வார்கள். மற்றவர்களோ பாதி வார்த்தைகளை மென்று விழுங்கித் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வார்கள். உத்தியோகஸ்தர்களின் மனைவிகளுங்கூட விடுவதில்லை; ஏதோ தங்களுக்குத் தெரிந்த இரண்டொரு வார்த்தைகளை அவர்களும் ஆங்கிலத்தில் பேசுவார்கள். இந்தக் கிஞ்சித் கைங்கரியத்தின் மூலம் தங்கள் கணவர்களின் கண்ணியத்தை அவர்கள் காப்பாற்றினார்கள். அவர்கள் பேசியது கொஞ்சமே; செய்த அபிநயமோ அதிகம். பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் என்ன கான்வென்டில் படித்தவர்களா? அவர்களுடைய நோக்கம் நல்லது. பலன் பூஜ்யமானால் என்ன? நோக்

காப்பிரைட்: தி நியூ டெமோகிராட் (ஆங்கிலம்: 14-5-’48), பம்பாய்.

கத்துக்கு உரிய மதிப்பைச் செலுத் தாமல் விடுவார்களா வெள்ளைக்கா ரர்கள்? அவர்களும் சிறிது புன் னகை பூத்து அந்தப் பெண்களைக் கௌரவிப்பார்கள்.

என்றுமே டில்லி நகரம் உத்தி யோகஸ்தர்களின் பட்டணம். அங்கே உத்தியோக ஜபர்தஸ்துகள் அதிகம். சமூக வாழ்க்கையில்கூட இந்த உத்தியோகப் 'பந்தா' வியா பித்திருந்தது. உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி பல விருந்துகள் நடத்து வார்கள். தாங்கள் அளிக்கும் விருந்தே, மற்ற எல்லா விருந்தையும் மிஞ்ச வேண்டும் என்று ஒவ்வொரு வரும் போட்டி போடுவார்கள். விருந்துகள் மகா ஆடம்பரமாக இருக்கும். அவற்றிலே பல விதமான மதவகைகள் ஆறாய்ப் பெருகும். மனத்தைக் கவரும் சித்திர விசித்திர மான தின்பண்டங்கள் மலிந்து கிடக் கும். ஏதோ பிரமாதமான காரியம் நிகழ்வதுபோல, வேலைக்காரர்கள் கூட நடந்து கொள்வார்கள். தூய உடை உடுத்துக் கம்பீரமாக அவர் கள் அங்குமிங்கும் நடமாடுவதே அலாதி அழகாக இருக்கும். விருந் தாளிகளும் நாகரிகமாக வருவார்கள். மாலை விருந்துகளுக்கு அவர்கள் வால் கோட் அணிந்துகொண்டு வரு வார்கள்; அல்லது குட்டைக் கோட் டாவது அணிந்துகொண்டுதான் வருவார்கள்.

அந்த மாதிரி சமயங்களில் வெள் ளைக்காரப் பாணியில்தான் சம்பா ஷணை நடக்கும். அன்றைச் சேதோஷ்ண ஸ்திதி, புதிதாக முளைத் திருக்கும் நிதி வசூல், சினிமா, நாட கம், சங்கீதக் கச்சேரி இப்படிப் பட்ட 'சரியான' விஷயங்களைப் பற்றித்தான் பேசுவார்கள். அரசிய லைப் பற்றிப் பேசவே மாட்டார்கள். ஆனால் யுத்த காலத்தில் மட்டும், அரசியல் பேச்சு நடக்கும்.

இப்போதோ எல்லாம் அடியோடு மாறிவிட்டது. தன் பழைய நாள் தளுக்கையும் மினுக்கையும் டில்லி இழந்துவிட்டது. அதோடு அதன் கம்பீரம் மங்கிவிட்டது. வெள்ளைக் காரரின் பிடியிலிருந்து விடுபட்ட தால் நாம் பல நன்மைகளை அடைந் தது உண்மை. ஆனால் சமூக வாழ்க் கையில் இன்றியமையாத சாதாரண சம்பிரதாயங்களையும் மரியாதைகளை யுங்கூட அதனால் நாம் விட்டுவிட வேண்டுமா? டில்லி மக்களுக்கு அந்தக் காலத்திலிருந்த விறைப்பு இப்போது இல்லை; எல்லோரும் ஒருவரோடு ஒருவர் சரளமாகப் பழகுகிறார்கள். தங்கள் கால் பாவி நிற்பது பூமியின் மேல்தான் என் பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருக் கிறார்கள். ஆனால் எதுவுமே அள வுககு மிஞ்சிப்போனால் கெடுதல்தான் விளையும்.

பழையபடியே இப்போதும் விருந்துகள் நடைபெறுகின்றன. 'புஷ் கோட்' அல்லது சாதாரண மான ஒரு ஷர்ட்டை அணிந்து கொண்டு விருந்தாளிகள் வருகிறார் கள். சில சமயம் முகக்ஷவரம் செய்து கொள்ளாமல் சிறிது தாடியும் மீசையுமாகக்கூட வந்துவிடுகி றார்கள். அது மட்டுமல்ல; நேரங் கழித்து வருவதும் சகஜமாகிவிட் டது. விருந்தளிப்பவர் எத்தனை பெரிய மனிதராக இருந்தாலும் சரி, முக்கிய விருந்தாளி எத்தனை பிர பலஸ்தராக இருந்தாலும் சரி; ஒவ் வொருவரும் தங்கள் இஷ்டப்படியே வருகிறார்கள்; போகிறார்கள். அவர் களுக்கு ஜனநாயகம் வந்துவிட் டதோ இல்லையோ, அதுதான் கார ணம்! ஆனால் எந்த நாயகத்திலும் ஒழுங்கீனத்தைச் சகிக்க முடியாது.

அந்தக் காலத்து விருந்துகளில் எவ்வளவு அமைதி நிலவும்! சம்பாஷிப்பவர்கள் ஒருவரோடு ஒருவர் காதோடு காது பேசிக்கொள்வார்கள். அவர்களுடைய குரல் வேறு யாருக்கும் கேட்காது. இப்போது எப்படித் தலைகீழாக மாறிவிட்டது! கூட்டத்தில் உள்ள அத்தனை பேர் காதிலும் விழக்கூடிய குரலில் இன்று ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். இந்தியர்களாகிய நாம் சிநேகத்தில் சிறந்தவர்கள் என்ற நமது புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. ஆனால், அதற்காக நாம் நம் நண்பர்களிடம் பழகும்போதும், மரியாதை வரம்புகளையெல்லாம் மீறிவிட வேண்டுமா? வைசிராய் சர்வாதிகாரியாக இருந்த அந்தக் காலத்தில், அவர் ஒரு விசேஷத்தில் கலந்துகொள்கிறார் என்றால், எல்லாரும் பயபக்தியாய் நடந்துகொள்வார்கள். இப்போதோ நம் சொந்தப் பிரதம மந்திரியே விஜயம் செய்தால்கூட அசட்டையாகவும் அலங்கோலமாகவும் நாம் நடந்துகொள்கிறோம்.

நாம் வெள்ளைக்காரர்களைக் காப்பியடிக்க வேண்டிய அவசியமில்லை; அவர்களுடைய மரியாதை முறைகளைப் பின்பற்றவும் தேவையில்லை. ஆனால், இந்தியர்களாகிய நமக்கென்று ஒரு கௌரவமான உடை இல்லையா? சில மரியாதை முறைகள் இல்லையா? இவற்றை நாம் மேற்கொள்ளக் கூடாதா? அதிகார பீடத்திலிருக்கும் நம் தலைவர்கள் மட்டும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு, 'விருந்தாளிகள் சிறிது மரியாதையாய் நடந்துகொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துவார்களானால், இருபத்துநாலு மணி நேரத்தில் இந்த அலங்கோலமும் அசட்டையும் மறைந்துவிடும். ஆனால், நம் தலைவர்கள், 'இதென்ன, அல்ப விஷயந்தானே!' என்று கருதுகிறார்கள். இந்த அல்ப விஷயத்தால் தான் டில்லி இன்று பொலிவு குன்றி வருகிறது.

முன்னெல்லாம் சின்ன உத்தியோகஸ்தர்கள் தங்களைக் காட்டிலும் பெரிய உத்தியோகஸ்தர்களை 'ஸார்' என்று மரியாதையாகவே அழைப்பார்கள். இப்போது அதெல்லாம் போய்விட்டது. பெரிய உத்தியோகஸ்தர்களும் சிறிய உத்தியோகஸ்தர்களும் தோள்மேல் கை போட்டுக்கொண்டு சரஸமாடுவது சர்வசாதாரணமாகிவிட்டது. பழங் காலத்துக் கிழங்களுக்கு இதைப் பார்க்கப் பார்க்க மனம் வெதும்புகிறது. ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்? கலி முற்றிப் போயிற்றே!

டில்லி பெரிதும் தன் பொலிவை இழந்துவிட்டது. அதைப்பற்றி மக்கள் சிறிதும் கவலைப்படாதது தான் இன்னும் மோசம். உயர்ந்த சம்பிரதாயங்களை இனி அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. மட்டமான விருந்து, உயர்தரமான விருந்து இரண்டுமே ஒன்றாய்த்தான் இருக்கின்றன. ஆகவே விருந்தை எப்படி நடத்தினால் என்ன என்ற அசட்டை உண்டாகிவிட்டது.

ஏற்கனவே டில்லி இருந்த நிலையை அறிந்தவர்கள், 'இதெல்லாம் ஒரு விதமாய்ச் சீர்பட்டுவிடும். டில்லி பழைய பொலிவைத் திரும்பப் பெறும். மக்கள் ஒருவரிடம் ஒருவர் மரியாதையாக நடந்துகொள்வார்கள்; கண்ணியக்குறைவாகவோ அநாகரிகமாகவோ நடந்துகொள்ள மாட்டார்கள்' என்றே இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அவளை நாம் பொறுமைப் பிண்டமென்று சொல்லுகிறோம்; மகா பதிவிரதை என்று பேசுகிறோம். ஆனால் மகாபாரதத்திலே காணப்படும் உண்மையான காந்தாரி இதோ இருக்கிறாள்.

காந்தாரி

சந்திரபலி திரிபாடி

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இமயமலையின் சிகரத்தில் இடைவிடாமல் எழும் வேதக்குரல் வானத்திலே எதிரொலித்தது. மகரிஷி வேதவியாசர் தம்முடைய பிரதான சிஷ்யர்களுக்கு வேதரகசியத்தை அறிவித்து, வேதத்தைப் பரப்புவதற்காக அவர்களை ஆசிரமத்திலிருந்து அனுப்பினார். சிஷ்யர்களின் பிரிவைத் தாங்காமல் அவர் ஒரு கணம் தியானத்திலே ஆழ்ந்திருந்தார். அதே சமயத்தில் நாரதர் அங்கே போய்ச் சேர்ந்தார். வியாசரைக் கண்டதுமே அவர் கேட்ட முதல் கேள்வி, "ஸ்வாமி, ஏன் பிரம்மகோஷம் கேட்கவில்லை?" என்பதுதான். ஒரு கணம் வேதக்குரல் நின்றது, நாரதருக்குப் பொறுக்கவில்லை.

அந்தக் காலத்திலே ஆப்கானிஸ்தானத்தின் பெரும்பகுதி மகாராஜா சுபலனுடைய ஆளுகையில் இருந்தது. காந்தாரம் அவனுடைய ராஜதானி.

சுபலனுடைய பெண் காந்தாரி, பேரழகி; நன்னெறியில் மிகுந்த பற்றுடையவள். பீஷ்ம பிதாமகருக்கு அவளுடைய கீர்த்தி எட்டியது. அவளைத் திருதராஷ்டிரனுக்கு மணஞ் செய்விக்கவேண்டுமென்று அவர் சுபலனுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தன் புதல்வியின் ஒப்பற்ற அழகையும் திருதராஷ்டிரனின் பிறவிக் குருட்டையும் எண்ணிப் பார்த்த போது சுபலனுடைய மனம் கலங்கியது. ஆனால் குருவம்சத்தின் மேன்மையும் அளவிலாப் புகழும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. ஹஸ்தினபுரமும் காந்தாரமும் இணைவதை அவன் விரும்பினான்.

சிறு பிராயத்திலிருந்தே சிவபிரானை வழிபட்டுத் தூய உள்ளம் வாய்ந்த காந்தாரி, திருதராஷ்டிரனுக்குத் தான் வாழ்க்கைப்படப் போவதை அறிந்தாள். பார்வதியின் புண்ணிய சரிதமும் பதிபக்தியும் அவள் நெஞ்சிலே ஊறியிருந்தன. 'என் கணவன் பார்வையில்லாமலிருக்க, நான் அழகியாக அரண்மனையிலே நடமாடுவதா?' என்று அவள் நினைத்தாள். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அதற்கு முன்பே அவள், ஒரு பட்டுத் துணியைப் பட்டையாக மடித்துத் தன் கண்ணைக் கட்டிக்கொண்டாள். விதி அவள் கணவனைக் குருடனாக்கியிருந்தது; அவள் தன்னைத் தானே குருடியாக்கிக்கொண்டாள்.

ஹஸ்தினபுரத்துக்குச் சென்றதும், மகாத்மா விதுரருடைய பேச்சை அவள் சவனத்தோடு கேட்டுவந்தாள். மகரிஷி வியாசர் அடிக்கடி ஹஸ்தினபுரத்துக்கு

காப்பிரைட்: ஸரஸ்வதி (ஹிந்தி: மே '48), அலாஹாபாத்.

வந்து உபதேசம் செய்வார். காந்தாரி ஏற்கனவே அறிவாளி; இந்தப் பெரியோர்களின் அறிமுகத்தினல் அவளுடைய அறிவு மேலும்மேலும் வளர்ந்தது.

சில காலத்துக்குப் பிறகு அவள் துரியோதனன், துச்சாஸனன் முதலிய நூறு பிள்ளைகளுக்கும், துச்சலை என்ற பெண்ணுக்கும் தாயானள். துரியோதனனிடம் அவளுக்கு இயல்பான தாயன்பு இருந்த போதிலும், சிறுபருவத்திலிருந்தே அவன் பாண்டவர்களுக்கு இழைத்த கொடுமைகளை அவள் கவனித்து வந்தாள். இந்தக் கொடுமைகள் வளர வளர அவள் நெஞ்சம் பெரிதும் புண்பட்டது.

ராஜசூய யாகத்திலே பல நாட்டு மன்னர்களும் இந்திரப்பிரஸ்தத்துக்கு வந்து, யுதிஷ்டிரனைச் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்ட பெருமையைக் கண்டதும், துரியோதனனுடைய பொருமை கொழுந்துவிட்டு எரிந்தது. மாயச் சூதினல் அவன் யுதிஷ்டிரனுடைய அரசைப் பறிக்கச் சூழ்ச்சி செய்தான். ஹஸ்தினபுரத்தில் மாமா சகுனியின் உதவிகொண்டு அவன் யுதிஷ்டிரனைச் சூதிலே வென்றுன். பாண்டவர்கள் துரௌபதியைக்கூடத் தோற்றுர்கள். துச்சாசனன் அவளைச் சபைக்கு இழுத்துவந்த அநியாயத்தைக் காந்தாரியால் சகிக்க முடியவில்லை. கௌரவர்களுக்கு விநாசகாலம் வந்துவிட்டது என்பதை அவள் தெரிந்துகொண்டாள். "மாமா சகுனியை உடனே இங்கிருந்து விரட்டியடி" என்று அவள் துரியோதனனிடம் சொன்னுள். "பாண்டவர்களுக்குச் செய்த அநீதிக்கு, உடனே துரௌபதியைச் சந்தோஷப்படுத்துவதுதான் பரிகாரம்" என்று தன் கணவனுக்கு அறிவுறுத்தினள்.

திருதராஷ்டிரன் பாண்டவர்களை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து, அவர்களுடைய செல்வத்தையும் அரசையும் திருப்பித் தந்தான். அவர்கள் இந்திரப்பிரஸ்தத்துக்குத் திரும்பினர்கள். அதற்குள் துச்சாசனன் துரியோதனனை ஏவ, கர்ணனும் சகுனியும் அவர்களோடு சேர்ந்துகொள்ள, நால்வருமாகத் திருதராஷ்டிரனுடைய மனத்தைக் கலைத்துப் பாண்டவர்கள் தங்கள் வைரிகள் என்பதை நம்பச் செய்தார்கள். கிழத்தந்தை மறுபடி தூதனுப்பிப் பாண்டவர்களை நடுவழியிலிருந்து வரவழைத்தான். மீண்டும் சூதாட்டம் நடந்தது; பாண்டவர்கள் தோற்றுர்கள். அவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் இருக்கவேண்டுமென்று தீர்ப்பாயிற்று. இந்தச் சதியைக் கேட்டதும் காந்தாரி மூர்ச்சையுற்று விழுந்தாள். குருவம்சத்தைக் காக்க அவள் ஆனமட்டும் முயன்றுள். "பிள்ளைகளை வசத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். துரியோதனனல்தான் முழு ராஜ்யமும் அழியப் போகிறது. அவனை நாம் துறந்துவிடவேண்டும்" என்று கணவனிடம் முட்டிக்கொண்டாள். திருதராஷ்டிரன் அவள் பேச்சைக் கேட்டிருந்தால், பயங்கரமான பாரதயுத்தம் நடந்திராது.

கண்ணபிரான் பாண்டவதூதனக ஹஸ்தினபுரத்துக்கு வந்திருந்தான். கௌரவசபையிலே அவன் கம்பீரமாகத் தர்க்கவாதத்தோடு நீதியை எடுத்துக்காட்டி அருமையான பிரசங்கம் செய்தான். இந்த உலகத்திலேயே சிறந்த பிரசங்கங்களில் அது முக்கியமான ஸ்தானம் வகிக்கிறது. கண்ணனுடைய நல்லுபதேசத்தைத் துரியோதனன்

அசட்டை செய்தான். பீஷ்மரும் விதுரரும் துரோணரும் கிருபரும் எவ்வளவோ புத்திமதி கூறியும் அவன் கேட்கவில்லை. "ஊசிமுனை யளவு நிலங்கூடப் பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன்" - இது தான் அவன் கண்ணனுக்குச் சொன்ன இறுதியான வாக்கியம். ராஜசபையை அவமதித்து அவன் வெளியே நடந்துவிட்டான்; அவனுடைய சகோதரர்களும் தோழர் களும் அவனைத் தொடர்ந்தார்கள்.

நெருக்கடியான நிலைமை. கோபத்தினால் கண்ணனுடைய கண் கள் சிவந்துபோயின. "சரி, பெரும் புரட்சியை நான் தடுக்க எண்ணி னேன். இனி அது கட்டாயம் நடந்தேதீரும்; நீ வீரகதி அடை வதும் நிச்சயம்" என்று அவன் உறுமினான். திருதராஷ்டிரன் நடு நடுங்கினான். விதுரர் காந்தாரி யைக் கூப்பிடச் சொன்னார். தாயும் தந்தையும் கலந்து சொன்னால் மகன் கேட்கலாமென்று அவர் நினைத்தார். காந்தாரி சபைக்கு வந் தாள்; மகனை அழைத்துவர உத் தரவிட்டாள். துரியோதனனுடைய கெடுமதியைப்பற்றித் திருதராஷ் டிரனோடு பேசினாள். அதற்குள் பாம்பைப்போல மூச்சு விட்டுக் கொண்டே துரியோதனன் சபை நடுவிலே வந்தான். "மகனே, பெரி யோர்கள் சொல்வதைத் தட்டிப் பேசாதே. எவனும் ஆசையினாலே அரசைப் பெற்றுவிட முடியாது. புலனடக்கமின்றி அதை எவனும் காக்கவோ அநுபவிக்கவோ முடி யாது. பாண்டவர்கள் அறிவாளி கள். அவர்களோடு நீ கலந்து வாழ் வதுதான் நல்லது. கண்ணனுடைய பேச்சைக் கேட்பதால் நமக்கு நன்மை உண்டாகும். கண்ண னுடைய முகம் மலர்ந்தால் நீயும் பாண்டவர்களும் சுகமாக வாழ்வீர் கள். போரிடுவதில் பயன் இராது. பாண்டவர்களுக்கு உரிய பாகத் தைக் கொடுத்துவிட்டு நீ சுகமாக ராஜ்ய பாரத்தை நடத்து. குந்தி பெற்ற பிள்ளைகளின் பாகத்தைப் பறிக்கும் வலிமை உங்களில் யாருக் கும் இல்லை. பீஷ்மர், துரோணர் முதலிய பெரியோர்கள் உனக்காக முழு வன்மையோடு போரிடுவார் களென்று நீ நினைக்கிறாய். முட் டாளே, அவர்கள் ஆத்மஞானிகள் என்பதை அறிந்துகொள். பேராசையை விட்டு, அமைதியை நிலைநாட்டு" என்றெல்லாம் அவள் விரிவாகத் தன் மகனுக்குப் போதித் தாள். அவளுடைய வார்த்தை நீரில் எழுதி நிலாவில் வாசித்ததுபோல ஆயிற்று.

கண்ணனுடைய வரவை எதிர் பார்த்து உபப்பிலவியத்திலே பாண் டவர்கள் கணந்தோறும் ஆவலோடு காத்திருந்தார்கள். சமாதானம் முறிந்ததை அறிந்ததும், யுதிஷ் டிரன் கண்ணபிரானை, "காந்தாரி துரியோதனனுக்கு என்ன புத்தி மதி சொன்னாள்?" என்று கேட் டான். அவளுடைய பேச்சுக்கு அவ்வளவு மகத்தவம் இருந்தது.

சண்டை வந்தது. துரியோத னன் தாயிடம் ஆசி பெறச் சென் றான். "எந்தப் பக்கம் தர்மமோ அந்தப் பக்கம் ஜயம்" என்றாள் காந் தாரி; பிறகு, "மகனே, போரில் புறங்காட்டாதே. ரணகளத்தில் வீரகதி பெற்றால் உன் கீர்த்தி அழியாது" என்று அவனைப் போருக்குத் தூண்டினாள். பாண் டவர்களுக்கு வெற்றி நிச்சயம் என் பது அவளுக்குத் தெரியும். ஒரு வீரத்தாயாக அவள் தன் மகனைப் போருக்கு அனுப்பினாள்.

சண்டை முடிந்தது. காந்தாரி யின் நூறு பிள்ளைகளும் தரையிலே

சாய்ந்தார்கள். இந்தச் சோகத்தைத் தாங்காமல் காந்தாரி சாபங் கொடுத்துப் பாண்டவர்களை எரித்துவிடுவாளோ என்று யுதிஷ்டிரருக்குப் பயம். அவள் முன்னால் போவதற்கே அவருக்குக் கால் எழும்பவில்லை. கண்ணன் காந்தாரியிடம் போனான். வியாசரும் ஏற்கனவே அங்கே இருந்தார். திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் அவர் ஆறுதல் சொல்லி அவர்களின் கோபத்தைத் தணித்திருந்தார். கண்ணன் அந்தப் பதிவிரதையின் உக்கிரமான சக்தியைப்பற்றி, "அம்மணி, நீ உன் தவவன்மையைக் கொண்டு கோபக் கண்ணினால் இந்த உலகம் முழுவதையுமே எரித்துவிட முடியும்" என்று பேசுகிறான்.

காந்தாரி நியாயம் தெரிந்தவள்; அவள் பாண்டவர்களை மன்னித்தாள். கண்ணன் பார்த்துக்கொண்டிருக்க, பீமன் தன் கதையினால் துரியோதனனைச் சூதாகக் கொன்ற செய்தி கேட்டு அவள் மனம் வருந்தினாள். தர்மயுத்தத்திலே தோற்கடித்திருந்தால் காந்தாரிக்குக் கோபம் வந்திராது. அவள் கோபம் தணிந்ததும் யுதிஷ்டிரன் அவள் காலிலே போய் விழுந்து, "அம்மா, உன் பிள்ளைகளையும் உலகத்தையும் நாசமாக்கியவன் நானே. என்னைச் சபித்துவிடு" என்றான். அவனுடைய வணக்கத்தைக் கண்டு அவள் மனம் உருகியது. ஆயினும் அவன் அவளுடைய காலிலே விழுவதற்கு முன்பு அவனுடைய கால்நகத்தில் அவள் பார்வை பட்டுவிட்டது. கோபம் தணிந்திருந்தும் அவளுடைய அந்தப் பார்வையின் தீவிர வேகத்தினால் யுதிஷ்டிரனுடைய அழகிய நகம் வெந்துபோயிற்று.

யுதிஷ்டிரன் அரசனானதும், திருதராஷ்டிரனைக் கேட்டே அரசை நடத்திவந்தான். அந்தப் புரத்திலும் குந்தி முதல் அரசப் பெண்கள் யாவரும் காந்தாரியின் கட்டளைப்படியே நடந்துவந்தார்கள். திருதராஷ்டிரனும் காந்தாரியும் பதினைந்து வருஷங்கள் யுதிஷ்டிரனோடு வசித்தார்கள். பிறகு திருதராஷ்டிரன் வானப்பிரஸ்தத்தை ஏற்றான். காந்தாரியும் அவனுடன் சென்றாள். குந்தியும் சஞ்சயனும் விதுரரும் அவர்களோடு புறப்பட்டார்கள். மரவுரியணிந்து ஹஸ்தினாபுரத்துக் கோட்டை வாசலைத் தாண்டி அவர்கள் வனவாசத்துக்குப் புறப்பட்டார்கள். குருட்டு அரசன் திருதராஷ்டிரன் காந்தாரியின் தோள்மீதும், கண்ணில் கட்டுக் கட்டிக்கொண்ட காந்தாரி குந்தியின் தோள்மேலும் கையை வைத்துக்கொண்டு போனார்கள். இமயமலையிலே கங்காதீரத்தில் அக்கினிபகவான், தகதகவென்று எரிக்கும் ஜ்வாலையினால் குந்தியையும் காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் உலகத்திலிருந்து மறைத்துவிட்டார். உடலிலே உயிர் இருந்தவரையிலும் காந்தாரியின் கண்ணிலிருந்த கட்டு நீங்கவில்லை.

உழுது விதைத்த உழவன், "மழை பெய்யாவிட்டால் என் குற்றம் ஏதுமில்லை. நான் செய்யவேண்டியதைச் செய்துவிட்டேன்" என்றே சொல்வான். மனிதன் தன்னை அவமதிக்கலாகாது.

—மகாபாரதம்.

விஷமே மருந்து

மிகப் பழங்காலத்திலேயே கிரேக்க, ரோமானிய வைத்தியர்களுக்குப் பாம்பின் விஷத்தைப்பற்றித் தெரியும். கான்ஸர் என்ற புற்றுநோய்க்கும் குஷ்டத்துக்கும் பாம்பு விஷம் மருந்தாகப் பயன்படுமென்று மய்மானிடெஸ் என்ற ஒரு ஹீப்ரு வைத்தியர் 800 வருஷங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறார். அமெரிக்காவில் முன்காலத்தில் வசித்த சிவப்பு இந்தியர்கள் பாம்பு விஷத்தை வலிப்புப் போன்ற வியாதிகளுக்கு மருந்தாக உபயோகித்துவந்தார்கள். முதல் முதலில் இங்கே குடியேறிய வெள்ளையர்கள் அதைக் கண்டார்கள்.

இன்றும் கான்ஸர் என்ற புற்றுநோய்க்கு மட்டுமன்றி வேறு நோய்களுக்கும் பாம்பு விஷம் மருந்தாகப் பயன்படும் என்று கண்டுபிடித்து உபயோகித்து வருகிறார்கள்.

'ராட்டில் ஸ்னேக்' என்ற பாம்பின் கொடிய விஷத்தைக் காக்கை வலிக்கு மருந்தாக அமெரிக்க வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். 'மொக்காஸின்' என்ற பாம்பின் விஷம் ரத்தப் போக்கைத் தடுத்து நிறுத்த உதவுகிறது. இவை எல்லாவற்றையும்விட அதிகமாக உபயோகப்படுவது நாகப் பாம்பு விஷந்தான்.

முகத்தில் ஏற்படும் நரம்பு வலிப்புக்கு மருந்தாக ஒரு டாக்டர் நாகப் பாம்பு விஷத்தை உபயோகித்தார். அதைக் கவனித்த க்ளாடி டப்ள்யூ. க்ளிப்போர்டு என்ற டாக்டருக்கும் அன்றுமுதல் அந்த விஷத்தை

★★★★★★★★★★★

பாம்பென்றால் படை நடுங்கும். ஆனால் அந்தப் பாம்பின் விஷந்தான் டாக்டர்களின் கையில் எத்தகைய அபூர்வ மருந்தாக விளங்குகிறது! இதை விவரிக்கும் இந்தக் கட்டுரை 'ஓரல் ஹைஜீன்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

★★★★★★★★★★★

மருந்தாக உபயோகிக்கும் விஷயத்தில் சிரத்தை உண்டாயிற்று. அவர் சொல்கிறார்: "என்னிடம் 80 வயதுக் கிழவர் ஒருவர் வைத்தியத்துக்கு வந்தார். அவருடைய பற்களை எல்லாம் கொஞ்ச நாளைக்குமுன் பிடுங்கிவிட்டார்கள். அதற்குச் சில நாளைக்குப் பிறகு அவருடைய மேல்தாடையில் ஒரு வகைக் குத்துவலி தோன்றியது. ஏதாவது சாப்பிடும் பொழுதோ, பேசும்பொழுதோ இது மிகவும் அதிகமாகிவிடும். அவருக்கு ரத்தக் கொதிப்பு மிகவும் அதிகமாக இருந்தது. உடலில் இருக்க வேண்டிய உஷ்ணம் ஒரு டிகிரி குறைந்திருந்தது. அந்த நோயாளிக்கு நாகப் பாம்பு விஷத்தை இன்ஜெக்ஷன் செய்தேன். தினம் ஒன்றுக்கு ஒரு க்யூபிக் ஸென்டிமீடர் வீதம் செய்தேன். பிறகு ஒருநாள் இடைவிட்டு இரண்டு இன்ஜெக்ஷன் செய்தேன். முதல் மூன்று இன்ஜெக்ஷனி

லேயே அவர் வலி போய்விட்டது. ரத்தக்கொதிப்பும் 180-யூனிட்டுக்கு இறங்கிவிட்டது.

"11 மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் அந்தக் கிழவர் என்னிடம் ஆம்புலன்ஸில் வந்தார். இந்த முறை அவருடைய வலி கீழ்த் தாடையில் தோன்றியிருந்தது. நாகப்பாம்பு விஷ இன்ஜெக்ஷனே திரும்பவும் கொடுத்தேன். சில நாளில் மொத்தம் 6 க்யூபிக் ஸென்டிமீடர் விஷம் இன்ஜெக்ஷன் செய்தேன். அவர் குணமடைந்து வீட்டுக்குப் போய் விட்டார்."

ஒரு பெண் நோயாளிக்கு முகத்தில் ஏற்பட்ட கடுமையான நரம்பு வலிக்கு இன்னொரு டாக்டர் சிகிச்சை செய்தார். முகத்தின் வலது பக்கம் முழுவதும் இந்த வலி இருந்தது. நாகப்பாம்பு விஷ இன்ஜெக்ஷன் மூன்று கொடுத்தவுடன் அவள் குணமடைந்தாள். ரத்தக் கொதிப்பும் 220-இலிருந்து 180-யூனிட்டுக்கு இறங்கிவிட்டது.

பொறுக்க முடியாத வலியைப் போக்க இப்போது நாகப்பாம்பு விஷம் மருந்தாகப் பயன்பட்டுவருகிறது. பல் டாக்டர்களும், கான்ஸர்போன்ற வியாதிக்குச் சிகிச்சை செய்யும் டாக்டர்களும் இதை இன்று மருந்தாக உபயோகிக்கிறார்கள். வலியை மறக்கடிக்க 'மார்பியா' போன்ற மருந்துகளைவிட இந்த விஷம் பலவகையில் சிறந்தது. அவற்றைப் போல் இது உடம்பில் ஜரித்துப் போவதில்லை. ஜரித்துப் போகும் மருந்துகளைத்தான் தடவைக்குத் தடவை அதிகமாக உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். மார்பியா கொடுப்பதனுல் ஏற்படுவது போல, கண் விழிகளில் மாறுதல் ஒன்றும் இந்த விஷ மருந்தினுல் உண்டாவதில்லை; மனத்தில் பல வகையான கிலிகளும் உண்டாவதில்லை. இந்த விஷ மருந்து மார்பியாவைப்போல உடனே பலன் தராவிட்டாலும் இதன் பலன் நீடித்துநிற்கிறது.

டி. ஐ. மாட் என்ற டாக்டர் மருத்துவக் கலாசாலை மாணவர்களிடையே ஒரு பரிசோதனை நடத்தினர். 20 மாணவர்களுக்கு, சாதாரண நிலையில் ஒரு மனக்கணக்குக் கொடுத்தார். பிறகு மார்பியா இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டு மறுபடி ஒரு மனக்கணக்குக் கொடுத்தார். அப்புறம் நாகப்பாம்பு விஷ இன்ஜெக்ஷன் கொடுத்து இன்னொரு மனக்கணக்குக் கொடுத்தார். இந்தப் பரீட்சையிலிருந்து மார்பியா இன்ஜெக்ஷன் மனே சக்தியைக் குறைக்கிறதென்றும், நாகப்பாம்பு விஷ இன்ஜெக்ஷன் அதை அதிகரிக்கிறதென்றும் தெரிந்தது.

கண், காது, மூக்கு இவை சம்பந்தமான வியாதிகளுக்குச் சிகிச்சை செய்யும் ஒரு நிபுணர் தம் நோயாளி ஒருவருக்குத் தொண்டைச் சதையை ஆபரேஷன் செய்தார். ஆபரேஷன் முடிந்து வெகு நேரமாகியும் ரத்தப்போக்கு நிற்கவில்லை. என்ன மருந்தெல்லாமோ கொடுத்தும் பயனில்லை. அவர் கடைசியில் அலுத்துப் போய், 'போத்ராபிக்' என்ற ஒரு பாம்பு விஷத்தை நோயாளிக்கு இன்ஜெக்ஷன் செய்தார். 15 நிமிஷத்தில் ரத்தப் போக்கு நின்றுவிட்டது.

பல்லைப் பிடுங்கிய பிறகும் ரத்தப் போக்கு உண்டாகும். பல் பிடுங்கிய குழியில் பாம்புவிஷத்தை ஊற்றி நிரப்பினுல் ரத்தப்போக்கு உடனே நின்றுவிடுகிறது. ஆனுல் ரத்தப் போக்குக் கடுமையாக இருந்தால், விஷத்தை உடம்பில் இன்ஜெக்ஷன்

கள், கனேரித் தீவுகளில் இது நிறையப் பயிராகிறது. இங்கிருந்துதான் கி.பி. 1516-இல் இதை அமெரிக்காவுக்குக் கொண்டுபோனூர்கள்.

பழத்துக்காகப் பயிரிடும் மரம், காய்க்காகப் பயிரிடும் மரம் என்று வாழையில் இரண்டு வகை உண்டு. காய்க்காகப் பயிரிடும் வாழை நமது மொந்தனைப் போன்றது. இதற்குச் செழிப்பான நிலம் தேவையில்லை.

என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா வாழையைப் பற்றி இவ்வாறு சொல்கிறது: "உலகத்தில் பலவிதப் பழங்களும் விளையும் விஸ்தீர்ணம் 18 லக்ஷம் ஏகராக்கள் என்று கணக்கெடுத்திருக்கிறூர்கள். இதில் நூற்றுக்கு 60 பங்கில் மாம்பழமும், 21 பங்கில் வாழையும் பயிராகின்றன. மீதியில் ஆரெஞ்சு, நாரத்தை முதலிய பிற பழங்கள் விளைகின்றன.

"இந்தியப் பழங்களுக்குள் எல்லோரும் வாங்கிச் சாப்பிடக் கூடியவை வாழைப்பழமும் மாம்பழமுந்தாம். இந்தியாவிலும், மலேயாவிலும் பல பகுதிகளில் வாழைப் பழத்தையும் காயையும் ஒரு முக்கிய உணவாகக் கொள்ளுகிறூர்கள். நேந்திரம் பழம் என்ற ஒருவகைப் பழத்தை வேகவைத்துத்தான் சாப்பிடுவார்கள். ஓர் ஏகராவில் பயிராகும் வாழை அதே விஸ்தீரணத்தில் பயிராகும் வேறு எந்த உணவுப் பயிரையும்விட அதிகமான மக்களின் பசியைத் தீர்க்கும். ஒரு வகை வாழைப் பழத்தை நறுக்கி உலர்த்தி மாவாக்கி வெகு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

"வாழைப் பழம் மருந்தாகவும் உபயோகப்படுகிறது. வாழைக்காய் குளுமை தருகிறது. வெடிப்புப் புண்களையும் நெருப்புச் சுட்ட புண்களையும் சுற்றிக் கட்ட வாழையிலைக் குருத்துக்கள் உதவும். வாழையின் வேரும் அடி மரமும் 'டானிக்'காக உதவும்; ரத்த சோகையையும் மேக ரோகத்தையும் குணப்படுத்தும்.

"ஆங்கிலேயர்கள் சாப்பிடும் பழங்களில் வாழைப்பழம் மூன்ருவது இடம் வகிக்கிறது. முதல் இடம் ஆப்பிளுக்கு; இரண்டாவது இடம் ஆரெஞ்சுக்கு. வருஷம் ஒன்றுக்கு ஒவ்வோர் ஆங்கிலேயரும் சுமார் 15·2 ராத்தல் வாழைப் பழம் தின்கிறூர். இந்த வாழைப் பழம் முழுவதும் பிற நாடுகளிலிருந்தே இங்கிலாந்துக்கு வருகிறது."

வாழை நல்ல பலன் தர வேண்டுமானல் அதற்கு நல்ல எரு வேண்டும். கொட்டைப் பிண்ணுக்கு நல்ல எரு. கன்றை நட்ட ஒரு மாதத்துக்குப் பின்பும், இரண்டு மாதத்துக்குப் பின்பும், மூன்று மாதத்துக்குப்பின்பும் ஒவ்வொரு முறை எருவிட வேண்டும். 10 பவுண்டு கொட்டைப் பிண்ணுக்கும், 15 பவுண்டு மீன் எருவும் கலந்த கலவை ஒரு மரத்துக்கு நல்ல எரு. 4 பவுண்டு கொட்டைப் பிண்ணுக்கு, 1 பவுண்டு ஸல்பேட்அவ் அம்மோனியா, $\frac{4}{5}$ பவுண்டு கால்ஷியம் சூபர்பாஸ்பேட் இவை கலந்த கலவை எருவும் நல்லதுதான். பிண்ணுக்கைத் துண்டு துண்டாக உடைத்து வேருக்குப் பக்கத்தில் எருவாகப் புதைப்பது நல்ல பலன் தரும் என்று இந்தியத் தோட்டக் கலை நிபுணர் உட்ரோ சொல்லுகிறூர். தழையையும் எலும்புத் தூளையும் காலமறிந்து உபயோகிப்பதும் நல்லதே.

நிலத்தில் சுண்ணும்புச் சத்துக் குறைவாக இருந்தால், வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொரு மரத்துக்கும்

8 அவுன்ஸ் சுண்ணும்பை எருவாகப் போட வேண்டும். இதை மற்ற எருவோடு கலந்து போட வேண்டும்.

வாழைப்பழத்தின் உணவுச் சத்து

	வாழைப்பழம்	மாம்பழம்
புரோடின்	0·1	0·15
கொழுப்பு	0·1	0·77
ஸ்டார்ச்	7·9	18·20
வைடமின் ஏ	+	++
வைடமின் பி	+	..
வைடமின் சி	+	+++
வைடமின் டி	+	..
வைடமின் ஈ	++	..
கால்ஸியம்	+	..
இரும்பு	+	+
பி. ஓ: 4	++	+

வாழை நாரிலிருந்து கயிறு, ட்வைன் நூல், வலே, லேஸ், பை, பாய், ஜமக்காளம், கைக்குட்டை முதலியவை செய்கிருர்கள். முரட்டு நாரிலிருந்து காகிதம் செய்கிருர்கள். பார்சல் கட்டக் கழிவு நார் உதவுகிறது.

வாழைப் பழத்திலிருந்து எஸ்ஸென்ஸ், அத்தர், சாராயம் முதலியவை இறக்குகிருர்கள்; ஜாம், ஜெல்லி முதலியவையும் செய்கிருர்கள்.

காய்ந்த வாழைப் பட்டைச் சாம்பலைக் கொண்டு, வாஷிங் சோடாவைப்போல், துணிகளை வெள்ளாவி வைக்கலாம். பல வட இந்தியக் கிராமங்களில் இதை இப்படி உபயோகிக்கிருர்கள்.

"வாழைமரச் சாம்பல், முறித்த பால் (whey) இந்த இரண்டையும் கலந்து ஒரு நாள் வைத்திருந்து, இந்தக் கலவையை ஒரு பட்டாக் கத்தியில் பூசி ஊற வைத்தால், கத்தி உறுதியாகிவிடும். வேறு கத்தியால் அடிபட்டாலும் இது உடையாது" என்று பிருகத்ஸம்ஹிதை சொல்லுகிறது. டமாஸ்கஸ் கத்திகள் என்று சரித்திரப் பிரசித்தி பெற்ற கத்திகள் இந்திய எஃகினல் இந்தியாவில் செய்தவை.

வாழை பயிர் செய்யும் முறைகளும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் பல தொழில்களும் முன் காலம்போலப் புத்துயிர் பெறுமானல், நம் உணவுப் பஞ்சம் ஒழிவதோடு, பிரமாதமான தொழில் விருத்தியும் ஏற்படும்.

ஈயும் மாம்பழமும்

சென்னையில் பெரும் புலவராக இருந்த இராமாநுஜ கவிராயரும் பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரும் ஒரு முறை சந்தித்தார்கள். கவிராயருடைய பெயரை அப்போது மாம்பழக் கவி விசாரித்தார். "இராமாநுஜ கவிராயர்" என்று சொன்ன போது, முதலில் உள்ள இகரத்தை அழுத்தமாகச் சொன்னர்.

காதில் அது ஏதோ மாதிரி விழவே, "இந்த ஈ எங்கே வந்தது?" என்று கேட்டார் மாம்பழக் கவி.

"மாம்பழம் இருப்பதால் வந்தது" என்று உடனே விடையளித்தார் கவிராயர்.

இந்திய சுதந்தரத்துக்காக மகா தீரச்செயல்கள் புரிந்து உயிர் துறந்த வாலிபர் எண்ணற்றவர். அவர்களிலே பகத்சிங்—

மறக்க முடியாத வீரர்

பிராணநாத் மேதா

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தொன்றாம் வருஷம் மார்ச் மாதம் இருபத்து மூன்றாம் தேதி! இந்திய சுதந்தரப் போராட்டச் சரித்திரத்தில் இந்தத் தேதி ஒரு முக்கியமான கட்டம். இன்று தான் பஞ்சாப் புரட்சிக்காரரான பகத்சிங்கும் அவருடைய தோழர்களான ராஜகுருவும் சுகதேவும் தூக்குமேடையில் உயிர்நீத்தார்கள். ‘புரட்சி நீடூழி வாழ்க!’ ‘ஏகாதிபத்தியும் ஒழிக!’ என்று கடைசி நிமிஷம் வரைக்கும் இந்த மூவரும் முழங்கினார்கள்.

அந்த நாளை நான் என்றும் மறக்க முடியாது. ஏனென்றால் கொலைத் தண்டனை நிறைவேற இரண்டு மணி நேரம் இருக்கும்போது, பகத்சிங்கைப் பார்த்துப் பேசும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. லாஹூர் சென்ட்ரல் ஜெயிலில் ஒரு சிறிய அறையில் அவரை நான் கண்டேன். அதுதான் அவர் பிறருக்கு அளித்த கடைசிப்பேட்டி. உறவினரோ சிநேகிதரோ பொது ஜனங்களோ யாராக இருந்தாலும் சரி, எவரும் பகத்சிங்கையும் அவருடைய தோழர்களையும் பார்க்க அநுமதிக்கக் கூடாது என்று சிறை அதிகாரிகள் தீர்மானித்திருந்தார்கள். ஆனால், நான் ஒருவாறு அவர்களைக் காண அநுமதி பெற்றுவிட்டேன். பகத்சிங்குக்கும் அவருடைய தோழர்களுக்கும் நான் வக்கீல் என்ற முறையில் அவர்களுடைய கடைசி விருப்பத்தைக் கேட்கச் சென்றேன்.

சிறை அறையில் சரியாக ஒரு மணி நேரம் அவர்களுடன் நான் கழித்தேன். அந்த ஒரு மணி நேரத்தை என்னால் என்றும் மறக்கமுடியாது. அதற்கு முன்பு அவர்களுடைய தனி அறைகளில் அவர்களை ஐம்பது தடவைகளுக்குமேல் போய்ப் பார்த்திருக்கிறேன். விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது அவர்கள் இருந்த சிறைகளில் அவர்களையும் அவர்களைச் சேர்ந்த பிற தோழர்களையும் பல முறை சந்தித்திருக்கிறேன். அவர்கள் உண்ணாவிரதம் செய்ததையும் கவனித்திருக்கிறேன். கோர்ட்டாரையும் மாஜிஸ்டிரேட்டுகளையும் போலீஸ் காரரையும் எதிர்த்து அவர்கள் செய்த போராட்டங்களைப் பல சமயங்களில் கவனித்திருக்கிறேன். ஆனால், அவாகள்

காப்பிரைட்: பிரீ இந்தியா (ஆங்கிலம்: 25-4-'48),
ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை.

எவ்வளவு பெரியவர்கள் என்பதையும் எவ்வளவு தைரியமுள்ளவர்கள் என்பதையும் இதற்கு முன்னெல்லாம் நான் உணர்ந்துகொள்ளவில்லை. சாவு அவர்களைச் சமீபித்துக் கொண்டிருந்தது. கடிகாரத்தின் முள் இரக்கமின்றி ஓடிக்கொண்டிருந்தது. முறைப்படி அடுத்த நாள் காலை ஆறு மணிக்குத்தான் அவர்களைத் தூக்கிலிட வேண்டும். ஆனால் நான் பார்த்துச் சென்ற உடனே அதிகாரிகள் அந்தக் காரியத்தை நடத்திவிட்டார்கள். தங்கள் வாழ்க்கையின் முடிவு சமீபித்துவிட்டது என்று அந்த மூவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் அவர்கள் மிக உற்சாகமாகவே இருந்தார்கள்.

சிங்கத்தைப்போல் அறைக்குள்ளே பகத்சிங் உலாவிக்கொண்டிருந்தார். நெட்டையான அழகான உருவம். கட்டுமஸ்தான உடல். நெற்றியில் ஒளி. இந்த லட்சணங்களோடு விளங்கிய அவர் என்னைப் பார்த்ததும், "அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்தீர்களோ?" என்று உரத்த குரலில் கேட்டார். 'லெனின் என்னும் புரட்சிக்காரர்' என்ற புத்தகம் தமக்கு வேண்டும் என்று அன்று காலையில்தான் ஜெயில் காவலாளி ஒருவன் மூலம் ரகசியமாக அவர் எனக்குச் சொல்லியனுப்பியிருந்தார். அன்று காலைப் பத்திரிகை ஒன்றில் அதைப்பற்றிய மதிப்புரையைப் படித்த அவர், தாம் இறப்பதற்கு முன்பு அந்தப் புத்தகத்தை ஒரு முறை படித்துவிட வேண்டும் என்று ஆசைகொண்டிருக்கிறார். நான் அதைக் கொண்டு வந்திருந்தேன். அவரிடம் அளித்தேன். அவர் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டார்.

இதன் பின்பு நாட்டினருக்கு அவர் சொல்ல விரும்பியதைப் பற்றி நாங்கள் பேசத் தொடங்கினோம். எனக்குப் படபடப்பாக இருந்தது. என் உடம்பு நடுங்கியது. அவர்களைத் தூக்கிலிடப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். கடைசி முறையாகவே இவர்களை நான் சந்தித்துப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதும் எனக்குத் தெரியும். அவர்களும் அதை நன்றாக உணர்வார்கள். ஆனால் அவர்கள் சிறிதும் கவலையற்றிருந்தார்கள்! தைரியத்தோடிருந்த அந்த நிலையில் அவர்கள் சாதாரண மனிதர்களாக எனக்குத் தோன்றவில்லை; தெய்வங்களாகவே காட்சி அளித்தார்கள்.

நாட்டினருக்கு ஒரு செய்தி விடுக்கவேண்டும் என்று பகத்சிங்கை நான் கேட்டுக் கொண்டேன். "ஏகாதிபத்தியம் ஒழிக! புரட்சி நீடூழி வாழ்க!" என்று உடனே தாமதமின்றி அவர் கோஷித்தார்.

"இன்றைக்கு உங்கள் மனம் எப்படி இருக்கிறது?" என்று நான் விசாரித்தேன்.

"எப்போதும் போல் குஷியாகவே இருக்கிறது" என்று அவர் பதில் சொன்னார்.

"எதிலாவது உங்களுக்கு ஆசை இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"மீண்டும் பிறந்து தாய்நாட்டுக்குச் சேவை புரிய வேண்டும் என்பதே என் ஆசை" என்று அவர் பதில் அளித்தார்.

பிறகு, இந்தப் புரட்சிக்காரர்கள் தங்களுடைய மனப்பூர்வமான நன்றியைப் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் சுபாஷ்சந்திர போஸுக்கும் தெரிவிக்கும்படி சொன்னார்கள். அந்த இரண்டு தலைவர்களுந்தாம் இவர்களுடைய வழக்கு விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டியவர்கள். மேலும் தங்களுடைய பல நண்பர்களுக்கும் தங்கள்

வாழ்த்தைத் தெரிவிக்கும் படி இவர்கள் சொன்னார்கள். மகாராஷ்டிர இளைஞரான ராஜகுரு என் கைகளைப் பிடித்துப் பலமாகக் குலுக்கி, "நாம் மறுபடியும் சந்திப்போம்" என்று திரும்பத் திரும்ப எனக்கு ஆறுதல் கூறினார். பன்னிரண்டு மாதங்களுக்குமுன் நான் தங்களுக்குக் கொடுத்திருந்த கேரம் போர்டை ஞாபகமாக ஜெயிலரிடமிருந்து வாங்கிச் செல்லும்படி சுகதேவ் என்னிடம் சொன்னார். இப்படி மகிழ்ச்சியான நிலையிலே அன்று அவர்களை நான் பிரிந்தேன்.

அடுத்த நாள் மாலையில் அரை குறையாய் எரிந்துபோன அவர்களுடைய அங்கங்களைப் பார்க்கும் துர்ப்பாக்கியந்தான் எனக்குக் கிடைத்தது. லாகூருக்கு ஐம்பது மைல் தூரத்தில் உள்ள சட்லெஜ் நதிப் படுகையில் அவர்களுடைய உடல்களை அதிகாரிகள் அவசர அவசரமாக யாருமறியாமல் எரித்துவிட்டார்கள். அங்கேயிருந்து எடுத்து வரப் பெற்ற வெந்ததும் வேகாததுமான அந்த அங்கங்களைத்தான் நான் கண்டேன்.

சிறையின் டெபுடி சூபரிண்டெண்டெண்ட் பதவியை வகித்தவர் ஒரு முஸ்லிம் சனவான். அவர் இதன்பின்பு எனக்குச் சில விஷயங்கள் கூறினார். நான் சிறையை விட்டுப் புறப்பட்டதும் பகத்சிங்கிடமும் அவருடைய தோழர்களிடமும் அதிகாரிகள் சென்றார்களாம். உடனே அவர்களைத் தூக்கு மேடைக்குக் கொண்டுபோகப் போவதாகச் சொன்னார்களாம். நான் கொடுத்த புத்தகத்தில் பகத்சிங் அப்போது தான் இரண்டு பக்கங்களைப் படித்து முடித்திருந்தாராம். பகத்சிங் மிகவும் சாவதானமான குரலில், "இதில் முதல் அத்தியாயத்தை யாவது படித்து முடிக்க எனக்கு அவகாசம் கொடுக்க மாட்டீர்களா?" என்று டெபுடி சூப்பரிண்டெண்டிடம் கேட்டாராம்.

சிறை அறையிலிருந்து கைதிகளைத் தூக்கு மேடைக்கு அழைத்துப் போகும் போது சம்பிரதாயமான பல சடங்குகள் நடைபெறும். ஆனால் இந்த மூவரும் வேண்டிக் கொண்டதன் மேல், அந்தச் சடங்குகளையெல்லாம் அதிகாரிகள் நிறுத்தி விட்டார்கள். மூவரும் தோளோடு தோள் பொருந்த நடந்துகொண்டே அடிக்கடி "புரட்சி நீடூழி வாழ்க! ஏகாதிபத்தியம் ஒழிக!" என்ற பிரசித்தமான கோஷங்களை முழங்கினார்களாம். தங்கள் வாழ்க்கைக்கு முடிவு தரப்போகும் கயிற்றுச் சுருக்கைக் கொலையாளி தங்கள் கழுத்தில் மாட்டும்படி அவர்கள் விடவில்லை. விட்டத்திலிருந்து மூன்று கயிறுகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவர்கள் தீரமாய்த் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். பகத்சிங் நடுவில் அமர்ந்தார். ஆவலுடன் அந்தக் கயிறுகளை முத்தமிட்டுவிட்டுத் தாங்களே தங்கள் கழுத்தில் அவற்றை அவர்கள் மாட்டிக்கொண்டார்கள். பிறகு கொலையாளியைக் கூப்பிட்டுக் கயிற்றுச் சுருக்கைச் சரிப்படுத்தும் படி சொன்னார்கள். "புரட்சி நீடூழி வாழ்க!" என்று கடைசி முறையாக அவர்கள் கோஷித்துக்கொண்டிருக்கையிலே, ஒரே நிமிஷத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. காலின் கீழ் இருந்த பலகை படக்கென்று விழுந்தது. பல வருஷங்களாக நாட்டினருக்குப் பரவசமூட்டி வந்த அந்தக் கோஷத்தைக் கயிறு அடக்கிவிட்டது.

ஆனாலும் அவர்கள் சாகவில்லை. அவர்கள் இன்னும் வாழ்கிறார்கள். எக்காலத்திலும் நசுக்கப்பட்ட ஜனங்களுக்கு ஊக்கம் ஊட்டும் வீரர்

களாக அவர்கள் என்றென்றும் வாழ்வார்கள்.

பகத்சிங்கும் அவருடைய தோழர்களும் தூக்கிலிடப் படுவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் காந்தி-இர்வின் ஒப்பந்தம் தயாராகிக் கொண்டிருந்தது. அவர்களுடைய மரணதண்டனையைத் தீவாந்தர சிட்சையாக மாற்றிவிட வேண்டும் என்று காங்கிரஸ் சார்பில் ஒரு கோரிக்கை இருந்து வந்தது. அந்த மூவரும் மன்னிப்பு மனுப் போட்டால் ஒருகால் மரண தண்டனை மாறினாலும் மாறலாமென்று டில்லியிலிருந்து சில நண்பர்கள் லாகூருக்குச் சொல்லி யனுப்பினார்கள். அவர்களுடைய இயல்பை நான் நன்றாய் அறிந்தவன். அப்படியிருந்தும் இந்த யோசனையை அவர்களுக்குத் தெரிவிக்க நான் சென்றேன். அது கொஞ்சம் துணிச்சலான காரியந்தான்.

நான் போனேன். "நாட்டின் நலத்துக்காக நீங்கள் வாழ வேண்டும். உங்கள் மனத்துக்குப் பிடிக்காவிட்டாலுங்கூட, மன்னிப்பு மனுவில் நீங்கள் கையெழுத்துப் போடத்தான் வேண்டும்" என்று அவர்களிடம் மன்றாடினேன். அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். என்னையும் இந்த யோசனையை மேற்கொண்ட தலைவர்களையும் பரிகாசம் செய்தார்கள். திடீரென்று பகத் சிங் என்ன நினைத்தாரோ, அந்த விண்ணப்பத்தில் கையெழுத்திடுவதாகச் சொன்னார். அதைக் கேட்டு எனக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவருடைய தோழர்கள் இருவருங்கூட என்னைப் போலவே பிரமித்துப் போனார்கள். பகத்சிங்கை அவர்கள் ஒரு போதும் தட்டிப் பேசமாட்டார்கள். "விண்ணப்பத்தை நாளைக் காலையில் கொண்டு வாருங்கள்; மூன்று பேரும் கையெழுத்துப் போடுகிறோம்" என்று பகத்சிங் சொன்னார். ஒன்றும் புரியாதவனாக நான் திரும்பினேன். லாகூரி லிருந்த சட்ட நிபுணர்கள் இரவோடு இரவாக மன்னிப்பு மனுவைத் தயாரித்தார்கள்.

அடுத்த நாள் காலையில்-மார்ச் 20-ஆம் தேதி என்று ஞாபகம்-நான் மறுபடியும் பகத்சிங்கின் அறையில் அந்த மூவரையும் சந்தித்தபோது, மன்னிப்பு மனுவை முன்பே தாங்கள் சமர்ப்பித்துவிட்டதாக அவர்கள் சொன்னார்கள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. கோபத்தோடு, "அந்த மனுவின் நகல் எங்கே?" என்று அவர்களைக் கேட்டேன்.

பகத்சிங் தயங்கிக்கொண்டே ஒரு மனுவின் நகலை என் கையில் தந்தார். அதில் எழுதியிருந்தது வருமாறு:

மேன்மை தங்கிய வைசிராயும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலுமான துரைக்கு,

மேன்மை தங்கிய தங்களுக்கு ஒரு மனுப் போடும்படி எங்களுடைய நண்பர்கள் எங்களைத் தொந்தரவு செய்தார்கள். நாங்கள் சரித்திரம் படித்திருக்கிறோம். தங்கள் அரசர்களை எதிர்த்துப் போர் செய்ததாகக் குற்றம் சாட்டப்பெற்ற எதிரிகளைத் தங்கள் நாட்டில் அநேகமாகச் சுட்டுக் கொல்வார்களேயொழிய, இங்கே நடப்பதுபோலத் தூக்கிலிடுவதில்லை. இதை நாங்கள் அறிவோம். தங்களிடம் நாங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் இதுவே: பிரிட்டிஷ் வீரர் அடங்கிய ஒரு படை வந்து எங்களைச் சுட்டுவிடும்படி ஒரு கட்டளை யிடுங்கள். தாங்கள் எங்களுடைய இந்தப் பணிவான விண்ணப்பத்துக்கு இரங்கி எங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களென்று

நிச்சயமாக நம்புகிறோம். இப்படிச் செய்வீர்களானால், அதற்கு நாங்கள் மாத்திரமன்றி எங்கள் நாட்டு மக்கள் அனைவருமே தங்களிடம் நன்றி பாராட்டுவோம்.

பஞ்சாபில் இருந்த ஐ. சி. எஸ். அதிகாரிகளுக்கு இந்த 'மனு' ஒரு பக்கபலமாகி விட்டது. இந்த வீரர்களின் தூக்குத் தண்டனையை மாற்றலாம் என்ற நினைவு லார்டு இர்வினுக்கு ஏற்கனவே கொஞ்சம் இருந்துவந்தது. அதைப் பஞ்சாப் ஐ. சி. எஸ். அதிகாரிகள் தாம் பலமாக எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய தூக்குத் தண்டனையை மாற்றினால் தாங்கள் எல்லாரும் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிடுவதாக அந்த அதிகாரிகள் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். தமக்கு இந்த மனுக் கிடைத்த பின்பு, அந்த ஐ. சி. எஸ். அதிகாரிகளின் விருப்பத்துக்கு இணங்குவதல்லாமல் வைஸ்ராய் இர்வினுக்கு வேறு வழி இல்லாமற் போயிற்று.

"இந்த மாதிரி மனுவை நீங்கள் ஏன் அனுப்பினீர்கள்?" என்று பகத்சிங்கை நான் கேட்டேன். அவர் புன்சிரிப்புப் பூத்த முகத்துடன், "இந்த விஷயத்தை ஓர் இறுதியான முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே நாங்கள் இப்படிச் செய்தோம்" என்றார்.

பயம் இல்லாத மனிதன் உண்டா?

மனிதர்களில் பயமில்லாதவர்களே இல்லையாம். உயரம், நாலு பக்கமும் அடைத்த அடைப்பு, தண்ணீர், கூட்டம், இருட்டு இவைபற்றிய பயம் பெரும்பாலோருக்கு இருக்கிறது. சில பேருக்கு இருக்கும் பயங்கள் விசித்திரமாகவும் அர்த்தமில்லாதவையாகவும் பிறருக்குத் தோன்றும். உதாரணமாக, சக்கரம் பத்தைக் கண்டால், ஒரு ரெயில்வே குமாஸ்தா மருள்கிறார். சித்திரவதை என்பதை நினைத்தாலே, ஒரு பெண் பயப்படுகிறாள். "நான் தூங்கும்போது, நான் மல்லாக்கத் திரும்பிவிடுவேனோ என்னவோ, அப்போது என் வாயைத் திறந்துவிடுவேனோ என்னவோ, திறந்தால் ஓர் எட்டுக்கால்பூச்சி என் வாயில் நுழைந்து விடுமோ என்னவோ! இதுதான் எனக்கு எப்போது பார்த்தாலும் பயமாக இருக்கிறது" என்று ஒரு வாலிப விமானி சொல்லுகிறார்.

—'சாண்டிக்லீர்' (டெயிலி ஹெரால்டு)

* * *

மழை பெய்ததும் நிரம்பி வழியும் ஆறுகளையும் குளங்களையும் போன்ற மனிதர்கள் உலகத்திலே ஏராளமாக இருக்கிறார்கள். பூர்ணசந்திரனைக் கண்டு பொங்கும் கடல்போல், பிறருடைய வளர்ச்சியைக் கண்டு மகிழும் புண்ணிய புருஷர்கள் அரிதாகத்தான் இருப்பார்கள்.

—துளசிதாஸர்.

பகலிலே மனிதன்; இரவிலே புலி - இப்படித் திரிகிறார்கள் சில பயங்கர மனிதர்கள்! நல்ல வேளையாக இவர்கள் இங்கே இல்லை; ஆப்பிரிக்காவில் இருக்கிறார்கள்.

புலி மனிதர்கள்

★

கைலாச நாதனாகிய சிவ பெருமான் புலித் தோலை அணிந்திருப்பார் என்று நம்முடைய புராணங்கள் சொல்லு கின்றன. தலைமாலை, புலித்தோல் இவைபோன்ற பயங்கரமான ஆபரணங்களைப் பூண்டிருந்தாலும், அவர் 'சம்-கரர்' அதாவது மங்களத் தைக் கொடுப்பவர் என்று பூஜிக்கப் படுகிறார். 'இருட்டுக் கண்டம்' என்று பெயர்பெற்ற ஆப்பிரிக்காவில் புலித்தோல் உடைக்கு அர்த்தம் வேறு. புலித்தோல் அணிபவர் என்றால், பயங்கரமான கொள்ளை, கொலை, ஏவல் ஆகியவற்றைப் புரி பவர் என்று அங்கே அர்த்தமாகும். பங்கிம்சந்திரருடைய நூல்களில் காபாலிகர்களைப் பற்றிப் படித்து அவர்களுடைய பயங்கரச் செய்தி களை அறிந்தவர்கள், ஆப்பிரிக்கா விலுள்ள புலித்தோல் மனிதர்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்று ஒருவாறு கற்பனை செய்துகொள்ள லாம்.

ஆப்பிரிக்கக் கறுப்பு மனிதர்க ளிடையில், இந்தப் புலி மனிதரைப் பற்றிய பயம் இன்று உச்சநிலையை அடைந்திருக்கிறது. அந்திநேரம் வந்துவிட்டால், கிராமத்துக் கறுப்பு மனிதர்கள் பயந்து நடுங்குகிறார்கள். வீடுகளைச் சுற்றிலும், நெருப்பை மூட்டி வெளிச்சம் உண்டாக்கிக் கொண்டு, கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சிலர் காவல் இருப்பார்கள். தாய்மார் தம் சிறு குழந்தைகளை மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டு, கண்களில் பயம் தோன்ற, ஆபத்தை எதிர்பார்த் துக்கொண்டிருப்பார்கள். நடக்கப் போவது யாருக்குத் தெரியும்? பக லில் பரமசாதுவாக இருந்த ஒரு மனிதனே இரவிலே புலியாய் மாறித் தன் குழந்தைகளையோ, தன் கணவனையோ, தன்னையோ இழுத் துக்கொண்டுபோய்த் தெய்வத்துக் குப் பலியிட்டுவிட்டால் என்ன செய் வது என்ற பயம் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் புகுந்து கொள்ளும்.

மத்திய ஆப்பிரிக்காவில் இந்தப் புலி மனிதரைப்பற்றிய புகார், எப் போதும் ஒரேமாதிரியாகவே காதில் விழுகிறது. திடீரென்று நிச்சப்த மான நள்ளிரவில் சத்தம் கேட் கிறது. ஏதோ ஒரு வீட்டில் உள்ள தலைவனையோ, மனைவியையோ, குழந்தையையோ ஒரு புலி இழுத் துக் கொண்டுபோய் ஆப்பிரிக்கா வின் பரந்த காட்டில் மறைந்துவிடு கிறது. மறுநாள் தேடினால் அந்தத் துர்ப்பாக்கியர்களின் பிணம்

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்: 26-4-'48), ஹுப்ளி.

சமீபத்தில் எங்கேயாவது விழுந்து கிடக்கும். உடம்பில் கோரப்பறகள் பதிந்த அடையாளங்களும் புலி நகங்கள் கீறிய காயங்களும் நிறைந்திருக்கும். கிராமத்துத் தைரியசாலிகள் விளக்குடன் புலியைத் தொடர்ந்தால், புலி நடக்கும் சந்தடி நின்று மனிதன் ஓடுவது போன்ற சத்தம் கேட்கும். எவனாவது ஒருவனுடைய அம்பு பட்டும் புலி தப்பித்துக் கொள்ளுவது உண்டு. ஆனல் அன்றைக்கு மறு நாள் எவனாவது ஓர் ஆள் காலில் கட்டுடன் ஊரிலே நடமாடிக்கொண்டிருப்பதை ஜனங்கள் பார்த்தால், அவனைச் சும்மா விடமாட்டார்கள். முதல் நாள் இரவில் வந்த புலி மனிதன் அவன்தான் என்று தீர்மானித்து, அவனைக் கிராமத்தார் குத்திக் கொன்று போட்டுவிடுகிறார்கள்.

யுத்தத்துக்குப் பின்பு ஆப்பிரிக்காவில் இந்தப் புலி மனிதர்கள் செய்யும் கொலைகள் அதிகரித்துவிட்டன. அதனால் சமீபகாலத்தில் அங்கே பதினெட்டு மந்திரவாதிகளை ஜெயிலில் போட்டுவிட்டார்கள். இருந்தாலும் ஆப்பிரிக்கா முழுவதும் பரவியிருக்கும் புலி மந்திரவாதிகளில் நூற்றில் ஒருவரைக்கூட ஒழித்துவிட்டதாகச் சொல்ல முடியாது. அகப்பட்ட சிலரும் சந்து கிடைத்தபோது தப்பியோடிவிடுகிறார்கள். இவர்களால் மக்கள் படும் பாடு சொல்லத்தரமன்று.

ஆப்பிரிக்கா ஏற்பட்ட காலத்திலிருந்தே இந்தப் புலி மந்திரவாதிகளும் அங்கே இருந்து வருவதாகச் சொல்லுகிறார்கள். மத்திய ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய எல்லா இடங்களிலும் இந்தப் பயங்கரக் காபாலிகர்கள் தங்களுடைய குரூரத் தொழிலை நடத்தி வருகிறார்களாம். நம் நாட்டுப் புராணகாலத்து அரக்கர்களைப் போல் இந்தக் கிராதகர்களும் வேண்டும்போது புலியாகவும் மற்றச் சமயங்களில் மனிதனாகவும் உரு மாறும் சக்தி படைத்தவர்கள் என்று ஆப்பிரிக்கர்கள் நம்புகிறார்கள். இந்தப் புலி மனிதர்களைப் புலித்தோல் போர்த்த மனிதர்கள் என்று சொல்லலாம்.

'ஜூ-ஜூ' என்ற தேவதைகளின் திருப்திக்காகவே புலி மந்திரவாதிகள் இப்படியெல்லாம் செய்கிறார்களாம். 'ஜூ - ஜூ' என்றால் நம் தேசத்துத் துர்த்தேவதைகளைப் போன்ற சில தேவதைகள். அவற்றில் சில தேவதைகள் கோழித் தலைகளைப் பெற்றுக்கொண்டு திருப்தியடைந்துவிடுகின்றனவாம்; மற்றவையோ, மனிதத் தலைகளையே விரும்புகின்றனவாம். வசீகரணம், சொத்து, மாந்திரிகம், மருந்து ஆகிய பல காரணங்களுக்காகவும் சில கொலைகள் நடக்கின்றன. சமீபத்தில் ஜெயிலுக்குப் போய்த் திரும்பிய ஒரு மந்திரவாதி ஒரு குடியானவனைக் காப்பாற்ற, மற்றொருவனைக் கொன்று மருந்து செய்ய உபயோகித்துக்கொண்டானும்.

நம் டாக்டர்களுடைய சங்கங்களைப்போல் இந்த மாந்திரிக டாக்டர்களும் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களாம். வித விதமான பூதங்களைத் திருப்திப்படுத்துவதற்காக இவர்கள் பலவிதக் கட்டண விகிதங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். 'ஹெபீஜோ' என்னும் தேவதையைத் திருப்திப்படுத்த நாற்பது பவுன் கட்டணம். யமனைப் போன்ற 'அதந்தோ'வைத் திருப்தி செய்ய நூறு பவுன் கட்டணம்!

புலி மனிதர்களின் கொலைத்

தொழில் சம்பந்தமாக ஆப்பிரிக்காவின் எல்லாப் பிரதேசங்களிலும் ரகஸ்யச் சங்கங்கள் இருக்கின்றன. புலி மனிதர், நீர்ப்புலி மனிதர் என்று அந்தச் சங்கங்களில் இரண்டு வகை உண்டு. நீர்ப்புலி மனிதர் தாங்கள் கொல்லப்போகும் ஆசாமியை நீரில் அமிழ்த்திக் கொன்று விடுவார்கள். மற்றவர் தரையிலேயே கொல்வார்கள். இந்த இரண்டு சங்கங்களின் பழக்க வழக்கங்களும் வெவ்வேறாக இருந்த போதிலும், கொலை, நரபலி, நரமாமிசபக்ஷணம் முதலிய கொடிய தொழில்கள் புரிவதில் இரண்டு சங்கங்களும் மிக்க ஒற்றுமையாகவே இருக்கின்றன. தெய்வங்களைச் சாக்கிட்டுக் கொலைசெய்வதோடு இந்தப் புலி மனிதர்கள் நிற்பதில்லை; லாபம், காதல் இவற்றை விரும்புபவர்களிடம் கூலி பெற்றும் இவர்கள் கொலை செய்கிறார்கள்.

இந்த மாந்திரிகர்களுடைய சங்கங்கள் எங்கெங்கேயோ பரவிக் கிடந்தாலும், இவர்களின் ரகஸ்யம் இன்னும் வெளியுலகத்துக்குப் புலனாகவில்லை. இவர்களுடைய சங்கக் கட்டுப்பாடு அவ்வளவு உறுதியாக இருக்கிறது. ஒரு சங்கத்தைச் சேர்ந்த ஒருவன் அகப்பட்டுக் கொண்டு தண்டனையடைந்தாலும், அந்தச் சங்கத்தின் ரகஸ்யம்பற்றிச் சிறிதும் வாயைத் திறப்பதில்லை.

இந்தப் புலி மனிதர்களின் சங்கங்களில்சேர விரும்புகிறவர்கள் பல பயங்கரமான நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட வேண்டியிருக்கிறது. நீர்ப்புலிகளின் சங்கத்தில் சேர வருகிறவனிடம் ஒரு யௌவன மங்கையையும் ஒரு சிறு பெண்ணையும் அந்தப் 'புலிகள்' கொண்டு வரச் சொல்கிறார்கள். இந்த இரண்டு பெண்களும் அபேட்சகனின் உறவினர்களாக இருக்க வேண்டும். இந்தப் பெண்களைக் கொன்று இவர்களுடைய மாமிசத்தைச் சங்கத்தின் 'நீர்ப்புலி' மனிதர்கள் தின்று விடுவார்கள். இந்த வழக்கம் இன்றும் நடைபெற்று வருகிறது. ஆனால் இறந்த பெண்களின் இருதயத்தை எடுத்து விசேஷமான தெய்வமாக வைத்து அந்தப் புலி மனிதர்கள் போற்றிக் காப்பாற்றுகிறார்கள்.

எப்படி எழுதுவது?

"விகடமாக எப்படி எழுதுவது?" என்று ஒரு பிரபல விகட எழுத்தாளரை யாரோ ஒருவன் கேட்டான்.

அந்த ஆசிரியர் எழுதிய பதில் வருமாறு: "விகடமாக எழுதுவது அப்படி ஒன்றும் கஷ்டமே இல்லை. ஒரு பேனாவை எடுத்துக்கொள்ள வேண்டும். உட்கார்ந்துகொள்ள வேண்டும். உங்கள் மனத்திலே தோன்றுவதை அப்படியே எழுத வேண்டும். இவ்வளவுதான். எழுதுவதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால், மனத்திலே விஷயம் தோன்ற வேண்டுமே, அது தோன்றுவதுதான் கஷ்டம்."

—டாட்லர் (பைஸ்டாண்டர்.)

* * *

கணவனே மனைவியின் முதல் குழந்தை.

—ஐ. பானின்.

கீதைக்கு அரிய பாஷ்யம் எழுதிய மகான்களில் ஒருவரான ராகவேந்திர ஸரஸ்வதிகள் அடக்கமான பிருந்தாவனம் இருப்பது இந்தப் புண்ணிய ஸ்தலந்தான்.

மகிமையுள்ள மந்திராலயம்

வை. விட்டல்ராவ்

ஹைதராபாத் சம்ஸ்தானத்துக்கும் சென்னை மாகாணத்துக்கும் எல்லையாக இருக்கும் பல ஊர்கள், இன்று குண்டர்களின் கலகத்துக்கும் படையெடுப்புக்கும் இலக்காகியிருக்கின்றன. இந்த மாதிரிப் பயத்துக்குக் காரணமான எல்லையிலேயே மந்திராலயம் என்ற கிராமம் இருக்கிறது. எல்லையில் தகுந்த பந்தோபஸ்துச் செய்வதாக அரசாங்கத்தார் வாக்களித்திருக்கிறபடியால், கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கிறோம். மந்திராலயம் வாஸ்தவமாக மகிமையுள்ள ஒரு ஸ்தலம்.

மந்திராலயம் என்ற கிராமத்தின் பழைய பெயர் மஞ்சாலி. இது துங்கபத்திரா நதிக் கரையில் அமைந்திருக்கிறது. சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் ரெயில் மார்க்கத்தில் துங்கபத்திரா ஸ்டேஷன் இருக்கிறது. இந்த ஸ்டேஷனிலிருந்து மந்திராலயம் ஒன்பது மைல் தூரத்தில் இருக்கிறது. துங்கபத்திரா ஸ்டேஷனுக்கு முன்னாலேயே ஆதோனி என்னும் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கேயிருந்து மந்திராலயம் முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கே இறங்கினால் பஸ்ஸில் போகலாம். துங்கபத்திரா ஸ்டேஷனில் இறங்கினால் இரட்டை மாட்டு வண்டியில் போக வேண்டும்.

மந்திராலயம் மாத்வ மதத்தினருக்கு விசேஷமான புண்ணிய க்ஷேத்திரம். மாத்வ மதாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீராகவேந்திர ஸரஸ்வதிகள் இந்தப் பிரதேசத்தில் வித்தியடைந்திருக்கிறார். விரோதி கிருது ஆவணி மாதம் கிருஷ்ண பக்ஷ த்விதியை திதியில் பிருந்தாவனத்தில் இந்த மகான் சமாதியடைந்தார். இன்றைக்கு இவருடைய மகிமை எங்கும் பரவிவிட்டது. மாத்வ மதத்தினர் மாத்திரம் அல்லாமல் மற்ற மதத்தினரும் பலர் இந்தப் பிருந்தாவனத்தைத் தரிசித்து, இங்கே ஆசாரியருக்குச் சேவை செய்து தம் கோரிக்கைகள் நிறைவேறப்பெற்றுத் திரும்புகிறார்கள். இங்கே சேவைசெய்து, கவலை, நோய் முதலிய பீடைகளிலிருந்து விடுபட்டவருக்குக் கணக்கில்லை. ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளைப் பக்தர்கள் 33 சுலோகங்களால் துதிப்பார்கள். அதில் சிறந்த சுலோகம் இதுதான்:

> பூஜ்யாய ராகவேந்த்ராய
> ஸத்யதர்மரதாய ச |
> பஜதாம் கல்பவ்ருக்ஷாய
> நமதாம் காமதேனவே ||

இந்தச் சுலோகத்தை எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

மந்திராலயத்தில் ஸ்வாமிகளின் மடம் இருக்கும் பூமியை இனமாக யாரோ முன் காலத்தில்

காப்பிரைட்: ஆனந்தவாணி (தெலுங்கு: 21-3-'48),
12, தம்பு செட்டி தெரு, சென்னை.

மடத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள். வெகு காலத்துக்குப் பின் இந்த இனும் பூமியை மதராஸ் கவர்ன ராக இருந்த ஸர் தாமஸ் மன்ரோ அறிய வந்தார். இதை நேரில் பார்வையிட்டுச் சென்னை அரசாங்கத்தோடு இந்த இனும் பூமியைச் சேர்த்துவிடவேண்டும் என்று அவர் நினைத்தார். உடனே புறப்பட்டு இங்கே வந்து மந்திராலயத்துக்குப் பக்கத்திலே தங்கினார். பிருந்தாவனத்தின் அர்ச்சகருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளைத் தியானித்துத் துதித்து, "ஸ்வாமிகள்தாம் இதற்கு வழி காண்பிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டார்.

பிறகு, ஸ்வாமிகளே ஸர் தாமஸ் மன்ரோவுக்கு முன் பிரத்தியட்சமாகி, "இந்த இனும் பூமியைப் பிருந்தாவனத்துக்கே ஸ்திரப்படுத்தி விட வேண்டும். இந்த விவகாரத்தில் நீர் தலையிட வேண்டாம்" என்று கேட்டுக்கொள்ளும் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தாராம். அப்போது ஸ்வாமிகளை மன்ரோ, "நீர் யார்?" என்று கேட்டார். ஸ்வாமிகள் அதற்குப் பதில் சொல்லாமல், மன்ரோ பார்த்துக் கொண்டிருந்தபோதே தமது பிருந்தாவனத்துக்குள் இறங்கி விட்டார்! இந்த அதிசயத்தைக் கண்ட மன்ரோ தம் கண்களையே நம்பாமல் தம் குமாஸ்தாக்களையும் வேலைக்காரர்களையும் கூப்பிட்டு, "இப்போது வந்தவர் யார்? எங்கே போனார்?" என்று விசாரித்தார். அவர்கள், "நாங்கள் அந்தச் சந்நியாசியைப் பார்க்கவேயில்லை. அப்படி வந்தவர் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளாகத்தான் இருக்க வேண்டும்; எங்களுக்கெல்லாம் கிட்டாத அவருடைய தரிசனம் உங்களுக்கு எதிர்பாராமல் கிடைத்து விட்டது" என்று சொன்னார்கள். மன்ரோ அந்தச் சம்பவத்தை நினைத்து வியந்து, இனும் பூமியைப் பிருந்தாவனத்துக்கே ஸ்திரப்படுத்திவிட்டுப் போய்விட்டாராம். இந்தச் செய்தி இப்போதும் பெல்லாரி ஜில்லா கெஜட்டிரில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ஸ்வாமிகளின் பூர்வாசிரமப் பெயர் வேங்கடபட்டர். தாய் தந்தையருக்கு ஸ்ரீவேங்கடேசுவரரின் பிரசாதமாகப் பிறந்த மூன்றாவது குழந்தை. முறைப்படி உபநயனம் நடந்தபின்பு கொஞ்ச காலத்தில் ஸரஸ்வதிபாய் என்னும் பெண்ணைச் சுவாமிகள் கல்யாணம் செய்து கொண்டார். சில காலம் குடும்பத்தில் இருந்தார். பிறகு சோழ தேசத்தில் இருந்த ஸுதீந்திர ஸ்வாமிகளைக் குருவாக அடைந்து அவரிடம் கல்வி கற்றார். வேதாந்த பாஷ்யங்கள், சப்தசாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலியவற்றை ஆராய்ந்தார். குருவுக்கு மற்றச் சிஷ்யர்களைவிட இவரிடம் அன்பு அதிகம். ஒரு நாள் பாடம் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் குரு தமக்குச் சந்தேகம் வந்த இடத்தில் நிறுத்திவிட்டார். அன்றிரவு எல்லோரும் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில், சந்தேகம் வந்த வாக்கியத்துக்கு வேங்கடபட்டர் பொருள் எழுதிவைத்து விட்டுப் படுத்துக்கொண்டார். குரு வந்து புஸ்தகத்தைப் பார்த்து, ஆச்சரியமடைந்து, தம் பட்டுவஸ்திரத்தை எடுத்து வேங்கடபட்டருக்குப் போர்த்துவிட்டுப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார். விடியற்காலையில் எழுந்த வேங்கடபட்டர் தம் குரு என்ன சொல்வாரோ என்று பயந்துகொண்டே அவர் முன்னே போய் நின்றார். நடந்த

உண்மையைக் குரு மற்றச் சிஷ்யர்களுக்கும் தெரிவித்துப் பட்டரின் ஞானத்தைப் புகழ்ந்தார்.

குருவின் கனவில் ஸ்ரீராமசந்திர மூர்த்தி தோன்றி, "உனக்குப்பின்பு உன் பீடத்துக்கு வேங்கடபட்டரையே அதிகாரியாகச் செய்" என்று சொன்னாராம். பட்டர் முதலில் அந்தப் பதவியை ஏற்க மறுத்தார். பிறகு சரஸ்வதி தேவியே நேரில் வந்து, "நீ என்னை விருத்திக்குக் கொண்டு வர வேண்டும்" என்று இவரைக் கேட்டுக்கொண்டாளாம். இதன்மேல்தான் பட்டர் தம் சம்மதத்தைக் குருவுக்குத் தெரிவித்தார். சிஷ்யரைக் குரு தஞ்சாவூருக்கு அழைத்துப் போய் அங்கே அபிஷேகம் செய்வித்து ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் என்று அவருக்குப் பெயரும் சூட்டினர்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் மகிமைக்கு உதாரணமாகப் பல நிகழ்ச்சிகளைச் சொல்வதுண்டு. அவற்றில் ஒன்று இது: ஸ்வாமிகளின் ஜாதகத்தை மூன்று ஜோஸ்யர்கள் பார்த்தார்கள். ஒருவர், "ஸ்வாமிகளுக்கு 70 வயது" என்றார். மற்றொருவர், "300 வயது" என்றார். மூன்றாவது ஜோஸ்யர், "700 வயது" என்றார். ஸ்வாமிகளோ, "நீங்கள் மூவர் கூறியதும் உண்மையே. எனக்குப் பிரத்தியட்சமான உலக வாழ்க்கை 70 வருஷம். என் வயது என் நூல்களின் மூலம் 300 வருஷம். என் பிருந்தாவனத்தின் மூலம் 700 வருஷம்" என்று சொன்னாராம்.

மற்றொரு சமயம் பல்லக்கில் ஸ்வாமிகள் வேறொரு கிராமத்துக்குப் போனர். வழியில் பொழுது விடியும் சமயம் வந்தது. காலைக்கடனைக் கழிக்கப் பக்கத்தில் இருந்த வீட்டுக்குப் போனர். பல்லக்கைப் போயிகள் வெளியிலே இறக்கியிருந்தார்கள். பல்லக்கை இறக்கிய இடம் ஒரு பணக்கார முஸ்லிம் குழந்தையைப் புதைத்த இடம். அதன்மேல் ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று, குழந்தையின் தந்தை நினைத்துக்கொண்டிருந்தாராம். அந்த இடத்தில் பல்லக்கு இறங்கியிருப்பதைக் கண்ட அவர் கோபத்துடன் ஸ்வாமிகளிடம் வந்து புகார் செய்தார். அதைக் கேட்ட ஸ்வாமிகள், "தெரியாமல் செய்தது குற்றமாகாது. அதுவுமல்லாமல் உம் குழந்தை இறக்கவில்லை. மண்ணைத் தோண்டிப் பார்க்கலாம்" என்றார். தந்தை அப்படியே பரபரப்புடன் தோண்டிப் பார்த்தார். குழந்தை மூர்ச்சித்தது போல் கிடந்தது. பிறகு, மூர்ச்சை தெளிந்து எழுந்துவிட்டதாம். தந்தையின் சந்தோஷத்துக்கு எல்லை ஏது? ஸ்வாமிகளுக்கு நன்றி செலுத்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம்.

இவை போன்ற பல பெருமைகளும் பலருக்கு உலகக் கஷ்டங்களிலிருந்து விடுதலை கொடுக்கும் அற்புத சக்தியும் வாய்ந்த ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பிருந்தாவனம் இருக்கும் மந்திராலயம் ஒரு சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாக விளங்குவதில் ஆச்சரியமென்ன?

ஜனநாயகம் என்பது 'நான் உனக்குச் சமம்' என்பதல்ல; 'நீ எனக்குச் சமம்' என்பதே.

—மாகஸீன் டைஜெஸ்ட்



காந்தி

அவர் இருந்த விதம்: காந்தி இருளுக்கு நடுவே, ஒளியாக இருந்தார். குழப்பத்துக்கு நடுவே, விவேகமாக இருந்தார். ஏமாற்றத்துக்கு நடுவே, சத்தியமாக இருந்தார். ரணகளத்துக்கு நடுவே, சமாதானமாக இருந்தார். வேற்றுமைக்கு நடுவே, ஒற்றுமையாக இருந்தார்.

—(ட்ரெண்ட்)

* * *

தெரியாத விளையாட்டு: ஆகாகான் மாளிகையில் சிறைப்பட்டிருந்த போது, பாட்மிண்டன் பந்து விளையாடக் காந்திஜியைச் சரோஜினி நாயுடு அழைத்தார். காந்திஜி குழந்தைபோல் குதூகலத்துடன், "நான் மட்டையை ஒரு போதும் தொட்டதேயில்லை. என்றாலும், உங்களை விளையாட்டில் ஜயித்துவிடுவேன்" என்று சொல்லி, விளையாட இசைந்தார். சரோஜினி நாயுடுவுக்கு வலது கை சுளுக்கிக்கொண்டிருந்தது. ஆகவே, அவர் இடது கையில் பாட்மிண்டன் மட்டையைப் பிடித்துக்கொண்டார். காந்திஜியும் அப்படியே இடது கையில் மட்டையைப் பிடித்தார். "காந்திஜி, நீங்கள் எப்படி என்னை ஜயிக்கப்போகிறீர்கள்? மட்டையை எந்தக் கையில் பிடிப்பது என்றுகூட உங்களுக்குத் தெரியவில்லையே!" என்று கேலி செய்தார் சரோஜினி. "நீங்களும் அதை இடது கையில்தானே பிடித்திருக்கிறீர்கள்? அது ஏன்?" என்று கேட்டார் காந்திஜி. "வலது கை எனக்குச் சுளுக்கிக் கொண்டிருக்கிறது. அதனால்தான்" என்றார் சரோஜினி. "அப்படியா!" என்று சொல்லிவிட்டு, அப்புறமும் இடது கையிலேயே மட்டையைப் பிடித்துக்கொண்டு காந்திஜி விளையாடினார். இதைக் கண்டு சரோஜினி நாயுடு ஆச்சரியம் அடைந்தார். "இன்னமும் ஏன் நீங்கள் உங்கள் பிசகைத் திருத்திக்கொள்ளவில்லை?" என்று காந்திஜியை அவர் கேட்டார். "முன்னே அது பிசகு; இப்போது பிசகில்லை. ஒரு பெண்மணியின் நோயை எனக்குச் சாதகமாக்கிக் கொள்வது கேவலம். ஆகையால், அப்படிச் செய்ய எனக்கு விருப்பம் இல்லை" என்றார் காந்திஜி.

—பி. டண்டன் (ஓரியெண்ட்)

* * *

அவரை அறிவேன்: அவரை நான் அறிவேன். இதை நான் ருசுப்பிக்க முடியும். அவரை நான் அறிந்திருப்பதால்தான், அவரைச் சுட்ட மனிதனிடங்கூட என்னால் குரோதம் கொள்ள முடியவில்லை.

வாழ்வும் வாக்கும்

> நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

அவரை நான் அறிந்திருப்பதற்கு இதுவே ருசு.

—டெவெரே ஆலென்
(பம்பாய் கிரானிக்கிள்)

*   *   *

● துப்பாதே: கண்ட இடத்தில் எச்சில் துப்புவதும், குப்பை கூளங்களைப் போடுவதும், காற்றை அசுத்தம் செய்துவிடும். இப்படி அதை அசுத்தம் செய்கிறவன், மனிதனுக்கும் இயற்கைக்குமே விரோதமாகப் பாவம் இழைத்தவனாவான். மனிதனின் உடல், இறைவன் உறையும் ஆலயமாகும். அந்த ஆலயத்தில் பிரவேசிக்கும் காற்றை அசுத்தம் செய்கிறவன், அந்த ஆலயத்தையே அசுத்தம் செய்து விடுகிறான். ராமனின் திருநாமத்தை அவன் ஜபிப்பது வீணேயாகும்.

—காந்திஜி (ஹரிஜன்)

*   *   *

● சுதேசிப் பேனா: வெளுத்துப் போன நீலமசியால் காந்திஜி மங்கலான கையெழுத்துக்களைப் போட்டு விற்பனை செய்துகொண்டிருந்தார். இதைக் கண்டு மருண்டார் மற்றொரு மனிதர். "எனக்கு என் பேனாவினால் கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்" என்று சொல்லி, காந்திஜியிடம் தமது பவுண்டன் பேனாவை அவர் நீட்டினார். இந்தத் துணிச்சல்கார மனிதனைக் காந்திஜி நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. குனிந்தபடியே, "என் பேனா சுதேசிப் பேனா!" என்று சொல்லி, அவனை வாயடைத்துவிட்டார்.

—ஜி. சந்த்வாட்கர் (ரிபப்ளிக்)

*   *   *

● சுயராஜ்யத்தின் பொருள்: சுயராஜ்யம் நம்மை நாகரிகப்படுத்த வேண்டும்; தூய்மை செய்ய வேண்டும்; நமது நாகரிகத்தை நிலை பெறச் செய்யவேண்டும். இல்லையானால், அந்தச் சுயராஜ்யம் வியர்த்தமேயாகும். நம் சொந்த விவகாரங்கள், பொது விவகாரங்கள் இந்த அனைத்திலும் நாம் ஒழுக்கத்துக்குத் தலைமை ஸ்தானம் அளிக்கவேண்டும். அப்படி அளிப்பதே நம் நாகரிகத்தின் அடிப்படையாகும்.

—காந்திஜி (மகாத்மாவின் மனம்)

*   *   *

● வக்கீலின் கடமை: வக்கீலின் கடமை ஜட்ஜிகளுக்கு உண்மையைச் சொல்வதும், உண்மையை உணர்ந்துகொள்ள அவர்களுக்கு உதவிபுரிவதுமேயாகும்; குற்றவாளியை நிரபராதி என்று ஸ்தாபிதம் செய்வதல்ல.

—காந்திஜி (யங் இந்தியா.)

வானத்து அற்புதங்களிலே ஒன்று வால் நட்சத்திரம். அது உண்மையிலேயே தாரகாசுரனைப் போன்றதுதான்!

வால் நட்சத்திர அற்புதம்

கோலாறத்து ராகவன்

நீண்ட வாலும் ஒளிவீசும் தலையும் உள்ள ஒரு விசேஷ நட்சத்திரமே வால்நட்சத்திரம் அல்லது தூமகேது. பல வால்நட்சத்திரங்கள் உண்டு. ஆனாலும் அவற்றின் சஞ்சாரக் கிரமத்தைக் கொண்டு இரண்டு வகையாக அவற்றைப் பிரிக்கலாம். நேராகத் தம் வழியே போய்க் கொண்டிருப்பவை ஒரு வகை. ஒரு நீண்ட வட்டத்தின் வழியே சென்று, சூரியனையும் வலம் வருபவை மறு வகை. முதல் வகையைச் சேர்ந்த வால்நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றுவதில்லை. மேலும் அவை ஒரே தடவைதான் ஆகாயத்தில் தோற்றமளிக்கும். இரண்டாவது வகையைச் சேர்ந்த வால்நட்சத்திரங்கள் சூரியனை வலம் வரும் ஒவ்வொரு தடவையும் நம் கண்ணுக்குப் புலப்படும். சூரியனைச் சுற்றிவர நாலு வருஷம் முதல் நாற்பதினாயிரம் வருஷம் வரைக்கும் பல அளவில் காலமெடுத்துக் கொள்ளும் பலவித நட்சத்திரங்கள் அவற்றில் உண்டு.

நவக்கிரகங்களைப்போலவே சில வால்நட்சத்திரங்கள் சூரியனை வலம் வருகின்றன என்பதை முதல் முதலாகக் கால்டியன்ஸ் என்பவரே கண்டுபிடித்தார். அநேகமாயிரம் மைல் நீளமுள்ள அந்த வால்நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றிக்கொண்டு வரும்போது பூமிக்கு அருகில் நெருங்கினால், அவை மனிதரின் கண்களுக்குப் புலப்படுகின்றன. கால்டியன்ஸ் என்பவரே இந்த நுட்பத்தையும் முதல்முதலாகக் கண்டார். அவரைப் பின்பற்றிப் பல விஞ்ஞான சாஸ்திரிகள் வெகு காலம் ஆராய்ச்சி புரிந்திருக்கிறார்கள். வருணனிடமிருந்து சூரியனுக்கு இருக்கும் தூரத்தைவிட இருபது மடங்கு அதிக நீளங்கூடச் சில வால்நட்சத்திரங்கள் நீண்டிருக்கின்றனவாம்.

சூரியமண்டலத்தில் லட்சத்து இருபதினாயிரம் வால்நட்சத்திரங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவற்றில் அறுநூறு வால் நட்சத்திரங்களின் உருவலட்சணங்களைக் கண்டு எழுதியும் வைத்திருக்கிறார்கள். ஆனால், இருநூறு நட்சத்திரங்களின் சஞ்சார மார்க்கங்களை மட்டுமே நிர்ணயமாய் அறிந்திருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் சராசரி நாலு அல்லது ஐந்து வால் நட்சத்திரங்கள் உதிக்கின்றன. என்றாலும் அவற்றைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாகத்தான் காண முடியும். அவை மனிதர்களின் வெறுங் கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

ஒரே வருஷத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வால்நட்சத்திரங்கள் மனிதர் கண்ணுக்குத் தென்படக் கூடியவாறு உதிக்கும் வழக்கமில்லை. ஆனால், 1881-இல் ஒன்றன்பின் ஒன்றாக இப்படி இரண்டு வால்நட்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 21-3-'48), கள்ளிக்கோட்டை.

சத்திரங்கள் உதித்தன. 1892-இல் ஏழு வால்நட்சத்திரங்கள் உதயமாயின. 1932-இல் பதின்மூன்று வால்நட்சத்திரங்கள் தோன்றின.

எல்லா வால்நட்சத்திரங்களின் தலைகளும் பார்ப்பதற்கு ஒரே வடிவமாகத்தான் இருக்கும். ஆனால், அவற்றின் பருமனில் எவ்வளவோ மாறுபாடுகள் உண்டு. அதிலும் வால்கள்தாம் மிகவும் விசித்திரமானவை. சிலவற்றின் வால்கள் நீளம் குறைந்து அகலம் அதிகமாயிருக்கும். மற்றும் சிலவற்றின் வால்கள் ரம்பம் போலும் ஈட்டி போலும் இருப்பதைக் காணலாம். வால்நட்சத்திரங்களில் ராவணனைப்போல் பல தலைகள் உள்ளவை இல்லை. ஆனால், பல வால்கள் உள்ள வால்நட்சத்திரங்களை நாம் காணலாம். 1908-இல் உதயமான 'மோர்ஹௌஸ்' என்ற வால்நட்சத்திரத்துக்கு ஆறு வால்கள் இருந்தன. அநேகமாக வால்நட்சத்திரங்களின் வால் ஒரு நாள் இரவு போல் மறுநாள் இரவு இல்லாமல் மாற்றமடைந்துகொண்டிருக்கும். ஆகவே வாலின் நீளம் உருவம் இவற்றைக் கொண்டு வால்நட்சத்திரங்களை வகை பிரிப்பது முடியாத காரியம். கம்பியில்லாத் தந்தி என்பதுபோல் வாலில்லா வால்நட்சத்திரங்களும் சில உண்டு.

வால்நட்சத்திரங்கள் சூரியனை வலம் வரும்போது அவற்றின் தலை சூரியனை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும். வலம் வந்து முடிந்தால் அவற்றின் வால்தான் முன்னேறிக்கொண்டிருக்கும்; தலை சூரியனைப் பார்த்துக்கொண்டே வாலைப் பின்தொடரும்.

வால்நட்சத்திரங்கள் யாத்திரை செய்யும் தருணத்தில் மற்றக் கிரகங்களைச் சமீபிப்பது உண்டு. அப்போது அந்தக் கிரகங்களின் ஆகர்ஷணசக்தி காரணமாக தங்கள் சஞ்சாரமார்க்கத்திலிருந்து சில சமயம் இவை நழுவிவிடும்; சில சமயம் வெடித்துத் தெறித்துப் போவதும் உண்டு. அநேக லட்சம் வருஷத்துக்கு முன்பு பூமியும் ஒரு வால்நட்சத்திரமும் இடித்துக்கொண்டதால், 1,90,000 சதுரமைல் கனம் பூமியிலிருந்து சிதறிப்போய்விட்டதாகப் பல விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அமெரிக்காவில் கரோலினா என்ற இடத்தில்தான் இந்த ஆபத்து நிகழ்ந்ததாம். எதிர்பாராமல் எவையேனும் வால்நட்சத்திரங்களுடன் பூமி ஒரு காலத்தில் இப்படி உராய்ந்து ஒரு நொடியில் சாம்பலாவதும் சாத்தியமே என்று சில விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வால் நட்சத்திரம் உதித்தால், அது ஏதோ கெடுதலைக் குறிப்பதாகக் கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் மக்கள் ஒருமுகமாக நம்பி வருகிறார்கள். "உலகத்தையே நாசம் செய்வதற்காக வால்நட்சத்திரத்தைப்போல் தாரகாசுரன் கிளம்பியிருக்கிறான்" என்று மகாகவி காளிதாசன் கூறியிருக்கிறான். வால்நட்சத்திரத்தை ஆங்கிலேயர் 'கூந்தல் வளர்ந்த நட்சத்திரம்' என்பார்கள். "வால் நட்சத்திரம் உதிப்பது அரிதாயினும் அது அபசகுனமேயாகும்" என்று எட்வின் என்ற பாதிரி கூறியிருக்கிறார். 17-ஆவது நூற்றாண்டில் வசித்த டானியல் டிபோ என்ற பேராசிரியரும் வால்நட்சத்திரங்கள் உதிப்பதைக் கெட்ட சகுனம் என்றே கூறியிருக்கிறார்.

அக்ரிப்பாய் என்ற மகாபுருஷன் இறப்பதற்குமுன் ரோம் நகரத்தில் ஒரு வால்நட்சத்திரம் உதித்ததாக 3000 வருஷங்களுக்கு முன் வாழ்ந்த சரித்திராசிரியர் டயோண் காஸியஸ்

என்பவர் எழுதியிருக்கிறார். கிறிஸ்து அப்தம் 66-இல் ஜெருஸலேம் நகரில் ஒரு வால்நட்சத்திரம் உதித்தவுடன், ஜோஸப் என்ற கவிஞர் ஜெருஸலேம் நகருக்கு மேலே நெருப்புக் கத்தி தொங்குவதாக வர்ணித்தார். மூன்றே வருஷத்தில் அந்த ராஜ்யம் நாசமாகும் என்பதற்கு அதுவே அறிகுறி என்றும் அவர் குறிப்பிட்டார். கி. மு. 45-இல் ஒரு வால்நட்சத்திரம் உதித்தபோதுதான் ஹூணர்களின் தலைவனான ஆற்றிலாய் என்பவனை ரோமன் தளபதி ஆக்டியஸ் என்பவன் தோற்கடித்தான். ஒரு வால் நட்சத்திரம் உதயமான போதே, வில்லியம் திகாங்கரர் என்ற ஆங்கில அரசர் மறைந்தார். கி. பி. 145-ஆவது வருஷத்தில் ஒரு வால்நட்சத்திரம் உதயமானதும் இரண்டாவது முஹமது என்பவர் துருக்கிப் படை ஒன்றுடன் சென்று ரோமன் சாம்ராஜ்யத்தைத் தகர்த்தார். 1665-இல் லண்டனில் ஒரு வால்நட்சத்திரம் உதித்தபோது, அங்கே பயங்கரமான பிளேக் நோய் பரவிப் பல்லாயிரம் மக்களை மாய்த்தது. 1666-இல் மீண்டும் ஒரு வால்நட்சத்திரம் உதயமானபோது பிரான்ஸும் பிரிட்டனும் ஒன்றுடன் ஒன்று யுத்தம் தொடங்கின. 1910-இல் ஒரு வால்நட்சத்திரம் உதித்ததும், ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தி மறைந்தார். 1914-இல் ஒரு வால் நட்சத்திரம் தோன்றிற்று. உடனே முதல் உலக யுத்தம் கிளம்பியது. இவ்விதமெல்லாம் நிகழ்ந்திருந்தாலும், வால்நட்சத்திரங்களின் உதயத்துக்கும் நடந்த நடப்புகளுக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்றே இந்தக் கால விஞ்ஞானிகள் வாதிக்கிறார்கள். ஏசுநாதரின் அவதார காலத்தில் பெத்லஹேம் நகரில் உதித்ததாகப் பைபிள் குறிப்பிடும் திவ்ய நட்சத்திரமும் ஒரு வால்நட்சத்திரந்தான் என்றுகூட ஒருவேளை அவர்கள் கூறினும் கூறுவரோ என்னவோ!

கங்காஜலம்

அழுக்கோடு சேர்ந்ததானாலும் புனிதமான கங்காஜலத்தை அருந்துவதனால் ஹிந்துக்கள நோயுறுவதில்லை; ஏனென்றால் இயற்கையாகவே கங்கைநீரில் கிருமிகளை அழிக்கும் விஷப் பொருள இருக்கிறது. ராக்பெல்லர் வைத்திய ஆராய்ச்சிச் சாலையில் உள்ள டாக்டர் ஜான் நார்த்ராப் என்பவர் இவ்வாறு கருதுகிறார். இந்த விஷப் பொருள் மனிதனின் உடம்பில் இருந்தாலும், உடம்பில் இருக்கும்வரையில் கிருமியைக் கொல்லும் சக்தி பெறுவதில்லை. இது சம்பந்தமாக இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

* * *

அந்தப் பெண்ணை அவளுடைய பணத்துக்காக மணம் செய்துகொள்ள நான் விரும்பவில்லை. ஆனால், அதை வேறே எப்படி அடைவது என்று எனக்குப் புரியவில்லை.

—கேட் ஸ்மித் புரோகிராம்.

‘நீலக்கண்ணுடி’ வழக்கு

ஹேமேந்திரப் பிரஸாத் கோஷ்

> ஜெர்மனியில் இப்போது செயற்கைச் சாயம் கண்டுபிடித்துவிட்டார்கள். இதற்கு முன்பு வங்காளத்திலிருந்துதான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சாயம் ஏற்றுமதியாகி வந்தது. அவுரியிலிருந்தே வங்காளத்தில் சாயம் இறக்கினுர்கள். அவுரித் தோட்ட முதலாளிகள் அப்போது ஐரோப்பியர். அவர்களுடைய கொடுமை தாங்காமல் கூலியாட்கள் பெருங்கலகம் செய்தார்கள். அதன் விளைவாக நடந்த இந்த ‘நீலக் கண்ணுடி வழக்கு’, சரித்திரப் பிரசித்தி பெற்றது. இது ‘நீல தர்ப்பணம்’ என்ற புத்தக முகவுரையின் சுருக்கம்.

துரைமாரிடம் அவுரித் தோட்டக் கூலிகள் படும் துன்பத்தைக் காணச் சகிக்கவில்லை இரண்டு வங்காளிகளுக்கு. அவர்கள் தோட்ட மேற்பார்வை பார்த்து வந்தவர்கள். அந்த இருவரும் கிராமங் கிராமமாகச் சென்றுர்கள். கூலியாட்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டினுர்கள். கிளர்ச்சிக்காரர்கள் மீது அதிகாரிகள் கிரிமினல் வழக்குகள் தொடர்ந்தார்கள். ஆனுல் நீதிபதி டாட்டென்ஹாம் என்பவர் நிலைமையை நேரில் கண்டு அறிந்தவர். ஆகையால் அவர் இந்த வழக்குகளில் நியாயப்படி தீர்ப்பு அளிக்கத் தொடங்கினுர். இதைக் கண்டதும் ஜனங்களுக்குத் துணிவு ஏற்பட்டது. கிளர்ச்சிக்காரர்களை ஜனங்கள் ஆதரித்து உற்சாகமூட்டினுர்கள்.

இந்தச் சமயத்தில்தான் (கி. பி. 1860) டாக்காவிலிருந்து, ‘நீலக் கண்ணுடி’ (நீல தர்ப்பணம்) என்ற நாடகம் வெளிவந்தது. ஆசிரியர் தம் பெயரை அதில் வெளியிடவில்லை. வங்க நாவலாசிரியர் பங்கிம் சந்திரர் இதைப்பற்றிக் குறிப்பிடுகையில், “தீனபந்து மித்திரர் ஒரு நாள் இந்த நாடகத்தை வரைந்த வண்ணம் மோகனு நதியைக் கடந்தார். அப்போது அவருடைய படகு கவிழ்ந்துவிட்டது. அவரைத் தவிர மற்ற எல்லோரும் நீந்தத் தொடங்கினுர்கள். அப்படி நீந்தத் தெரியாமல் தீனபந்து தவித்தார். அப்போது யாரோ ஓர் ஆள், “இங்கே ஆழமில்லை; மணல் தட்டுப்படுகிறது” என்றுன். பிறகு எல்லோருமாகப் படகை அந்த மணல் மேட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். நாடகத்தின் கையெழுத்துப் பிரதி நனைந்துவிட்டது. என்றுலும் நல்ல வேளையாகத் தீனபந்து அதைப் பிடித்த பிடி விடாமல் அப்படியே தம் கையில் வைத்துக்கொண்டிருந்தார்” என்று கூறியிருக்கிறுர்.

இதைத்தான் பிரபல கவிஞரான மைக்கேல் மதுசூதன தத்தரைக் கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ரேவரெண்டு ஜேம்ஸ் லாங் என்ற ஐரோப்பியப் பாதிரியார் வெளியிட்டார். அப்போது வங்க சர்க்காரின் காரியதரிசியாக இருந்த ஸிடன்கார் என்ற துரையும் இதைப் படித்துவிட்டு, அரசாங்கத் தஸ்தாவேஜிகளை அனுப்புகிறமாதிரி இதன் பிரதிகளையும் சர்க்காரின் அநுமதி யின்றியே பல பிரமுகர்களுக்கு அனுப்பி வைத்தார். உடனே அவுரித்தோட்ட முதலாளிகள், “இந்தமாதிரி துவேஷப்

பிரசாரத்துக்குச் சர்க்காரே இடங்கொடுத்திருக்கிறார்களா?" என்று சிறிப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறையிட்டுக்கொண்டார்கள். அதற்கு வங்க சர்க்கார் அளித்த பதிலில், "இந்தப் புஸ்தகம் எங்களுக்குத் தெரியாமலே வினியோகமாகிவிட்டது. என்றாலும் இதை லெப்டினெண்ட் கவர்னர் கிராண்ட் அவர்கள் படித்துப் பார்த்ததில் இதில் எந்த விதமான தீங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் இப்படி நேர்ந்ததற்கு மிகவும் வருந்துகிறோம்" என்று கூறினார்கள்.

அவுரித்தோட்ட முதலாளிகள் லேசில் விடுவார்களா? இதற்குக் காரணபூதரான உத்தியோகஸ்தர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்கள்; ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்ட மான்யுவல் என்பவர் மீது மானநஷ்ட வழக்கும் தொடுத்தார்கள். லாங்க் பாதிரியாரே இதற்கு ஜவாப்தாரி என்று மான்யுவல் சமாதானம் சொன்னார். இப்படித் தம்மீது பழியைப் போடும்படி மான்யுவலை அந்தப் பாதிரியாரே கேட்டுக்கொண்டார். லாங்கின்மீது வழக்கைத் தோட்டக்காரர்கள் மாற்றினார்கள். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி மௌண்ட் வாலஸின் முன்பு விசாரணை ஆரம்பமாயிற்று. ஜூரிகளில் ஒரே ஒருவர்தாம் இந்தியர். லாங்க் பாதிரியார் குற்றவாளியே என்று ஜூரிகள் தீர்மானித்தார்கள். தீர்ப்பளிக்கு முன்பு, பாதிரியார் கொடுத்த வாக்குமூலம் வருமாறு:

"நான் இருபது வருஷ காலமாக இந்த நாட்டு மக்களுடன் கலந்து பழகி வருபவன். சுதேசிகளின் மனப்பான்மை எனக்கு நன்றாகத் தெரியும். ஆங்கிலேயர் இதைப் படித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்பதே என் நோக்கம். சுதேசிகளின் தூண்டுதலின்மேல் இதை நான் வெளியிடவில்லை. சிப்பாய்க் கலகம் நடந்து இன்று நாலு வருஷங்கள் ஆகின்றன; அதிலிருந்தும் சரி, ஆப்கன் யுத்தத்திலிருந்தும் சரி, சுதேசிகளின் உள்ளக் கருத்தை ஆங்கிலேயர் அறிந்துகொள்ளவில்லையே! சுதேசிச் சிப்பாய்களை நம் தளகர்த்தர்கள் அவமதித்ததையும் சுதேச மன்னரிடம் நம்மவர் நடந்துகொண்ட ரீதியையும் வர்ணித்து, நான் இதேபோல் ஒரு புஸ்தகத்தைச் சிப்பாய்க் கலகத்துக்கு முன்பு எழுதியிருந்தேனானல், அந்தக் கலகத்தினால் அத்தனை உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிருக்க மாட்டா என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். நான் கிறிஸ்து தர்மப் பிரசாரகன். சுதேசிக் குடிகளின் குறைகளையும் இன்னல்களையும் நேரில் கண்டு உள்ளூற வேதனை அடைந்திருக்கிறேன். எழுதப் படிக்கத் தெரியாத பெரும்பாலான மக்களுக்கு அறிவு அளித்து அவர்களை முன்னேறச் செய்வதே முக்கியம். ஒரு சில ஐரோப்பியர்களின் நலனுக்காக இந்தியாவை ஆளுவதை விட்டு இந்திய மக்களின் சுகத்தைக் கருதி அரசு செலுத்தவேண்டும் என்பதே என் கோரிக்கை. இதனால் சிலருக்கு மான நஷ்டம் ஏற்படும் என்றால், நான் இதற்குமுன் சில கெட்ட பழக்க வழக்கங்களைப் பற்றிக் குறை கூறியிருப்பதும் பெருத்த குற்றமே யாகும். இப்படியெல்லாம் பார்த்தால் சமூகச் சீர்திருத்தமோ மதச் சீர்திருத்தமோ ஒருகாலும் சாத்தியமில்லை."

என்றாலும், நீதிபதி வாலெஸ், "பாதிரியாக இருந்தும் நீர் இப்படிச் செய்தது மன்னிக்க முடியாத

பெருந்தவறு" என்று அபிப்பிராயம் கூறி, ரெவரெண்டு லாங்குக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் விதித்தார். காளீப்ரஸன்ன சிம்மர் என்னும் பிரபல கனவான் அந்த அபராதத் தொகையை உடனே கட்டிவிட்டார். லாங்க் பாதிரியாருக்குச் சாதாரண மக்களிடம் எவ்வளவு செல்வாக்கு உண்டு என்பது அப்போதுதான் தெரிந்தது. சிறையில் அவரைப் பார்க்க வந்தவர்களைப்போல் கவர்னர் ஜெனரலைப் பேட்டி காணக்கூட அவ்வளவு பேர் வந்ததில்லை என்றால் பாருங்களேன்.

இதற்கிடையே லெப்டினெண்ட் கவர்னர் கிராண்ட் துரை, "சுதேசிகளிடத்தில் இங்கேயுள்ள ஐரோப்பியர் மிகவும் மோசமான முறையில் நடந்துகொள்கிருர்கள்" என்று எழுதி இந்தச் சம்பவத்தையும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவரும் அவருடைய காரியதரிசி வீடன் கார் துரையும் இந்த விஷயத்தில் ஒத்த அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். என்றாலும் தோட்ட முதலாளிகளின் தொந்தரவு காரணமாக வீடன் கார் தமது பதவியை ராஜீநாமாச் செய்ய நேர்ந்தது. பின்னால் அவர் நீதிபதி பதவி பெற்றார். அதன் பிறகு இந்திய சர்க்காரின் வெளிநாட்டு மந்திரியாகவும் பதவி பெற்றார். கிராண்ட் துரை பதவியை விட்டு விலகியபோது, இந்தியருக்காக அவர் செய்த சேவையை மெச்சிக் கல்கத்தா நகரவாசிகள் அவருக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தி அவரை அனுப்பினார்கள்.

வீட்டுப் பிரச்னை

ஸ்வீடன் தேசத்தில் உள்ள ஸ்டாக்ஹோம் நகரில் வீடு கிடைப்பது, உலகத்தில் வேறு எங்கே கிடைப்பதையும்விட மகா கடினமாயிருக்கிறது. ஹோட்டல்களிலெல்லாம் அறைகளை 1951-ஆம் ஆண்டு வரைக்கும் அநேகர் வாடகைக்குப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். அங்கே உள்ள லாங்ஹோல்மென் என்ற சிறைச்சாலைக் கட்டிடத்தில் எவ்வித மாறுதலும் செய்யாமலே அதை அப்படியே ஒரு ஹாஸ்டலாக மாற்றிவிட்டார்கள். இரும்புக் கம்பிகளெல்லாம் இருந்தபடி இருக்கின்றன. கதவுகளையெல்லாம் வெளியிலிருந்துதான் திறக்க முடியும். என்றாலும் ஜனங்கள் அங்கே போய்க் குவிகிறார்கள்.

"சரிதான். அங்கே இருந்த கைதிகளை என்ன செய்தார்கள் ?" என்று நீங்கள் கேட்கலாம்.

அவர்களைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு மாற்றிவிட்டார்கள்.

"பைத்தியங்கள் என்ன ஆனார்கள் ?"

அவர்களை அவிழ்த்துவிட்டுப் பழையபடி ஊருக்குள்ளே திரிய விட்டுவிட்டார்கள். இதனால் ஜனங்களிடையிலே எவ்விதமான வித்தியாசமும் தென்படவில்லையாம்.

—கார்ரிபோர் (பாரிஸ்)

* *

அதிகாரப் பதவி பெற்று மண்டைக் கிறுக்கு ஏறாதவன் உலகில் எவனும் இல்லை. —துளசிதாஸர்.

தான் ஆறறிவு படைத்ததற்கு மனிதன் கர்வப்படுகிறான். ஆனால், பிராணிகளின் ஐந்தறிவுக்கு இணை அவனிடம் உண்டா?

பிராணிகளின் அதிசய சக்தி

காஸுகேல நரசிம்ம ராவ்

குறுகிய பார்வை: கண் சிறுத்தவர்களை யானைக் கண்ணர்கள் என்று சொல்லுகிறோம். யானைக்குக் கண் சிறுத்திருப்பது உண்மை. இப்படிக் கண் சிறத்த யானையின் பார்வை மந்தமானதா? கூர்மையானதா? இது பலருக்குத் தெரிந்திராது. உண்மை என்ன தெரியுமா? தன் காலடியில் கிடக்கும் குண்டூசியையும் யானை கண்டெடுத்துவிடும். ஆனால் 25-கஜதூரத்தில் இருக்கும் மலைகூட அதன் கண்ணுக்குத் தெரியாதாம். அதற்குப் பதிலாக மோப்பம் பிடிக்கும் சக்தி யானைக்கு அருமையாக அமைந்திருக்கிறது. அரை மைல் தூரத்தில் இருக்கும் மனிதனைக்கூட யானை மோப்பம் பிடித்து அறிந்து கொண்டுவிடுகிறது. யானை வேட்டைக்குப் போகிறவர்கள் இந்த ரகஸ்யத்தை அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

காது இருந்தும் செவிடு: உயிர்வர்க்கத்தில் மனிதஜன்மமே சிறந்தது என்று நாம் பெருமைப்படுகிறோம். இயற்கை ஒவ்வொரு நிமிஷமும் நம்மை எமாற்றிவிடுகிறது. உலகம் எங்கும் நிகழும் எத்தனையோ ஒலிகள் நம் காதில் கேட்பதேயில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? சில ஊதல் ஒலிகள் நம் காதில் விழுவதில்லை. ஆனால் அவை நாயின் காதில் தெளிவாகக் கேட்கின்றன. எலிகள் அடிக்கடி சங்கீதக் கச்சேரி செய்கின்றனவாம். அந்தச் சங்கீதத்தை எலிகள் மட்டுமே கேட்டு அநுபவிக்கின்றன. இந்த எலிகளின் சங்கீதம் சில மனிதர்களின் காதில் மட்டும் விழுவதுண்டாம்.

எலிகளின் ஓயாத சங்கீதக் கச்சேரி

மறைந்திருக்கும் வர்ணங்கள்: மனிதனின் துரதிருஷ்டம் இதோடு முடியவில்லை. தேனீக்கள் பார்த்து அநுபவிக்கக் கூடிய பல வர்ணங்களை மனிதன் பார்க்க முடிவதில்லை. வானவில்லின் வர்ணஜாலங்களைக் கண்டு அவன் கவிதை எழுதுகிறான். மறைந்திருக்கும் மற்ற வர்ணக் கூட்டங்களையும் மனிதன் பார்க்க முடிந்தால், சாதாரண மனிதனுங்கூடப் பெரிய கவிஞனாகவும் ஓவியனாகவும் பாடகனாகவும் மாறிவிடுவான். அவ்வளவு அற்புத வர்ணங்கள் பிரபஞ்சத்திலே இருக்கின்றன.

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு: 8-4-'48), தம்புசெட்டி தெரு, சென்னை.

காதே கண்: நாம் இரவில் சுவாரஸ்யமாகப் படித்துககொண்டிருக்கிறோம். திடீரென்று நம்முன் வாயு வேகத்தில் கரிய உருவமொன்று பறந்தோடுகிறது. முதலில் அது நம் கவனத்தை இழுப்பதில்லை. அறைக்குள்ளே அந்த உருவம் நிலத்திலிருந்து கூரைக்கும், ஒரு சுவரிலிருந்து மறு சுவருக்குமாக ஓயாமல் பறந்துகொண்டேயிருப்பதால், நமக்குத் தலைவேதனை எடுத்துவிடுகிறது. கையிலிருக்கும் துணியை விசிறி அந்த உருவத்தைப் பிடிக்க முயலுகிறோம். எங்கே, அது கைக்குக் கிடைத்தால்தானே! நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அது 'விர்'ரென்று பறந்து நம் முகத்துக்கெதிரே வந்துவிட்டுப் பிறகு பின்வாங்கி அம்புபோல் பாய்ந்தோடிவிடுகிறது. அந்த உருவம் வேறெதவும் அல்ல. அது ஒரு வெளவால். அவ்வளவுதான். வெளவால் ஏன் இப்படிச் செய்கிறது? அது பொருள்களின் இருப்பிடத்தைக் காதால் கேட்டே அறிந்து கொள்ளுமாம். அதற்குக் கண் சரியாய்த் தெரிவதில்லை. இதைப் பரீட்சிக்க உங்களுக்கு விருப்பமானால் ஒரு வெளவாலைப் பிடித்து அதன் கண்களைத் துணி



குருட்டு வெளவால் இருட்டு அறையிலே



பயத்தை வாசனையால் அறியும் நாய்

யால் கட்டிவிடுங்கள். அறைக்குள்ளே ஒரு கம்பி வலையையும் தொங்க விடுங்கள். வெளவாலைப் பறக்க விடுங்கள். எத்தனை தரம் சுற்றிப் பறந்தாலும், வெளவால் அந்த வலைக் கம்பியில் படாமல் தப்பித்துக்கொண்டே செல்வதைக் காண்பீர்கள்.

பயத்தின் வாசனை: ஓடுபவனைக் கண்டால் துரத்துபவனுக்கு எளிதோ இல்லையோ; நிச்சயமாக நாய்க்கு எளிது. தன்னைக் கண்டு ஒருவன் பயப்படுகிறான் என்பது நாய்க்கு எப்படித் தெரிகிறது? பயப்பட்ட மனிதனிடம் ஒருவித வாசனை அடிக்கிறதாம். அதை மனிதனால் அறிய முடியாது. ஆனால் பயத்தின் வாசனையை நாய் அறிந்துகொள்ளுகிறது. எங்கெல்மன் என்னும் ஜெர்மானியர் பிராணிகளின் இயர்கையைப் பரிசோதித்து அறிந்தவர். சப்தத்தை அறியும் சக்தி நம்மைவிட நாய், பூனை, கோழி இவற்றிற்கு அதிகமென்று அவர் கண்டுபிடித்திருக்கிறார்.

ஒளியின் உணர்ச்சி: நத்தைவகையைச் சேர்ந்த ஆய்ஸ்டர் என்ற பிராணிக்குக் கண்ணே இல்லை. ஆனால் நல்ல வெளிச்சம் இருந்தால்தான்,

அது தன் ஓடுகளைத் திறந்துகொண்டு ஆகாரத்தைச் சேகரிக்கிறது. அந்தச் சமயத்தில் அதன் மேல் ஏதாவது நிழல் பட்டால் உடனே அது தன் ஓடுகளை மூடிக்கொள்கிறது. இது போன்ற அதிசய சக்திகளுக்கெல்லாம் விஞ்ஞான சாஸ்திரிகள் ஏதாவது ஒரு பெரிய 'பெயரை'ச் சூட்டி விட்டு அதோடு வாயை மூடிக் கொண்டுவிடுகிறார்கள்!

நிறக் குருடு: ஆப்பிரிக்காவில் 'பாபூன்' என்ற ஒரு வகைக் குரங்குகள் உண்டு. அவை சோளப் பயிரை அழித்துவிடுமாம். ஒரு பாபூனைப் பிடித்து அதன் உடம்பு முழுவதும் ஊதா நிறத்தைப் பூசி விட்டால், அதைக் கண்ட மற்றப் பாபூன்கள் சோளப்பயிரைப் படையெடுக்கமாட்டா என்று குடியானவர்கள் நினைத்தார்கள். ஒரு குடியானவன் வெகு சிரமப்பட்டு ஒரு பாபூனைப் பிடித்து அதன் ரோமத்தையெல்லாம் ஒட்டச் சிரைத்துவிட்டு, அதன் உடம்பில் ஊதா வர்ணத்தைப் பூசி விட்டுவிட்டான். அதைக் கண்ட மற்றப் பாபூன்கள் ஆச்சரியப்படவேயில்லை. அது மறுபடியும் தங்களுடன் வந்து சேர்ந்து கொண்டதற்காக அவை களியாட்டம் ஆடினவாம். பாபூன்களுக்குள் நிற வித்தியாசமே கிடையாது. ஏனென்றால், அவற்றின் கண்களுக்கு நிறங்கள் தென்பட்டால்தானே! அது தான் இல்லையே.

புது வாசனைப் பொடி ஜனனம்

இதாலியில் உள்ள மிலான் நகரில், ஆண்ட்ரி ஹாட்ஸ் என்று ஒரு ரசாயன சாஸ்திரி இருக்கிறார். ரசாயன மருந்துகளின் நாற்றத்தைப் போக்க அவற்றை எதில் வடிகட்டலாம் என்று அவர் ஆராய்ந்தார். பட்டு நூலைப் பொடி செய்து, அதில் மருந்துகளை வடிகட்டிப் பார்த்தார்.

அவருக்குத் துணை புரிந்துகொண்டிருந்த ஒரு பெண்மணி, இந்தப் பட்டுநூல் பொடியை வாசனைத்தூள் என்று நினைத்து முகத்தில் பூசிக்கொண்டாள். அதன் வாசனை அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது. தாராளமாய் அதை எப்போதும் பூசிக் கொள்ளத் தொடங்கினாள். இதைக் கண்ட சாஸ்திரி, இப்போது ஒரு புதிய அழகு ஆராய்ச்சித் துறையில் இறங்கிவிட்டார்.

"சாதாரண அரிசி மாவில் தயாராகும் வாசனைப் பொடிகளைவிட, பட்டு நூல் பொடியில் அதிக நல்ல குணங்கள் இருக்கின்றன. இது அரிசிமாவில் பாதி எடைதான் இருக்கிறது. மயிர்க்காம்புகளில் பிசுக்கென்று இது ஒட்டிக்கொள்வதில்லை. வேர்வையையும் நாற்றத்தையும் சட்டென்று உறிஞ்சி விடுகிறது. எவ்வித'மான கிரீமும் சேர்க்காமலே சர்மத்தில் நன்றாக ஒட்டிக்கொள்கிறது" என்று அந்தச் சாஸ்திரி சொல்கிறார்.

—நியூஸ் ரிவ்யூ.

* * *

ஒரு பம்புக்குழாயிலிருந்து ஒரு நொடியில் ஒரு சொட்டு விகிதம் தண்ணீர் வழிந்துகொண்டிருந்தால், ஒரு மாதத்தில் 175 காலன் தண்ணீர் சேதமாகும்.

—மகளின் டைஜெஸ்ட்.

முஸ்லிம் காளிபக்தர்

தீனேச் சந்திர பட்டாசாரிய

கிழக்கு வங்காள முஸ்லிம்கள் தங்கள் கலாசாரத்தில் பெரும்பாலும் இந்து சகோதரர்களைப் போலவே விளங்குகிறார்கள். அங்கே காந்தியடிகளின் யாத்திரை வெற்றி பெற்றதற்கு இதுவே ஓரளவு காரணம். சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் அங்கே வாழ்ந்த இந்த முஸ்லிம் காளிபக்தரின் வாழ்க்கை இதற்கு ஓர் உதாரணமாகும்.

கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வங்காளத்தில் பல சக்தி உபாசகர்கள் தோன்றினார்கள். அவர்களில் மிர்ஜா ஹுஸேன் அலி என்பவர் முக்கியமானவர். கிழக்கு வங்காளத்திலுள்ள திரிபுரா ஜில்லாவில் வரதாகாத் என்று ஒரு ஜமீன் உண்டு. அதைத் திரிபுர அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நிர்வகித்து வந்தார்கள். இவர்கள் நாளடைவில் இஸ்லாம் மதத்தில் சேர்ந்து முஸ்லிம்களாக மாறிவிட்டார்கள். இந்த வம்சத்தில் மிர்ஜா தம் தந்தைக்கு மூன்றாவது மகனாக 1743-ஆம் வருஷத்தில் பிறந்தார். அவருடைய இளவயதிலேயே தந்தை இறந்துவிட்டார். அதற்குள் குடும்பச் சொத்தை மூத்த மகனும் இரண்டாவது மகனும் பங்கு போட்டுக்கொண்டு விட்டார்கள். உரிய வயது வந்ததும் மிர்ஜா தம் பாகத்தைக் கோரி டாக்கா நவாபிடம் முறையிட்டுக் கொண்டார். ஆங்கிலேயர் வங்காள திவானியை (மந்திரி பதவியை) ஏற்றுக்கொள்வதற்குச் சிறிது காலத்துக்கு முன்னேதான் மிர்ஜா இப்படி முறையிட்டுக் கொண்டார். ஆதியிலிருந்தே ஜமீன் அலுவல்களில் மிர்ஜா அக்கறை செலுத்தவில்லையாம். 1787-இல் கிழக்கிந்தியக் கம்பெனி கலெக்டர் எழுதியுள்ள ஒரு கடிதத்திலிருந்து இது தெரிய வருகிறது. இவர் இப்படி அலட்சியமாக இருந்ததால், இவருக்கு ஏராளமான கடன் ஏற்பட்டுத் தம் சொத்தில் ஒரு பாதியை மூத்தவனுக்கு விற்க நேர்ந்தது. பின்னால் இவருடைய சகோதரர்கள் இருவரும் ஆண் சந்ததியின்றி இறந்துவிட்டார்கள். அதனால் சொத்து முழுவதும் இவருக்கே வந்து சேர்ந்தது. இருந்த போதிலும் எல்லாச் சொத்தையும் தம் திவானிடம் ஒப்படைத்துவிட்டு, நிச்சிந்தையாகத் தேவியின் தியானத்தில் இவர் ஈடுபட்டு வந்தார்.

நாளடைவில் இவருக்கும் இவருடைய மனைவிக்கும் தகராறு ஏற்பட்டது. இவருடைய மருமகனும் அவளுடன் சேர்ந்துகொண்டான். "சகோதரர்கள் இறந்ததும் என் புருஷர் இஸ்லாம் தர்மத்தைக் கைவிட்டு இந்து விக்கிரகங்களை ஆராதனை செய்ய ஆரம்பித்துவிட்டார். ஆகையால் பிதிரார்ஜித சொத்து விஷயமாக அவருக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாது" என்று சொல்லி அந்த அம்மாள் ஒரு வழக்குத் தொடுத்தாள். இவருடைய

காப்பிரைட்: பிரபாஸி (வங்காளி: செப்டம்பர், '47),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

தமையனின் பெண் வயிற்றுப் பேரன் ஒருவன் வேறே இன்னொரு வழக்குப் போட்டான். "மிர்ஜாவுக்குப் புத்தி தடுமாறிவிட்டது. சொத்துக்கு நானே வாரிசு" என்று அவன் வழக்காடினன். இந்த இரண்டு வழக்குகளையும் திவானிக் கச்சேரி அதிபதிகள் தள்ளிவிட்டார்கள். சச்சரவு ஏற்படும் என்று தெரிந்தவுடனே, மிர்ஜா அந்த இடத்தை விட்டே வெளியேறினர். தம் சகோதரியின் ஊரான நாராயணபுரத்துக்குச் சென்று பக்தி சாதனையில் மிர்ஜா மனம் செலுத்தலானர். அங்கே குளக் கரையில் ஒரு காளிகோயில் உண்டு. இடுப்பில் இருந்து பாதம் வரைக்கும் தேவி காட்சி யளிப்பது போல், இயற்கையாகவே ஒரு மரத்தின் அடிப்பாகம் அமைந்திருந்தது. இதுவேதான் கோயில். இந்தத் தேவி உருவத்துக்குக் காசிநாத் சக்கரவர்த்தி என்ற பெரியார் குங்குமம் இட்டுப் பூஜை செய்து வந்தார். தாம் இறக்கும் போது மிர்ஜா இந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று அந்தப் பெரியார் இவரிடம் சொல்லிவிட்டுப் போனர். தாம் பூஜை செய்வது தகுதியா என்று மிர்ஜா கேட்டதற்குச் சாட்சாத் தேவியே அசரீரியாக, "நீ முஸல்மானக இருந்தால் என்ன தவறு? உன் பிரார்த்தனைக்கு நான் செவி கொடுப்பேன். ஒரு நாள் உனக்குக் காட்சியும் அளிப்பேன்" என்று திருவாய் மலர்ந் தருளியதாகச் சொல்லுகிறார்கள். ஆயினும் கோயிலுக்குள் அவர் நுழையவில்லை. ஓர் அர்ச்சகனை நியமித்துப் பூஜை நடத்திவந்தார். தாம் குளத்தின் எதிர்க்கரையிலே ஒரு மசூதி கட்டிக்கொண்டு அதில் இருந்தபடியே தேவியின் திருநாமத்தை ஜபித்துக்கொண் டிருந்தார்.

ஒரு நாள் மிர்ஜா மனமுருகி, "தேவி, நீ உண்மையாகவே இருக்கும் பட்சத்தில் இந்த மசூதியில் ஒரு ஜன்னல் உண்டுபண்ணி நான் உன்னைக் காண அருள் புரிவாய்!" என்று தேவியைக் கேட்டுக்கொண்டாராம். உடனே மசூதியின் வட பாகத்தில் செங்கல் விலகி ஒரு துவாரம் தோன்றியதாம். அதன் மூலம் அவர் பார்த்தபோது அம்மனின் திருப்பாதம் தெரிந்ததாம். பக்தி மேலீட்டால் மிர்ஜா பைத்தியம் பிடித்தவர் போல் ஆனர். ஜமீன் கச்சேரித் தஸ்தாவேஜிகளிலெல்லாம் "ஸ்ரீ ஜய காளியின் சரணமே துணை" என்று எழுதி அவர் கையெழுத்திட்டிருப்பதை இன்றும் காணலாம். பிறகு சொத்தில் பெரும்பாகத்தையும் டாக்கா முஸ்லிம் ஒருவருக்கு விற்று அதில் கிடைத்த தொகையைக் கொண்டு வெகு ஆடம்பரமாகத் தேவிக்கு மிர்ஜா உற்சவம் செய்து வைத்தார். ஆனால் மனைவியின் மேலும் கொஞ்சம் சொத்தை எழுதி வைத்தார். மனைவி இறந்ததும் அவளை டாக்காவுக்குக் கொண்டு போய் அடக்கம் செய்துவிட்டு, திரும்பிவந்து முன் போலவே தம் சாதனையில் மிர்ஜா ஈடுபட்டார். நாடோர் ராஜா ராமகிருஷ்ணரோடு இவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் ஜமீன்தார்களாக இருந்தவர்கள்; தங்கள் தங்கள் ஜமீனைத் துறந்து தியாக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள். இந்தக் காலத்தில்தான் வங்காளத்தின் சிறந்த சாக்த கவிஞரும் தேவியின் பரம பக்தருமான ராமப்ரஸாத் ஜீவித்து வந்தார். ராஜா ராமகிருஷ்ணரும் மிர்ஜாவும் அந்தக் கவிஞரின் சிஷ்யர்களாகி அவரைப் பல சமயம் பின்தொடர்ந்து சென்றதாகச் சொல்கிறார்கள்.

இப்படி மிர்ஜா அலேவதைக் கண்டு டாக்கா முஸ்லிம் பிரமுகர்கள் சிலர் இந்த வழியிலிருந்து அவரைத் திருப்புவதற்காக இரண்டொரு மௌலானுக்களை வரவழைத்தார்கள். அவர்களுடன் சமய விவாதம் செய்ய மிர்ஜாவும் சம்மதித்தார். சபை கூடியது; குறித்த நேரமும் நெருங்கியது. எல்லோரும் மிர்ஜாவின் வரவை எதிர்பார்த்து வாயிற்படியையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஆனல் அதே சமயத்தில் அவர் எப்படியோ யார் கண்ணிலும் படாமல் சபை நடுவிலே வந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். "நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று அவர்கள் கேட்டதற்கு, அந்த மகான், "வந்து சேர வேண்டியதுதானே முக்கியம்? எப்படி வந்தால் என்ன?" என்று பதில் அளித்தாராம். இதிலிருந்து அவருடைய மகிமையை உணர்ந்துகொண்டு, தங்கள் விவாத எண்ணத்தை அந்த மௌலானுக்கள் கைவிட்டார்களாம். ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் வாழ்ந்த பின்பு கி. பி. 1823 - இல் அந்த இடத்திலேயே மிர்ஜா சமாதியானர்.

அவருடைய பாடல்களுக்குள் பிரசித்தமான இரண்டொன்றின் கருத்தைக் கீழே காணலாம்:

என்முன் கணமும் நில்லாமல்
எமனே! திரும்பிச் செல்வாயே!
அன்னை த்ரிபுரேச் வரியின் இணை
அடிபணிந் தேயான் கிடக்கின்றேன்.
இன்னும் தொந்தரை கொடுப்பாயேல்
எதிரே ஜட்ஜிகச் சேரியிலே
உன்மேல் வழக்குத் தொடர்ந்திடுவேன்.
உமையவ ளேஜா மீன்எனக்கு.

தாயே! உன்னல் இயலாத
செயலும் உண் டோ? யானறியேன்.
நாயேன் தன்னை ஒருவேளை
நயமாய் அரியணை யினில்அமர்த்திப்
பேயே போல்யான் கானகத்தில்
பின்னர் அலேந்திட வும்செய்வாய்.
நீயே எமபயம்நீக்க வல்லாய்;
நிரந்தரம் சாட்சி ஹஸேனவி.

இருளுக்கு நடுவே

சமீபத்தில் ஒரு வாலிப டாக்டர் சீனவுக்குப் போவதற்காகக் கப்பலேறினர்.

"வேண்டாம். அது பிரம்மாண்டமான தேசம். அதன் தவிப்பை நீக்க உங்கள் ஒருவரால் என்ன முடியும்? அந்த ஜன சமுத்திரத்தின் நடுவிலே நீங்கள் மறைந்து போவீர்கள். அவர்களைப் பிடித்திருக்கும் கொள்ளை நோய்களை உங்களால் அகற்ற முடியுமா? யுத்தம், பஞ்சம், வெள்ளம் இவற்றுல் அவர்கள் படும் வேதனைக்கு உங்களால் என்ன பரிகாரம் செய்ய முடியும்?" என்று நண்பர்கள் எத்தனையோ தடுத்துப் பார்த்தார்கள். அவர் கேட்கவில்லை.

கப்பல் படியிலே ஏறிக்கொண்டே அந்த வாலிப டாக்டர் சொன்னது இதுதான்: "என்னைச் சுற்றிலும் இருள் சூழும் போது, அந்த இருளை நான் சபித்துக்கொண்டிருப்பதில்லை; என் விளக்கைத்தான் ஏற்றி வைத்துக்கொள்வேன்."

—எட்டி காண்டர்.

யூத ராஜ்யம் நிலைக்குமா?

★

பாலஸ்தீனத்தில் யூதருக்கும் அராபியருக்கும் கொடிய யுத்தம் தோன்றிவிட்டது. அமெரிக்காவும் ருஷ்யாவும் போட்டி போட்டுக்கொண்டு, யூத ராஜ்யத்தை அங்கீகரித்துவிட்டன. இந்த யூதர் யார்? இவர்களுடைய பழைய சரித்திரம் என்ன? யூத ராஜ்யம் நிலைக்குமா? ஜோதிஷ ரீதியாகக் கிடைக்கும் சூசகம் யாது? இந்த விஷயங்களை இங்கே காணலாம். பாலஸ்தீன யுத்தம் தொடங்கு முன்பே எழுதப்பெற்ற கட்டுரை இது.

பாலஸ்தீனத்தைப் பிரிவினை செய்வதற்கு ஐ. நா. பந்தோபஸ்துக் கவுன்ஸில் சென்ற நவம்பரில் ஒரு திட்டம் தயாரித்தது. அந்தத் திட்டத்தை ரத்துச் செய்வதென்று பின்னால் அதுவே தீர்மானித்துவிட்டது. அந்தத் திட்டம் தயாரானபோது, செவ்வாயும் சனியும் உச்சத்தில் இருந்தன. இந்த மோசமான கிரக நிலையின் விபரீத பலன்களையே இன்று காண்கிறோம்.

பாலஸ்தீனத்தின் நிலைமை குறித்து ஜோதிஷ பலாபலன்களை ஆராயுமுன்பு, அந்த நாட்டின் பழைய சரித்திரத்தைக் கொஞ்சம் கவனிப்போம். பாலஸ்தீனம் ஒரு சிறிய நாடு. 10,000 சதுரமைல் விஸ்தீர்ணம் கொண்டது. அதன் ஜனத்தொகை 18,66,000. இதில் 12,03,000 பேர் அராபியர்; 6,08,000 பேர் யூதர். மீதிப் பேர் பிறதேசீய இனங்களைச் சேர்ந்தவர். பாலஸ்தீனத்தின் ஜன்ம லக்கினம் மேஷம்.

சென்ற 2000 வருஷகாலமாக பற்பல சுகதுக்கங்களை அநுபவித்திருக்கிறது பாலஸ்தீனம். அது பல நூற்றாண்டுகள் எகிப்தின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. பின்பு கி. மு. 1100-ஆம் வருஷத்தில் பிலிஸ்தினியர்கள் அதை ஜயித்தார்கள். டேவிட் என்ற அரசரின் காலத்தில் அந்த நாடு சுபிட்சம் அடைந்திருந்தது. கி. மு. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. மு. 6-ஆம் நூற்றாண்டு வரைக்கும் அஸிரியா, பாபிலோன் என்ற இரண்டு நாடுகளும் பாலஸ்தீனத்தை மாறி மாறி ஜயித்து ஆண்டு வந்தன. கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் பாபிலோனின் வேறு சில மாகாணங்களையும் பாலஸ்தீனத்தையும் பாபிலோனிடமிருந்து பாரசீக நாடு கைப்பற்றியது. அலெக்ஸாண்டர் மாண்டதும் பாலஸ்தீனம் மீண்டும் எகிப்தியர் கையில் சிக்கியது. டாலமி அரச வம்சத்தார் அதை ஆண்டார்கள். ரோம் நாட்டவரின் அடி தாங்காமல் டாலமி அரசர்கள் நலிந்தார்கள். அதன் மேல் கி. மு. 143

காப்பிரைட்: அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: ஜூன் '48),
சேஷாத்திரிபுரம், பெங்களூர்.

-ஆம் வருஷத்தில் யூதர்கள் புரட்சி செய்து, பூர்ண சுதந்தரம் அடைந்தார்கள். கி. பி. 70-ஆம் வருஷத்திலிருந்து ஏழு நூற்றாண்டுகள் ரோம ஏகாதிபத்தியத்துக்குள் பாலஸ்தீனம் அடங்கியிருந்தது. ஆனால், இந்த ஏழு நூற்றாண்டுகளிலும், ரோமர்கள் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் பிடியைத் தளர்த்திக் கொண்டே வந்தார்கள். கி. மு. 635-ஆம் வருஷத்தில் முகம்மதியர்கள் கைக்குள் பாலஸ்தீனம் சிக்கியது. கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் துருக்கியர் மெல்ல மெல்ல உச்ச நிலையை அடைந்தார்கள். பிறகு மதயுத்தங்கள் நடந்தன. வடக்கேயிருந்து தார்த்தாரியர் படையெடுத்து வந்து புதிய ஆபத்து விளைத்தார்கள். கி. பி. 16- ஆம் நூற்றாண்டில் மறுபடியும் ஆட்டோமான் துருக்கியர் செழித்தெழுந்து பாலஸ்தீனத்தைக் கைப்பற்றித் தொடர்ச்சியாக 1918-ஆம் ஆண்டு வரைக்கும் ஆண்டுவந்தார்கள். அப்போது முதல் உலக யுத்தத்தில் ஜயித்த வல்லரசுகள் துருக்கியரிடமிருந்து பாலஸ்தீனத்தைப் பிடுங்கிவிட்டன.

'பால்போர் பிரகடனம்' என்ற பிரசித்தி பெற்ற பிரகடனத்தை, 1917 - ஆம் ஆண்டு நவம்பர் மீ பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டது. 'பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குத் தாயகம் ஏற்படுத்தித் தருகிறோம்' என்பதுதான் பால்போர் பிரகடனம். அந்தப் பிரகடனம் வெளிவந்த போதும், சனியும் செவ்வாயும் உச்சத்தில் இருந்தார்கள் என்பதை இங்கே கவனிக்கவேண்டும். யுத்த வீடான தனுர் ராசியில் முஸ்லிம்களின் ஆட்சிக் கிரகமான ராகுவும், ரிஷபத்தில் சமாதான அதிபதியான குருவும் இருந்தார்கள். ஒரு விதத்தில் யூதர்களுக்குச் செவ்வாயும் அராபியருக்கு ராகுவும் ஆட்சிக் கிரகங்கள் என்று சொல்லலாம். பால்போர் பிரகடனத்துக்குப் பின்பு, யூதருக்கும் அராபியருக்கும் ஓயாத போராட்டமே நடந்துவருகிறது. "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு யூதர்கள் துணைபுரிந்து வருகிறார்கள்" என்று அராபியர் குற்றம் சாட்டி வந்ததில் சிறிது உண்மை இருக்கத்தான் இருக்கிறது.

சென்ற 26-வருஷ காலத்தில், வெவ்வேறான ஏழு கமிஷன்கள் பாலஸ்தீனத்துக்குப் போய் விசாரணை புரிந்தன. அடிப்படையான விஷயங்களில் அவற்றில் எதுவும் மற்றவற்றின் அபிப்பிராயங்களுக்கு மாறுபடவேயில்லை. பாலஸ்தீனத்தில் ஒரு பகுதியை யூதர்களுக்கென்று பிரித்துவிடலாம் என்று 1937-ஆம் ஆண்டு பீல் கமிஷன் யோசனை சொல்லியது. சமீபத்தில் ஐ. நா. பந்தோபஸ்துச் சபையும் அப்படியே தீர்மானித்தது. பீல் கமிஷனின் யோசனையை, அடுத்த வருஷத்திலேயே இன்னொரு பிரிட்டிஷ் கமிஷன் தள்ளிவிட்டது. பந்தோபஸ்துச் சபையின் தற்போதைய பிரிவினைத் திட்டமும் இன்று அப்படியே தள்ளுபடியாகிவிட்டது. ஆகவே பத்து வருஷத்துக்கு முன்னே பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொண்ட மாதிரியே இன்று ஐ. நா. சபையும் நடந்துகொண்டிருக்கிறது.

யூதர்களின் தேசிய உத்வேகமே பாலஸ்தீனப் பிரச்னைக்கு மூல காரணம். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், 'அலையும் யூத'னின் கர்ண பரம்பரைக் கதையை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். 4,000 வருஷ காலமாக யூதர்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்திருக்கும் சரித்திரம் இருக்கிறது. பன்னிரண்டு வம்சத்தினரான இஸ்ர

வேல் மக்கள் நாலு பிரிவாகப் பிரிந்து எகிப்தை விட்டு வெளியேறினார்கள். ஏழு என்ற எண் இஸ்ரவேல் மக்களுக்கு விசேஷமானது என்று தோன்றுகிறது. ஜெரிகோ நகரை இஸ்ரவேல் மக்கள் ஏழு முறை சுற்றிவரும்படி கடவுள் கட்டளையிட்டார். ஏழு புரோகிதர்கள் எக்காளம் தாங்கினார்கள். ஏழாவது நாள் அந்த எக்காளச் சத்தம் எழுந்தபோது, ஜெரிகோ நகரின் சுவர்கள் இடிந்து விழுந்துவிட்டன. வான மண்டலத்தைப் பின்பற்றி அமைந்த சாலமனின் ஆலயத்தைக் கட்டவும் ஏழு வருஷந்தான் பிடித்ததாம். டேவிட் என்ற அரசனுக்குப் பின் ஏழாவது தலைமுறையில்தான் எருசலேம் நகரை ரோமர்கள் அழித்தார்கள். பன்னிரண்டு வம்ச இஸ்ரவேல் மக்களும் வெவ்வேறு இடங்களில் சிதறிக் கிடந்தார்கள். அவர்கள் மேற்கூறியவாறு திரும்பிவந்து எருசலேம் நகரை மீண்டும் நிர்மாணம் செய்தார்கள். அப்போதுதான் முதல் முறையாக அவர்களுக்கு யூதர் என்ற பெயர் ஏற்பட்டது. அதன் பிறகு அந்தப் பெயரே இன்றுவரை வழங்கி வருகிறது.

கி. பி. 70-ஆம் ஆண்டு எருசலேம் நகரை டிட்டஸ் என்ற அரசன் ஆண்டுவந்தான். அப்போது அந்த நகரை ரோமானியர் படையெடுத்துக் கைப்பற்றினார்கள். உலகத்தில் அதற்குமுன் என்றும் கண்டிராத படுகொலை நடந்தது. 10 லட்சத்துக்கு மேற்பட்ட யூதர்களை ரோமானியர்கள் கொன்றார்கள். கடைசியாக ஆலயத்தைக் காத்து நின்ற யூதர்களை ரோமானியர்கள் கொன்று குவித்த பிணக்குவியல், தேவாலயத்தின் பலிபீடத்துக்கு மேல் உயர்ந்துவிட்டது. ஆலய வாசற்படியி லெல்லாம் ரத்தவெள்ளம் ஆறுய்ப் பெருகியது. இதற்கு ஏழு வருஷங்களுக்குப் பின்பு, ரோமானியரின் ஆட்சியை எதிர்த்து யூதர்கள் மீண்டும் புரட்சி செய்தார்கள். ஹேட்ரியன் என்ற ரோம அரசன் கி. பி. 130-ஆம் ஆண்டு யூதர்களுக்குத் தேசிய வாழ்வே இல்லாமல் அவர்களை அடியோடு நசுக்கிவிட்டான்.

யூதேயா தேசத்தின் ஜன்ம லக்கினம் கும்பம் என்று டாலமி குறித்திருக்கிறார். அவர்களின் ஆட்சிக் கிரகம் செவ்வாய். "கும்ப லக்கினமும் செவ்வாய்க் கிரகமும் உள்ளவர்களாதலால்தான், யூதர்கள் வீரராகவும் நாஸ்திகராகவும் துரோகிகளாகவும் இருக்கிறார்கள்" என்று டாலமி சொல்லுகிறார். டேவிட், சாலமன் இந்த இரண்டு அரசர்களின் ஆட்சியிலேயும் சிறிது காலம் கீர்த்தியோடும் சுபிட்சமாகவும் அவர்கள் வாழ்ந்தார்கள். மீண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்தப் பழைய கீர்த்தியும் சுபிட்சமும் அவர்களுக்கு ஏற்பட்டுத்தான் தீரும். தங்களுடைய தாயகம் என்று சொல்லிக்கொள்ள இடமில்லாமல் யூதர்களின் தேசிய வாழ்வு கி. பி. 130-ஆம் ஆண்டு அழிந்தபின்பு, அவர்கள் ரோம ஏகாதிபத்தியமெங்கும் சிதறிப் போனார்கள். வெளிநாடுகளுக்கும் போய்விட்டார்கள். என்றாலும், தங்களுடைய பழைய கீர்த்தியும் சுபிட்சமும் மறுபடியும் ஒரு நாள் தங்களுக்கு வரத்தான் போகின்றன என்ற பலமான நம்பிக்கையே அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை உண்டாக்கியிருக்கிறது.

அவர்களுடைய வேதத்தில் கடவுள் அவர்களுக்கு இவ்வாறு சொல்லுகிறார்: "உங்களை உங்கள் பிரபு மண்ணுலகின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரைக்கும் பற்பல தேச மக்க

ளிடையேயும் சிதறிப்போகச் செய்வார். ஒரு தேசத்திலும் உங்களுக்குச் சுகம் கிடைக்காது. உங்கள் வாழ்விலே நம்பிக்கைக்கு இடம் இராது. இரவிலும் பகலிலும் உங்களை ஓயாத பயம் சூழும். உங்களுக்கு எவரும் அபயம் அளிக்கமாட்டார்.'' இத்தனை நாளும் யூதர்கள் பட்டிருக்கும் ஹிம்சைகளைப் பார்த்தால், இந்தத் தீர்க்கதரிசனத்தின் உண்மை புலனாகும்.

யூதர்களின் சரித்திரத்தில் 475 வருஷங்களைக் கொண்ட ஒரு மண்டலம் முக்கியமானதாம். புராதனமான சால்டி நாட்டு ஜோதிஷர்கள் இப்படிச் சொல்லி யிருக்கிறார்கள். உதாரணமாக, கி. பி. 70- ஆம் வருஷத்தில் யூதர்களின் ஆலயத்தை டிட்டஸ் மன்னன் இடித்தான். அதிலிருந்து 475 வருஷகாலம் யூதர்கள் மங்கி யிருந்தார்கள். இன்னொரு 475 வருஷ காலம் அவர்கள் படாத பாடெல்லாம் பட்டார்கள். கி. பி. 981-ஆம் ஆண்டு மறுபடியும் அவர்களுக்குச் செழிப்பு ஏற்பட்டது. கி. பி. 1020-ஆம் வருஷத்தில் அவர்களை இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயர்கள் விரட்டிவிட்டார்கள். கி. பி. 1456- ஆம் ஆண்டு அவர்கள் மறுபடியும் பலம் பொருந்திய ஒரு ராஜீய கோஷ்டியானார்கள். 1970-ஆம் ஆண்டு யூதர்கள் மீண்டும் உச்சநிலை அடைவார்கள். அப்போது அவர்களிடம் செல்வம் கொழிக்கும்; உலகத்திலே அந்தஸ்தும் அதிகாரமும் ஏற்படும். 1993-ஆம் வருஷம் மீன ராசியின் முதல் பாதாம்சத்தில் சூரியன் பிரவேசிக்கிறான். இந்தக் காலத்தில் உலகத்திலே யூதர்கள் ஒரு வல்லரசாக விளங்குவார்கள். பாலஸ்தீனம், எகிப்து இந்த இரண்டு நாடுகளும் செல்வத்தில் செழித்தோங்கும்படி இவற்றை அவர்கள் வளர்த்துவிடுவார்கள். அதே காலத்தில் சனியும் ராகுவும் மேஷராசியில் ஆதிபத்தியம் செலுத்தும். அதனால் யூத ராஜ்யம் ஏற்பட்டுவிடும்.

தற்போதைய நிலையைப் பார்ப்போம். பாலஸ்தீனத்தை விட்டுப் பிரிட்டன் அகன்றதும், அதன் நிலைமை மிகவும் அபாயமாக இருக்கிறது. அங்கே யுத்தம் வந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். சமீபத்திய சூரியக் கிரகணத்தைப் பார்த்தால் வருங்காலப் பலனை ஓரளவு நாம் அநுமானிக்கலாம். கிரகண காலத்தில் எருசலேம் நகரில் கும்ப லக்கினத்தின் பத்தொன்பதாவது டிகிரி உதயமாகிறது; செவ்வாய் அநேகமாக அஸ்தமித்துவிடுகிறான். குழப்பம், அராஜகம், மத்தியக் கிழக்கு நாடுகளில் ஒரு யுத்தம் ஆகியவை நேரக்கூடும் என்பதையே இத்தகைய கிரக நிலை குறிப்பிக்கிறது. அராபியரும் யூதருந்தாம் யுத்தம் புரிவார்கள். ராகுவின் நிலை திருப்திகரமாயில்லை. குருவின் பார்வையால் ஏற்படக்கூடிய நன்மையைச் சனியின் பார்வை கெடுத்துவிடுகிறது. மேலும், பாலஸ்தீனத்தின் ஜன்ம லக்கினமான மேஷத்தில் இருக்கும் ராகுவின் நிலை திருப்திகரமானதல்ல. அராபியருக்குள்ளே ஒற்றுமையும் நீடித்த பலமும் இருக்க மாட்டா என்பதையே இது குறிப்பிக்கிறது. டிரான்ஸ்ஜோர்டான் அராபியருக்கும் ஸிரியா அராபியருக்கும் இடையே பொறாமையும் பிளவும் பலமாகும். பாலஸ்தீனத்தை விடுவிக்கவேண்டும் என்று அராபியர் கொண்டிருக்கும் உற்சாகம் வரவர மங்கிப்போகும்.

யூதர்களின் ஆட்சிக் கிரகமான செவ்வாயின் நிலையோ இதைவிட மேன்மையாக இருக்கிறது.

சூரியனுக்கும் செவ்வாய்க்கும் கிரக பரிவர்த்தனை வேறு நடப்பதால், இன்னும் மேன்மை உண்டாகும். அராபியரின் கிரகமான ராகு, யூதரின் கிரகமான செவ்வாய் இந்த இருவரையும் குரு பார்க்கிறான். ஆனால், சனியின் பார்வையிலிருந்து செவ்வாய் மட்டும் விலகிவிடுகிறான். செவ்வாய் இப்படிப் பலமான நிலையில் இருப்பது, யூதர்களுக்குச் சாதன வலுவும் குணவலுவும் இருப்பதைக் காட்டுகிறது. ஆனால், யூதர்களின் ஜன்ம லக்கினத்தில் கிரகணம் பிடிப்பதால், அவர்களுடைய மார்க்கம் கஷ்டம் நிறைந்துதான் இருக்கும்.

எருசலேம் நகரில் கும்பலக்கினம் உதிக்கிறது. இது ருஷ்யர்களின் ஜன்ம லக்கினம். ஆகவே மத்தியக் கிழக்கின் இந்த விவகாரத்தில் ருஷ்யா நுழைந்து கொள்ளும். அமெரிக்காவின் ஜன்ம லக்கினமான மிதுனம் நல்ல நிலையில் இல்லை. ஆகவே, அமெரிக்காவுக்கு விரோதமான உணர்ச்சிகள் அராபியரிடையே உண்டாகும்.

ஜோதிஷ ரீதியாகப் பார்த்தால், யூத ராஜ்யம் வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். நாம் எதிர்பார்ப்பதை விட அதி சீக்கிரத்திலேயே அது ஸ்தாபிதம் ஆகப் போகிறது. ஆனால் சிம்மத்தில் சனியின் சஞ்சார தோஷம் இருப்பதால் அடுத்த முப்பது மாதங்களில் அந்தப் புனித நாட்டில் பயங்கரமான கொலைகள் நடக்கத்தான் நடக்கும். அடுத்த ஆறு வருஷங்கள் யூதர்களுக்கு விசேஷமான காலமாகும். யூதேயாவின் ஜன்ம லக்கினத்தில் கிரகணம் பிடிக்கிறது. ஏழாவது வீட்டை விட்டுச் செவ்வாய் பெயர்கிறான். இதனால் உயிர்ச்சேதந்தான் அதிகமாகும். மத்தியஸ்தம் எதுவும் பயன்படாது. 1948-ஆம் ஆண்டு முழுவதும் தொந்தரவுகள் இருந்துகொண்டேயிருக்கும். இந்த வருஷத்தின் பலன்களை முன்னே நாம் எழுதும் போது, பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்:

"சூரிய கிரகண காலத்தில் பாலஸ்தீனத்தில் பயங்கரச் செயல்கள் உச்ச நிலையை அடையும். மிகவும் கொடிய தொத்துநோய் பரவும். யூதர்களும் அராபியரும் கைகலந்து போரிடுவார்கள்; ரத்த ஆறு ஓடும். இந்த விஷயத்தில் ஐ. நா. ஸ்தாபனம் ஒன்றும் செய்ய முடியாமல் வலிவிழந்து நிற்கும்." ('மஞ்சரி' டிசம்பர் - ஜனவரி இதழில் இந்த விஷயம் பிரசுரமாகியிருப்பதைக் காணலாம்.)

கன்யாலக்கினத்தில் சனி புகும் போது, அவனுடைய உபச்சாயை பாலஸ்தீனத்தின் ராசியிலிருந்து வீசும். தலைவர்களின் அதிகாரப் போட்டிச் சூழ்ச்சிகள் தொலைந்து சாதாரண மக்களுக்கு வெற்றி ஏற்படும் என்பதைக் குறிக்கும் சூசகம் இது. அப்போது அராபியப் பொதுமக்கள் விவேகத்தோடு நடந்துகொள்வார்கள். யூதர்கள் தீர்க்க தரிசனத்தோடு நடந்து கொள்வார்கள். இரண்டு ஜாதியாரும் ஒற்றுமைப்படுவார்கள். நம்பிக்கையளிக்கும் தீபஸ்தம்பம்போலப் புதிய பாலஸ்தீன ராஜ்யமும் உதயமாகும்.

யூதர்கள் ஏன் பாலஸ்தீனத்தைக் கண் கலங்கப் பார்க்கிறார்கள்? ஏனென்றால், தங்கள் தாயகத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று அவர்கள் கொண்டிருக்கும் ஆசை நியாயமானது. இரண்டாயிரம் வருஷகாலமாக யூதர்களுக்குத் தங்களுடையது என்று சொல்

விக்கொள்ள ஒரு தேசம் இல்லை; ஒரு ராஜ்யம் இல்லை; ஒரு தாயகம் இல்லை. அவர்களுடைய சரித்திரம் அடங்கிய ஒரே ஒரு வேத புஸ்தகத்தை நம்பித்தான் அவர்கள் ஊக்கமும் ஒற்றுமையும் கொண்டு வாழ்கிறார்கள். அந்தப் புஸ்தகத்திலே பல தீர்க்கதரிசனங் கள் அடங்கியிருக்கின்றன. அவற் றில் சில நிறைவேறிவிட்டன. மீதி உள்ளவையும் நிறைவேறும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அந்தப் புஸ்தகத்திலே கடவுள் கூறுகிறார்: "கடைசியாக நான் அவர்களை அவர் களுடைய தாயகத்துக்குத் திரும்பச் செய்வேன். அவர்களுடைய முன் னோர்களுக்கு நான் தந்த நாடு அது. தரிசு நிலங்களையெல்லாம் வளப்படுத் திக் கட்டிடங்கள் கட்டிக்கொண்டு அங்கே அவர்கள் வாழ்வார்கள்."

குழந்தைகளின் பொய்

பளபள என்று பிரகாசிக்கும் ஒரு 'பாண்டுவாத்திய' ஊதலை என் மகன் ஒரு நாள் கொண்டு வந்தான். "அடே, இதை எந்தக் குழந்தையிடமிருந்து பிடுங்கினாய்? அதனிடமே கொண்டுபோய்க் கொடுத்துவிடு" என்றேன். "நான் இதை எந்தக் குழந்தை யிடமிருந்தும் பிடுங்கவில்லை. வீதியிலேகூடக் கண்டெடுக்க வில்லை" என்று அவன் சாதித் தான். "பின்னே அது எப்படி வந்தது?" என்று கேட்டேன். "நானே செய்தேன்" என்று அவன் கூசாமல் சொன்னான். இதோடு நான் விட்டுவிட்டேன்.

வழுக்கி விளையாடும் தன் ஜோடு ஒன்றை என் மகள் தொலைத்துவிட்டாள். தெருவிலே நின்ற ஒரு மனிதன் அதைத் திரு டிக் கொண்டான் என்று அவள் சொன்னாள். "நீ ஏன் போலீஸ்காரனைக் கூப்பிட வில்லை?" என்று நாங்கள் கேட் டோம். "திருடினவனே ஒரு போலீஸ்காரன்தான்" என்றாள் அவள். "அவன் எதற்காக ஒரே ஒரு ஜோட்டைத் திருடப் போகிறான்?" என்று கேட்டோம். "அவன் ஒற்றைக்கால் முட வன்" என்றாள் சிறுமி. இதை யும் விட்டுவிட்டோம்.

இந்த மாதிரி பொய்களால் என் வாழ்வே சகிக்க முடியா மல் போய்விட்டது. உதா ரணமாக இதோ பாருங்கள்: சில நாளைக்கு முன் ஒரு நாள் ராத்திரி ஆபிசிலிருந்து புறப்பட்டேன். 'எலிவேட்ட'ருக்கு ஓடினேன். நான் உள்ளே நுழைவதும் கதவு மூடிக்கொள்வதும் சரி யாக இருந்தது. இந்த அவசரத் தில் நிலைப்படி நாதாங்கியில் என் 'நெக்டை' மாட்டிக்கொண்டது. நான் அந்தரத்தில் தொங்கி னேன். எலிவேட்டர் கீழே போய் விட்டு மறுபடி வந்தது. அப் போதுதான் எலிவேட்டர் சிப் பந்தி என்னை விடுவித்தான். இந்த அலங்கோலத்தில் எனக்கு ரெ யில் வண்டி தப்பிவிட்டது. "ஏன் இத்தனை நேரம்?" என்று மனைவி கோபித்துக் கொண் டாள். "சிநேகிதர்கள் ஓட்ட லுக்கு இழுத்துக்கொண்டுபோன தால் நேரமாகிவிட்டது" என்று சமாதானம் சொன்னேன்.

என் 'நெக்டை' எலிவேட்டர் நிலைப்படியில் மாட்டிக்கொண் டதை அவளிடம் நான் சொல்லி யிருந்தேனே, "ஓஹோ! குழந்தை களின் பொய்யைத் தூக்கியடிக் கிறதே உங்கள் பொய்!" என்று அவள் கூச்சலிட்டிருப்பாள்.

—சார்லஸ் டி. ரைஸ் (திஸ் வீக் மகஸீன்)

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: இன்பத்தை நாடும் முயற்சிக்கு எல்லை எது?

பதில்: இன்பமே எல்லை; முயற்சியே போராட்டம்.

* *

கே: சிலந்திகள் ஏன் தங்கள் வலையில் தாங்களே சிக்கிக்கொள்வதில்லை?

ப: அரசியல்வாதிகள்தாம் தங்கள் பொறியில் தாங்களே அகப்பட்டுக் கொள்வார்கள்.

* *

கே: விலங்குகள் சிந்திக்கின்றனவா?

ப: ஆம்; சிந்திக்கின்றன; மனித ஜாதியைக் காட்டிலும் அதிகமாக, முன்னுக்குப்பின் விரோதமின்றிச் சிந்திக்கின்றன.

* *

கே: பெண்கள் ஆண்களைவிடச் சிறந்தவர்களா? இழிந்தவர்களா?

ப: பெண் இனத்தைப் பொதுவாகப் பார்த்தால் ஆணினத்தை விடச் சிறந்ததுதான். ஆனால் பெண் ஆணுக்குத் தாய் என்பதை மறந்து விடக் கூடாது.

* *

கே: சாந்தமான பதில் கோபத்தை மாற்றிவிடுமா?

ப: கொள்ளைக்காரனிடம் பரீட்சித்துப் பார்த்து எனக்குச் சொல்லுங்கள்.

* *

கே: உணவு உடைக் கட்டுப்பாடுகளை எடுத்துவிட்டார்களே; என்ன ஆகும்?

ப: நிர்வாணக் கலை பெருகி உபவாசம் இருப்பது ஒரு தேசீய விளையாட்டாகிவிடும்.

* *

கே: நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். ஆனால் நான் அவளைப் பார்த்தால், அவள் வேறு எங்கேயோ பார்க்கிறாள். ஏன்?

ப: அவள் புத்திசாலியான பெண்; குருடி அல்ல. நம் பெண்மணிகள் இன்னும் நாகரிகமுள்ளவர்களாக இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

* *

கே: நான் ஒரு சோம்பேறி. நான் என்ன செய்யட்டும்?

ப: இப்போதைக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். சீக்கிரத்தில் உமக்குப் பசியெடுக்கும்; அப்போது நகர ஆரம்பிப்பீர். சோம்பேறித்தனத்துக்குப் பசிதான் சரியான மருந்து.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஏப்ரல். மே '48), பம்பாய்.

கே: உருவச்சிலைகளுக்கு ஆயிரக் கணக்காகப் பணத்தைச் செலவழிக்கிறார்களே. அதனால் என்ன பிரயோசனம்? இந்தப் பணத்தை ஏழைகளுக்கும் பட்டினி கிடக்கும் மக்களுக்கும் ஏன் உபயோகிக்கக் கூடாது?

ப: இந்தியாவைப் போன்ற நாடுகளில் ஏழைகளும் பசியுடையோரும் அந்தமின்றி நித்தியமான வஸ்துக்கள். பல காலமாக இந்தப் பட்டினிப் பட்டாள வரிசையை நிரந்தரமாக உண்டாக்கியதற்காக நம்முடைய அரசியல்வாதிகளை நாம் நினைவு கூர வேண்டாமா? வெண்கலத்திலும் பளிங்கிலும் அவர்களுக்குச் சிலை வைப்பதைவிட வேறு என்ன வழி நமக்கு இருக்கிறது?

* *

கே: நீங்கள் மரணத்துக்குப் பயப்படுகிறீர்களா?

ப: பயப்படுகிறவனாக இருந்தால், நான் கண்டனக்காரனாக இருக்க மாட்டேன்; கைதட்டுபவனாக இருப்பேனே.

* *

கே: ஸ்ரீமான் படேல் அவர்களே, உம்முடைய புகழைக் குறித்து நீங்கள் பெருமையடைவதுண்டா? உணவுச் சாலைகள், சினிமாக்கள், பூங்காக்கள், அகதிகளின் பாளையம் - எங்கே பார்த்தாலும் உம்முடைய பெயர் அடிபடுகிறதே!

ப: பாங்கிகளில் இல்லையே!

* *

கே: டாக்டர்கள் நர்ஸ்களை 'ஸிஸ்டர்ஸ்' - சகோதரிகள் - என்று அழைக்கிறார்கள். பட டைரெக்டர்கள் நடிகைகளை எப்படி அழைக்கிறார்கள்?

ப: பட டைரெக்டர்கள் அவ்வளவு வேஷதாரிகள் அல்ல; அவர்கள் டாக்டர்களைவிட நேர்மையுள்ளவர்கள்.

கே: நாம் உண்மையாகச் சுதந்தர இந்தியாவில் இருக்கிறோமா?

ப: உமக்கு ஜுரம் கிரம் வந்து மயக்கம் வந்துவிடும்போலிருக்கிறதே!

* *

கே: குடிகாரக் கணவனைப் பக்தியுள்ள மனைவி எவ்வாறு குணமாக்கலாம்?

ப: குடிக்கும் பழக்கம் ஒரு வியாதி. டாக்டர்தான் அதை மாற்ற வேண்டுமே ஒழிய மனைவி அல்ல.

* *

கே: லக்ஷ்யப் பெண்ணின் இலக்கணத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

ப: தாய்.

* *

கே: எங்கும் பரந்துள்ள கடவுளை வணங்கக் கோவிலுக்கோ, மசூதிக்கோ, மாதா கோவிலுக்கோ போகவேண்டியது அவசியமா?

ப: நான சிற்பக்கலையைத் தெரிந்து மகிழக் கோவிலுக்குப் போகிறேன்; அப்படியிருந்தும் இன்னும் கடவுள் நம்பிக்கை என்னிடம் இருக்கிறது. கோவிலில் கடவுள் இருப்பதாக இருந்தால் மனிதர்கள் அவரைத் தரிசிப்பார்கள்.

* *

கே: சுதந்தர இந்தியாவின் முதல் ரெயில்வே வரவு செலவுக் கணக்கைப்பற்றி உங்கள் உண்மையான கருத்துக்களைச் சொல்லுங்கள். கட்டணங்களை உயர்த்தினது சரியா?

ப: அந்த வண்டிகள் ஓடவேண்டுமே; அதற்கு வெள்ளிச் சக்கரங்களல்லவா வேண்டியிருக்கின்றன?

* *

கே: தூய ஒழுக்கம் என்பது என்ன?

ப: தனி மனிதனையே பொறுத்த நற்குணம் அது; அரசாங்கத்துக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு வித புருஷர்; சுவாமி விவேகானந்தர் மற்றொரு விதம். அவரை இவர் பின்பற்றிய காரணம்?

எங்கள் கண்ணிலே

ஹல்லம் டென்னிஸன்

மேல்நாட்டிலிருந்து வரும் நாங்களெல்லாம், ரோமன் ரோலண்ட் எழுதியுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சரித்திரத்தைப் படிக்கிறோம். அதிலிருந்துதான் முதல் முதலில் பெரும்பாலும் அவரைப் பற்றி அறிந்துகொள்ளுகிறோம். இதன் பிறகு 'எம்' என்பவர் எழுதியுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களைப் படிக்கிறோம். அப்போது எங்களுக்குச் சிறிது திகைப்பும் ஏமாற்றமும் ஏற்படுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஜன சமூகத்திலே பிரமாத அந்தஸ்து வாய்ந்த மத குருவாக ரோலண்ட் சித்திரிக்கிறார். அவருடைய உபதேசங்களைப் படிக்கும் போதோ அப்படி அவர் சிறிதும் ஒரு மதத் தலைவராக இல்லை; சித்தியடைந்த ஒரு யோகியாகவே விளங்குகிறார்.

அவருடைய அளவற்ற ஆத்மவசீகரத்தாலும் உபமான உபமேயக் கதைகளாலும் கவரப் பெற்றுப் பல சிஷ்யர்கள் அவரைச் சூழ்ந்துவிட்டார்கள். அவர்களுக்குள்ளே குருநாதரிடம் பெரிதும் மனத்தைப் பறிகொடுத்தவர் விவேகானந்தர். அவருடைய மனோபாவமும் நோக்கமும் வேறு விதமானவை. என்றாலும், குருநாதருக்குத் தம்மை அவர் பரிபூர்ணமாய் அர்ப்பணம் செய்து கொண்டார். குருநாதர் தொடங்கிய காரியத்தை நடத்திவரும் பொறுப்பு இவர்மீது சுமந்தது ஒரு விசித்திரமாகும். அந்தக் காரியத்தை இவர் முற்றும் வேறு வகையில் நிறைவேற்றினார். இதைக் கண்டு தான், மேல்நாட்டினராகிய நாங்கள் ஒன்றும் புரியாமல் திகைக்கிறோம். விவேகானந்தர்தாம் ஒரு பெரிய மத குருவாக மாறினார். சமாதியையும் தங்கள் சொந்த ஜீவன்முக்தியையும் சிஷ்யர்கள் தேடிக்கொண்டிராமல், வேறு வேலை செய்ய அவர்களை அடியோடு திருப்பிவிட்டார் விவேகானந்தர். சமூகப் பொறுப்புக்களை உதறித் தறவு பூண வேண்டும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசித்தார். ஆஸ்பத்திரி கட்டுபவர்களைப் பார்த்து, 'மனிதனின் தவிர்க்க முடியாத துன்பங்களை இவர்கள் தீர்க்கப் பார்க்கிறார்களே!' என்று எண்ணிச் சிரித்தார். ஆனால் விவேகானந்தரின் தலைமையிலோ, சகல விதமான சமூக சேவைகளையும் சிஷ்யர்கள் செய்துவரத் தொடங்கினார்கள்.

இதற்கு என்ன காரணம்? பல காரணங்கள் உண்டு. சம்பிரதாயமான ஒரு காரணமும் சொல்லுகிறார்கள். அது வருமாறு: கலியுகத்தின் இருள் சூழ்ந்த காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்தார். உலகப் பொருள்களில் வைத்த பற்றி

காப்பிரைட்: விசுவபாரதி க்வார்ட்டர்லி (ஆங்கிலம்: நவம்பர் '47-ஜனவரி '48), சாந்திநிகேதனம், வங்காளம்.

விருந்து மனிதர்களின் ஆத்மாவை மீட்பதே அவருடைய காரியமாக இருந்தது. சிஷ்யர்களுக்குத் தெய்வ பக்தி என்ற லாகிரி ஏற்பட்டுவிட்டது. இனி அவர்கள் 'கொந்தளிக்கும் சம்சார சாகரத்தில் எவ்விதப் பயமுமின்றிக் குதிக்கலாம்'. ராமகிருஷ்ண மடம் எந்தச் சேவையை மேற்கொண்டாலும் சரிதான்; அந்தச் சேவைக்கு மூலவேர் ஆத்மிக வாழ்வாகவே இருக்கும். இதை ராமகிருஷ்ண மடத்தினர் ஒரு போதும் மறப்பதில்லை. என்றாலும், விவேகானந்தர் இல்லாவிட்டால் ராமகிருஷ்ண இயக்கம் வளர்ந்திராது; தொடங்கியபடியே இருந்திருக்கும். விவேகானந்தர்தாம் சமூக சேவையை உபதேசித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெய்வ தரிசனம் பெற்றவர். அது ஆனந்தமயமான தரிசனம்; உலகத்திலேயே மகா அபூர்வமான தரிசனம். சைதன்யரும் வேறு சில வைஷ்ணவக் கவிஞரும் இம்மாதிரி தரிசனம் பெற்றிருக்கிறார்கள். அந்த ஐதிகத்துக்கு நன்றாய்ப் பொருந்துகிறது ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெற்ற தரிசனம். ஆனால், அவர்களுடைய தரிசனம் இளகிய மன உணர்ச்சி ரீதியானது. இவருடைய தரிசனமோ அப்படிப்பட்டதல்ல; வலிமையானது, தன்னம்பிக்கை நிறைந்தது. "பந்தமென்பது மனத்திலே பிறந்தது. சுதந்தரமும் அப்படிப்பட்டதுதான். நான் சுதந்தர ஆத்மா; நான் காட்டிலே இருந்தாலும் நாட்டிலே இருந்தாலும் என்னை எதுவும் பந்தப்படுத்தாது. நான் தேவபுத்திரன், ராஜாதிராஜனின் குமாரன். என்னைப் பந்தப்படுத்த யார் இருக்கிறார்கள்? 'நான் பந்தப்பட்டுக்கிடக்கிறேன், பந்தப்பட்டுக் கிடக்கிறேன்' என்று ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கும் மூடனே, தனக்குப் பந்தத்தைத் தேடிக்கொள்கிறான்" என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இந்த ஆத்மானந்தம் வேதாந்தத்திலேயே தென்படுகிறது. ஆத்மாவைப் 'போக்தா' என்று உபநிஷத்துக்கள் சொல்லவில்லையா?

பிரபஞ்சமெல்லாம் பரமாத்ம சொரூபமே. தீமையும் இயற்கையேயாகும். ஆகையால், தீமையை எதிர்த்துப் போராடலாகாது. ஞானிக்கு ஒரே வழிதான் உண்டு. நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்டவனாக அவன் உயர்ந்தெழ வேண்டும்; படைப்பின் மாயையிலிருந்து விடுதலை பெற வேண்டும். கொள்ளைக்காரர்களும் கொலைபாதகர்களுங்கூடத் தடையின்றித் தங்கள் வேலையைச் செய்துகொண்டு போகட்டும். சிருஷ்டியில் அவர்கள் பிரம்மத்தின் நாசசக்திகள். அவர்களும் காளியை உள்ளன்போடு வணங்குவார்களானால், அவர்களுடைய செயல் புனிதமாகும். காளியிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டிய மனோபாவத்தை நாம் இங்கே கவனிக்கவேண்டும். ஹிந்து வாழ்க்கையில் மீண்டும் ஒரு லட்சியத்தை அவர் எப்படிப் புகுத்தினார் என்பதை அப்போதுதான் நாம் கண்டுகொள்ள முடியும். இதுபற்றி மிகச் சில குறிப்புக்களே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களில் தென்படுகின்றன. ஆனால் அந்தக் குறிப்புக்களை நாம் பொருத்திப் பார்த்தால், ஒரு சித்திரம் புலனாகும்.

பரமாத்மாவை விட்டுப் பிரிந்த ஜீவாத்மா மீண்டும் பரமாத்மாவை அடைய உள்ள மார்க்கம் மாயையே. அந்த மாயையின் மூலமே பரமாத்மாவும் தம்மைப் படைப்பிலே வெளிப்படுத்திக்கொள்கிறார். ஆத்மாவின் இந்த அம்சந்தான் மாயை. ஒருவன் தன்னை மறந்து உலகத்தைச் சற்றுக் கவனித்துப் பார்க்கும்

போது, படைப்பின் பயங்கரம் புல னாகும். பரமாத்மாவைப் பிரிந்த ஜீவாத்மாவுக்கு இந்த உலகம் பிணக் குவியல் அடங்கிய ஒரு பிரம்மாண்ட மான மயானமாகவே தோன்றும். 'பிரம்மத்தின் பயங்கரம் உறையி லிருந்து உருவிய வாளைப்போன் றது' என்று கடோபநிஷத் சொல்லு கிறது. காளி தன் கையிலே பிடித் திருக்கும் தலைமுண்டத்தைப் பக்தன் பயத்தோடும் ஆச்சரியத் தோடும் பார்க்கும்போது அவன் கொள்ளும் மனோபாவமே இது. தான் பரமாத்மாவிடமிருந்து பிரிந்து நிற்கும் நிலையை அழித்துவிட்டு, இந்தப் பிரம்மாண்டத்திலே தானும் ஒரு பகுதியே என்று உணர்ந்து கொண்டு அவன் வாழும்போது, இந்த உலகம் பயங்கரமாக இராது. அப்போது காளியின் மண்டை யோட்டு மாலையும் உருவிய வாளும் மறந்து போகின்றன. ஸ்ரீ ராம கிருஷ்ணர் இதைத்தான் பின்வரு மாறு சொல்லுகிறார்: "என் அன்னை வெளிக்குப் பயங்கரமாய்த் தோன்று கிறாள். ஆனால், அவள் இருதயத் திலே கருணை நிறைந்திருக்கிறாள்."

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இந்த மனோபாவத்தைத்தான் முதலிலே விவேகானந்தர் ஆட்சேபித்தார். பின்னால் இதுவே அவருக்கும் குரு நாதருக்கும் ஆழ்ந்த பிணைப்பை ஏற் படுத்தியது. "இனிமையிலும் மகிழ்ச்சியிலும் அன்னையைக் காண் பது போலவே, தீமை, பயங்கரம், துக்கம், நாசம் ஆகியவற்றிலும் அவ ளைக் காணக் கற்றுக்கொள்ளுங்கள்... அன்னையே, மூடர்கள் உன் கழுத் திலே மலர்மாலையைச் சூட்டுவார் கள்; அதன் பின்பு, பயந்து நடுங்கி ஓடிக்கொண்டே 'கருணைக்கடலே!' என்று உன்னைக் கூவுவார்கள். ...மரணத்தையே தியானியுங்கள்; பயங்கரத்தையே வணங்குங்கள். பயங்கரத்தை வணங்குவதன் மூலமே பயங்கரத்தை வென்று அமர நிலையை அடையலாம். ஹிம் சையை அநுபவிப்பதிலும் ஆனந்தம் உண்டு...அன்னையும் பிரம்மமே யாவாள்; அவளுடைய சாபமும் வாழ்த்தேயாகும். நம் உள்ளம் ஒரு மயானமாகவேண்டும் - அகந்தை, சுய நலம், காமம் ஆகிய அனைத்தையும் சுட்டெரிக்கும் மயானமாக" என் கிறார் விவேகானந்தர். மேலும் அவர், "அவசியமானால் சாவைத் தேடு; வாழ்வை அல்ல. வாள் முனை யிலே பாய்ந்து விழுந்து, என்றென் றும் பயங்கரத்திலே ஐக்கியமாகி விடு" என்று சொல்லுகிறார்.

வாழ்க்கையின் பயங்கரத்துடன் போராட வேண்டும்; அதைக் கட் டித் தழுவ வேண்டும். கிறிஸ்தவர்க ளைப்போல் அதை மறக்கவோ மறுக் கவோ கூடாது. பக்தி மிக்க ஹிந் துக்களைப்போல் அதைவிட்டுத் தப்பி ஓடவும் கூடாது. "மனித இயற்கை யின் மாட்சியை ஒரு நாளும் மறவா தீர்கள். நாமே உன்னதத் தெய்வம்... கிறிஸ்துக்களும் புத்தர்களும் நான் என்ற எல்லையற்ற சமுத்திரத்தின் அலைகளேயாவர்" என்கிறார் சுவாமி. விவேகானந்தரைப் போன்ற இப்ப டிப்பட்ட ஒரு புருஷனே இந்தியா வைச் சீர்திருத்தும் வேலையை மேற் கொள்ள ஏற்றவர். இந்தியா தன் சொந்த ஜதிகங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், மேல்நாட்டினரின் பர பரப்பான வாழ்க்கையைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றிவிடாம லிருக்கவும் உதவியது அவருடைய சீர்திருத்தப் பணி.

'இந்தியா செயலற்று ஓய்ந்து கிடந்ததால் விளைந்த தீமைகளைக் களையவேண்டுமானால், அது மகா மும்முரமாயக் கடுமையாய் உழைக்கவேண்டும். ஆகையால், மேல்நாட்டு நாகரிகத்தைக் கண்டும்

விவேகானந்தர் பதறவில்லை. இந்தியாவின் ஆத்மிக வாழ்வு உரமாகவும் உண்மையாகவும் இருக்குமானல், அது எதற்காக அஞ்சவேண்டும்? ஸயின்ஸைப்பற்றி அவர் கொண்டுள்ள அபிப்பிராயத்தைப் பார்க்கலாம். மகோன்னதமான வேத காலத்தில் ஸயின்ஸுக்கும் மதத்துக்கும் கூட்டுறவு இருந்திருக்கிறது. சுவேதகேது ஒரு பழத்தைக் கொண்டுவந்தான். அதன் விதையை இனிப் பிரிக்க முடியாதென்ற அளவுக்கு அணு அணுவாகப் பிளந்தான். இந்த அணுக்களுள் ஒவ்வொன்றிலும், அந்த ஒவ்வொன்றையும் சதகூறிட்ட பரமாணுக்கள் ஒவ்வொன்றிலுங் கூடப் பிரம்மன் இருக்கிறான் என்று அவனுக்கு அவனுடைய தந்தை சொன்னார். இதிலிருந்தே யோகாப்பியாச முறைகள் பிறந்தன; அவை அறிவாராய்ச்சிக்குச் சிறிதும் விரோதமாகச் செல்லவில்லை. மேலும், ஸயின்ஸ் ரீதியான உண்மையை விளக்கும் பிரசித்தமான பல புராணக் கதைகளும் இதிலிருந்து பிறந்தன; அவை வேறு எந்த மதத்திலும் தென்படாத அபூர்வமாகும். ஆனல், விவேகானந்தர் தோன்றிய காலத்தில், மேல்நாட்டு மக்களை ஸயின்ஸ் என்ற பிஞ்சில் பழுத்த குழந்தை மயக்கிக் கொண்டிருந்தது. அதன் பலனாக மதத்தை அவர்கள், ஒன்று அடிமைபோல் பின்பற்றினார்கள்; அல்லது அடியோடு மறுத்தார்கள். "மதமும் சரி, ஸயின்ஸும் சரி; இரண்டுமே நம்மை நமது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பிறந்த இரண்டு முயற்சிகள். ஆனல், அந்த இரண்டிலும் மதம் புராதனமானது; அது புனிதமானது என்ற ஒரு குருட்டு நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது" என்று இந்தச் சமயத்தில் சுவாமி விவேகானந்தர் எழுதினர்.

அந்தப் பிஞ்சில் பழுத்த குழந்தை இன்று ஓர் அசுரனாக வளர்ந்துவிட்டது. பிரபஞ்ச வாழ்வுத் திட்டத்திலே அதை இணைத்து ஜீர்ணித்துக் கொள்ள முடியாமல் இன்னமும் எங்கள் மதகுருமார் திண்டாடுகிறார்கள். இப்போது காலம் கடந்துவிட்டது. ஸயின்ஸ் நிபுணர்களும் தத்துவதர்சிகளும் அந்த வேலையை எங்கள் மதகுருமாரின் கைகளிலிருந்து பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள். அந்தத் தத்துவதர்சிகளும் ஸயின்ஸ் நிபுணர்களும் இப்போது ஓர் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஐம்பது வருஷத்துக்கு முன்னே விவேகானந்தர் கண்ட ஒரு முடிவுடன் இந்த உண்மைதான் எவ்வளவு நெருக்கமாய்ப் பொருந்துகிறது! விவேகானந்தர் தம்முடைய கடைசி வியாசங்களுள் ஒன்றில் எழுதினர்: "பௌதிக உலகின் ஒருமையைக் காண்பதே உலகாயத ஸயின்ஸ்." 'நியூட்ரல் மானிஸம்' என்ற தமது தத்துவ ஆராய்ச்சியில் பெர்ட்ராண்ட் ரஸ்ஸலும், 'ஹோலிஸம்' என்ற தமது தத்துவ ஆராய்ச்சியில் ஸ்மட்ஸும், 'ரெலடிவிடி' குறித்தும் ஒளியைப்பற்றிய 'க்வாண்டம் தியரி' குறித்தும் தந்துள்ள தங்கள் தத்துவ ரீதியான விளக்கங்களில் பிளாங் என்ற ஸயின்ஸ் நிபுணரும் ஐன்ஸ்டீன் என்ற ஸயின்ஸ் நிபுணரும் கண்டிருக்கும் முடிவு இதுவேயல்லவா? பழமையானதும் ஆனல் இன்னமும் ஜீவனேடு இருப்பதுமான ஒரு மத ஐதிகத்துக்கு உட்பட்டவாறே இந்த முடிவை உலகத்தின் ஒரு பாகத்திலாவது மக்கள் கண்டு கொண்டிருக்கிறார்களே என்று நான் சந்தோஷிக்கிறேன். அதற்கு ஓரளவு பொறுப்பு ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் சுவாமி விவேகானந்தரையும் சேர்ந்ததென்று நான் நம்புகிறேன்.

நகைச்சித்திரம்



பிரசங்கி: சகோதர சகோதரி களே, எழுங்கள்! விழிப்படையுங் கள்!......

—மனோஹர்.



"இன்னும் பத்தே பத்து நிமிஷம் பொறு. அது உன்னை விட்டு விடும்!"

—வஸந்த்.

கனவான்: சகோதரிகளே, நீங்கள் சிறிது பேசாமல் இருந்தீர் களானால், இந்த நீர்வீழ்ச்சியின் இனிய ஓசையைக் கேட்கலாம்.

—ஸ்த்ரீ.



புரொபஸர் மாதவனின் ஞாபக மறதி.

—கொறவஞ்சி.



பிளேக் உற்பத்தி ஸ்தலங்கள்

—அமிர்த பஜார் பத்திரிகை

'கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்' என்றார் தாயுமானார். 'அதிலே மந்திரம் இல்லை, மாய மில்லை; எல்லாம் தந்திரந்தான்' என்கிறார் சர்க்கஸ்காரர்.

சிங்கத்தைப் பழக்கும் வழி

எம். கே.

"ஆமாம், நீங்கள் சொல்வது சரி. இந்தக் கோலுக்குள் ஏதோ மாய மின்சாரம் புகுந்துகொண்டிருக்கிறதாம்; இதைக் கொண்டு ஒரு தடவை தொட்டால் சிங்கம் புலி சிறுத்தை கரடி எல்லாம் வசமாகிவிடுகின்றனவாம்! இப்படித்தான் ஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று பரிகாசச் சிரிப்போடு, அந்த ஆசாமி கூறினார். அவர் சிங்கத்தைப் பழக்குகிறவர்.

"இதோ பாருங்கள், கோலை. இதை நன்றாக நீங்களே சோதனை போட்டுப் பாருங்கள். என்ன சொல்கிறீர்கள்? இது என்ன வெறுங் கோல்தானே? மிருகங்கள் கடித்துச் சுவைத்ததனால் இதன் முனை அப்படிப் பிசிர்பிசிராக இருக்கிறது. அவ்வளவுதான். அபின் கொடுப்பார்கள், பட்டினி போடுவார்கள், ஹிப்னாடிஸத்தால் வசமாக்குவார்கள் என்றெல்லாம் ஜனங்கள் சொல்கிறார்களே; அவ்வளவும் வெறும் பிரமை. சில புலிகள் எலும்புந்தோலுமாய் இருக்கின்றன; அதற்கு வியாதியோ வேறு எதுவோ காரணமாக இருக்கலாம். வசப்படுத்தும்பொருட்டுப் பட்டினி போட்டோம் என்று நினைக்கக்கூடாது. பட்டினி போட்ட சிங்கமானாலும், தின்று கொழுத்த சிங்கமானாலும், அபாய விஷயத்தில் இரண்டும் ஒன்றுதான். சின்னக் குட்டிகளாக இருக்கும்போதே பழக்குகிறோம் என்று நினைக்கிறார்களே, அதுவும் பொய். எனக்கு இந்த வித்தையைக் கற்றுக் கொடுத்த வாத்தியார் ஜெர்மானியர்.

"நன்றாக வளர்ந்து மூன்றரை அடி உயரமும் எட்டு முதல் ஒன்பதடி நீளமும் உள்ள மிருகங்களையே அவர் பழக்கிவந்தார். அது அவருடைய பைத்தியக்காரப் பழக்கமென்றா நினைக்கிறீர்கள்? இல்லை, இல்லை. துஷ்ட மிருகங்களைப் பழக்குவதற்கு அதுதான் முறை. குட்டிகள் சுலபமாகப் பயப்படக் கூடியவை; நாசுக்காகப் பழக வேண்டியவை. அவற்றை அடிக்காமல் மெத்தென்று பழக்கவேண்டும். தட்டிக்கொடுத்து அடிக்கடி ஆகாரம் கொடுக்கிறது ஒன்றுதான் சரியான வழி. இது நல்ல வழிதான்; ஆனால் உயிருக்கே அபாயம் விளைக்கும். அவை உங்களிடம் பிரியத்தோடு இருக்கும்; நாயைப்போலப் பின் தொடர்ந்து வரும். அப்படி அவற்றைப் பழக்கிவிட்டால் பிறகு அடிக்கக்கூடாது. அடித்துப் பாருங்கள், உடனே உங்கள்மேல் பாய்ந்துவிடும். வளர்ந்த பெரிய புலியையோ

காப்பிரைட்: ஓரியெண்ட் (ஆங்கிலம்: 4-4-'48), கல்கத்தா.

சிங்கத்தையோ பழக்குவதைப் போலத்தான் குட்டிகளைப் பழக்க வேண்டும்.

"சிங்கத்தையோ புலியையோ பழக்கவேண்டுமானல் பதினைந்து முதல் இருபது நாள் பிடிக்கும்; சிறுத்தைக்கும் அதிக காலம் பிடிக்கும்; ஒரு மாசம் முதல் ஒன்றரை மாசம்வரை ஆகும். கருஞ் சிறுத்தை தான் அதிகக் கஷ்டத்தைத் தருவது. நான் ஒரு கருஞ்சிறுத்தையை மூன்றுமாச காலத்தில் வழிக்குக் கொண்டுவந்திருக்கிறேன். ஒவ்வொரு வேலையிலும் பழக்கும்போது வேலை முடிந்தவுடன் ஒரு பிரம்பின் நுனியில் சிறிது மாமிசத்தை வைத்துக் கொடுக்கவேண்டும்; இது ஒரு வசிய முறை.

"இந்த வித்தையில் பிரமாதமான ஏற்பாடுகள் அதிகம் இல்லை. வேலை பழகும் வட்டத்தில் புலி இருக்கும்போது அதை மூன்று கயிறுகளால் கட்டி, ஒவ்வொரு கயிற்றையும் வெளியிலே உள்ள ஒவ்வொரு மூலையில் கட்டியிருப்பார்கள். மூலைகளின் பக்கத்தில் வேண்டிய நீளத்தில் கயிற்றை இழுத்துப்பிடிக்கத் தயாராக மூன்று பையன்கள் இருப்பார்கள். பழக்குகிறவனுடைய உயிர் அந்தப் பையன்கள் கையில் தான் இருக்கிறதென்று சொல்ல வேண்டும். அவர்களுக்கு ஜாக்கிரதை, வேகம், தைரியம், நம்பிக்கை இத்தனையும் இருப்பது மிகவும் அவசியம்.

"புலியைக் கட்டியாயிற்று; மூலைகளுக்குப் பக்கத்தில் பையன்கள் தயாராயிருக்கிறார்கள்; வட்டத்தில் தனியாக இருக்கிறான் புலியைப் பழக்குகிறவன். பழக்குகிற காலங்களில் பழக்குகிறவன் ஒருவன்தான் புலியோடு இருக்கவேண்டும். கூட்டைத் திறந்து புலியைவிட்டாயிற்று. புலி பாயுமென்று நினைக்கிறீர்கள்? இல்லை, அது பாயாது. அது அப்படியே தொப்பென்று நாலு பக்கத்திலும் நாலுகாலைப் பரப்பிக்கொண்டு தரையில் வயிறு படும்படி விழுந்துவிடும். அதை எழுப்பவேண்டுமானல் அடிக்கவேண்டும். அடித்தால் அதன் கோபம் அதிகமாகும்; பழக்குகிறவன்மேல் பாயும். ஆனல் ஜாக்கிரதையாகக் கட்டியிருப்பதனல் ஆள்மேல் தாவ முடியாது. அப்போது கயிறு நழுவிற்றே, ஆபத்துதான்; பழக்கவந்தவர் தொலைந்தே போவார். சவுக்கால் பளீர் பளீரென்று நாலு அடி கொடுத்தால் புலி படிமானத்துக்கு வரும். பேசாமல் படுத்துக்கொள்ளும்; பாயாது. பிறகு மெதுவாகக் கயிற்றைத் தளர்த்தவேண்டும்.

"பையன்கள் மிகவும் ஜாக்கிரதையாகக் கயிற்றை அளவறிந்து தளர்த்தவேண்டும். புலி அருகிலுள்ள ஸ்டூலின் பக்கத்தில் போய் அதன்மேல் காலைவைக்கும் அளவுக்கு அந்தக் கயிற்றை விடவேண்டும். இது முதல் படி. அப்போது ஒரு பெரிய கழியின் நுனியில் மாமிசத்தை வைத்துப் புலிக்குக் கொடுக்கவேண்டும். அதை வெகு பிரியத்தோடு புலி விழுங்கிவிடும். மறுபடியும் கயிற்றை இழுத்துப் பழைய நிலைக்குப் புலியைக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது அதற்குப் பிரமாதமான கோபம் உண்டாகும். முன்னலே சவுக்கால் வீசினதுபோல — சற்று மெதுவாக — அதை வீசினல் படிந்துவிடும். இன்னொரு முறை கயிற்றைத் தளர்த்தி அதை ஸ்டூலின் பக்கத்தில் போகச் செய்ய வேண்டும். ஸ்டூலுக்கு அருகில் போவதும் தன் இடத்துக்கு வருவதுமாக இப்படி மாறி மாறி அதைப் பழக்க வேண்டும். இந்தப் பழக்கம் கை

வந்துவிட்டால் மற்றவையெல்லாம் சின்னச் சமாசாரங்கள். இதிலிருந்து சுலபமாக ஒன்றன்பின் ஒன்ருகப் பல வித்தைகளைப் பழக்கிவிட லாம். ஓர் இரும்பு வளையத்தினூடே புலியைப் பாயச் செய்யலாம்; ஒரு மனிதனின் தோள்மேல் முன்காலை வைத்து நிற்கச் செய்யலாம். புலி ஸ்டூலின்மேல் கால் வைத்திருக்கும் வரையில் அதன்மேல் ஏறிக்கொள் ளலாம்; அதைத் தழுவிக்கொள்ள லாம்; இன்னும் என்ன என்னவோ வித்தைகளையெல்லாம் செய்யலாம். புலியை ஸ்டூல்மீது அமர்த்திய நிலையில் சவுக்கடி கொடுத்தும், தட்டிக்கொடுத்தும், உணவு அளித்தும், அது சாதுவாக இருக்கும்படி அதைப் பழக்கி யாகிவிட்டதல்லவா? அந்த நிலை யில் அதற்கு நாமே எஜமான். வட் டத்துக்குள்கூட ஸ்டூலில் உள்ள வரைக்கும் அப்படித்தான்; ஆனல் கூட்டுக்குள் போய்விட்டால் அது நமக்கு எஜமானகிவிடும்.

"பழக்குகிறவர்கள் அசந்து மறந்து கூட்டுக்கு மிக நெருக்கமாகப் போய் அபாயம் நேர்ந்த சம்பவங்கள் பல. இதோ என் முன்கையைப் பாருங் கள். அந்தக் கூட்டில் இருக்கிற ராமு என்ற பெண்புலி பண்ணின காயம் இது. குட்டியாக இருந்த காலம் முதல் அதை என் மடியில் வைத்து வளர்த்திருக்கிறேன். வட்டத்துக்குள் இருக்கையில் அது பூனைதான். ஆனலும், அதன் மேல் மருந்தைத் தெளிக்க நான் கூட்டுக் குள் போனபோது என்னைத் தன் காலால் பிருண்டிவிட்டது.

"அதோடு எப்படி என்னை விட்டது என்று நீங்கள் கேட்கலாம். அதன் பெயரைச் சொல்லி அழைத்து முதுகில் தட்டிகொடுத்தேன். ஆம், புலியை வசப்படுத்த இதுவும் ஒரு வழி. பழக்கும்போது அதை ஒரு குறிப்பிட்ட பெயரால் அடிக்கடி அழைக்கிறோம்; அது அந்தப் பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள் ளும் வரையில் அழைத்துப் பழக்குகி றோம். கோபமாக இருந்தாலும், வேறு புலியோடு சண்டையிடும் நிலையில் இருந்தாலும் அதன் பெய ரைச் சொல்லி அழைத்தால் அநேக மாக அபாயத்தை நிவர்த்தி செய்ய லாம். 'ராமு, ராமு' என்று கூவிய படியே ஸ்டூலின்மேல் பிரம்பைத் தட்டவேண்டும். இப்படிச் செய்தால் புலி தன் இடத்துக்குப் போய் விடும். எப்போதும் இப்படியே நடக்கும் என்று மாத்திரம் சொல்ல முடியாது. அபாயம் உண்டென்பது உண்மை; ஆனல் அவ்வளவு அதிக மென்று சொல்வதற்கில்லை. புலி எப்போது நம்மைத் தாக்குமென் பதை எளிதில் முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியும்.

"சரி, விட்ட இடத்துக்கு வரு வோம். புலியானது இப்போது ஸ்டூலினிடம் வரவும், அங்கே அமைதியாக நிற்கவும், நாம் சொன்னபோது தன் இடத் துக்குப் போகவும் பழக்கம் செய்து கொண்டது. முதல் கட்டம் பூர்த்தி யாயிற்று. கயிற்றை யெல்லாம் அவிழ்த்துவிட்டு, கட்டில்லாமல் நிற்கும் மிருகத்தை நாம் நேருக்கு நேர் சந்திக்கவேண்டுமே! இரும்புக் கூட்டுக்குள் புலியும் நாமும் இருக்க வேண்டுமே! புலி ஒரு தடவை ஸ்டூ லின் மேல் ஏறி நின்றவுடன் நீண்ட கோலின் நுனியில் மாமிசத்தை வைத்து அதற்குக் கொடுத்துவிட்டு அந்தக் கோலால் அதைத் தடவ வேண்டும். நெற்றியிலிருந்து மூக்கு வரைக்கும் தடவிக் கொடுத்தாலும், பிடரியின் கீழே கழுத்தில் தடவிக் கொடுத்தாலும் புலியும் சிங்கமும்

சுகமாக அநுபவிக்கும். அப்படித் தடவிக் கொடுக்கும்போது ஜாக்கிரதையாகப் புலியைச் சுற்றிவர வேண்டும். பிறகு கையாலேயே தடவிக் கொடுக்கவேண்டும். அதைச் சுற்றிப் போகும்போது அதற்குப் பயமோ எரிச்சலோ இல்லாமலிருந்தால், அது நமக்கு வசப்பட்டு விட்டது என்று நிச்சயிக்கலாம். பிறகு அதை அவிழ்த்துவிடலாம். மற்றப் பழக்கங்கள் சுலபமாக வந்துவிடும். இருந்தாலும் பழகின புலி கூடச் சில சமயங்களில் நம்மைத் தாக்குவதுண்டு.

“நான் முன்னாலே சொன்னபடி, வட்டத்துக்குள் நாம் புலிக்கு ராஜா! வட்டத்துக்கு வெளியே அல்ல. மிருகங்கள் சீறக்கூடிய காலம் சில உண்டு. அவற்றோடு பழகுகிறவர்களுக்கு அதற்குரிய அறிகுறிகள் சுலபமாகத் தெரியவரும்.

“அத்தகைய சமயத்தில் புலியின் முதுகுமயிர் குத்திட்டு நிற்கும். புலி காதுகளை நெறிக்கும்; பாதி எழுந்த நிலையில் உட்கார்ந்திருக்கும்; நம்மைப் பார்த்து மெதுவாக முனகும்; சொன்னதைக் கேட்காது. புலியின் இந்த நிலையில் அது நிச்சயமாக நம் மேல் பாயப் போகிறதென்று தெரிந்து கொள்ளலாம். அப்போது வேறு பரிகாரமே இல்லை! பேசாமல் கூட்டைத் திறந்துவிட்டால், புலி தானே கூட்டிற்குள் போய்விடும்.

“மிருகங்கள் தங்களுக்குள் சண்டையிடுவது என்பது ஓர் அபாயம். புலி சிறுத்தை இரண்டையும் சண்டையில்லாமல் சேர்த்து வைப்பதோ மிகவும் கஷ்டம். அவை சண்டை போட்டுக் கொள்ளும்போது நாம் கூட்டை விட்டு வெளியே போய்விட வேண்டியதுதான். அதை விலக்க முற்பட்டால் நம் எலும்பைக்கூடக் காண முடியாது. இத்தகைய காரியம் செய்யப் போய், பலர் உயிரை விட்டிருக்கிறார்கள். ஒரு முறை மனிதனைத் தாக்கிக் கொன்ற மிருகத்தை உடனே கொன்றுவிட வேண்டும்; அதை மறுபடியும் சாதுவாக்க முடியாது. ஆண்சிங்கமும் பெண்சிங்கமும் விளையாட்டு வட்டத்துக்குள் இருக்கும்போது பெண்சிங்கத்தை நாம் அடிக்கக் கூடாது; அடித்தால் ஆண் நம்மேல் பாய்ந்துவிடும். சிங்கம் புலிகளுக்குள்ளே பெண்களிடம் ஆண்கள் இன்னமும் மரியாதையோடுதான் நடந்துகொள்கின்றன.

“பழக்கும் போது மிருகங்களை அடித்துத் துன்புறுத்துவது அவசியமாக இருந்தாலும் அவற்றை அன்போடு நடத்த வேண்டும். குழந்தையைப்போல் அன்பு செய்யவேண்டும். அங்கே இருக்கிறதே அந்தச் சிங்கக் குட்டிக்கு என் கையாலேயே மீனெண்ணெய், க்ளூகோஸ், ஹார்லிக்ஸ் முதலியவற்றைக் கொடுத்துவருகிறேன். இப்படிச் செய்தால் அதுவும் நம்மிடம் பிரியமாக இருக்கும். என்னிடம் ஒரு பெண் புலி இருந்தது. அதை அன்பாக வளர்த்து வந்தேன். விளையாட்டு வட்டத்துக்குள் ஏதாவது மிருகம் என்னைத் தாக்க வந்தால் உடனே அதை அந்தப் புலி தாக்கும். இப்படி மூன்று முறை அது என் உயிரைக் காப்பாற்றியது. மூன்று நாலு வருஷத்துக்கு முன் அது இறந்து போயிற்று. அதை நினைத்தால் இன்னும் எனக்குக் கண்ணீர் வருகிறது.

அபாய அறிகுறிகள்

லூயி ஜே. பர்ச்

முதல் குழந்தையை ஆஸ்பத்திரியில் பெற்றெடுத்த ஒரு தாய், தன் குழந்தையோடு வீட்டுக்கு வருகிறாள். குழந்தையைப் பற்றிப் பல விஷயங்களை அவள் அறியவேண்டியிருக்கிறது. "குழந்தையின் உடம்பு சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதைக்கண்டுபிடிப்பது எப்படி? தூங்கும்போது குழந்தை என்ன என்ன மாதிரியோ சத்தம் போடுகிறது. பால் குடிக்கும்போது வீல் வீல் என்று கத்துகிறது. இதற்கெல்லாம் அர்த்தம் என்ன?'' என்று அவள் கேட்கிறாள். குழந்தையின் உடம்பு சரியாக இருக்கிறதோ இல்லையோ என்று சில தாய்மார்கள் எந்நேரமும் அனாவசியமாகக் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். வேறு சில தாய்மார்கள் அபாய அறிகுறிகளை அறியாமல் அலட்சியம் செய்துவிட்டு, குழந்தைக்கு நோய் வந்த பிறகு வருந்துகிறார்கள். குழந்தையின் ஆரோக்கியத்தையும் ஆரோக்கியக் குறைவையும் காட்டும் சில குறிகளை இங்கே கூறுகிறேன்.

ஆரோக்கியமான குழந்தை எவ்விதச் சத்தமும் போடாமல் அமைதியாகத் தூங்கும். வாயை மூடிக்கொண்டு மூக்கு வழியாக ஒழுங்காக மூச்சுவிடும். அதன் உடம்பு தெளிவாக இருக்கும். வயிறும் கால் கைகளும் இளஞ்சூடாக இருக்கும். குழந்தை நன்றாகச் சாப்பிடும்; நன்றாகத்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

எச்சரிக்கையில்லாமல் 'அதர்ம யுத்தம்' செய்வது வியாதிகளின் வழக்கமல்ல. ஆகையால், தாய்மார் இவற்றைக் கவனிக்க வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தூங்கும். மலத்தின் நிறம் இருக்க வேண்டிய விதம் இருக்கும். குழந்தை ஒழுங்காக மலங்கழிக்கும். மலம் அதிகக் கெட்டியாகவோ தளர்ந்தோ இராமல் சரியானபடி இருக்கும்.

குழந்தையின் மூக்கில் பொதுவாகச் சளி அடைத்துக்கொண்டிருக்கும். குழந்தை பலமாகத் தும்மினால்தான் அந்தச் சளி வெளியே வரும். இப்படித் தும்மிச் சளியை வெளியே தள்ளும் சக்தி குழந்தைக்கு இருப்பதில்லை. இந்த மூக்கடைப்பினால் குழந்தை சத்தம் போட்டு மூச்சுவிடுவது சகஜம். ஆனால் அது மூச்சு விடும்போது தொண்டையிலோ மார்பிலோ கர் கர் என்ற சத்தம் கிளம்பினால், உடனே கவனிக்க வேண்டும்.

பாலை விழுங்கும்போது சில சமயம் குழந்தை வீல் என்று கத்தும். விழுங்குவதற்கு வேண்டிய பழக்கம் குழந்தைக்கு ஏற்படாததுதான் இதற்குக் காரணம். பாலை விழுங்கும்போது மூச்சுக் குழாயில் அழுத்தம் உண்டாவதாலும் குழந்தை

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: மார்ச் '48), 4600, டைவர்ஸி அவென்யூ, சிக்காகோ 39, யு. எஸ். ஏ.

இப்படி வீலென்று அடிக்கடி கத்தும். குழந்தை இப்படிக் கத்தினல் டாக்டரிடம் காட்டவேண்டும். குழந்தைக்கு உண்டாகும் ஒவ்வொரு நோய்க்கும் அறிகுறி உண்டு. இது டாக்டருக்கு நன்றாகத் தெரியும். ஆனல் பொதுவான சில அறிகுறிகளைத் தாய்மார்களும் அறிந்துகொள்ளலாம்.

குழந்தையின் உடம்பு கன்றிப் போகிறது; குழந்தை சதா சிடுசிடுப்போடு இருக்கிறது; தூக்கத்தில் அடிக்கடி விழித்துக்கொள்கிறது; அதன் உடம்பில் 'ஆராட்டம்' ஏற்படுகிறது; அது உணவை வெறுக்கிறது; வாயிலெடுக்கிறது; சதா அழுகிறது; தலையை அப்படியும் இப்படியும் ஆட்டுகிறது; உடம்புச் சூடு, நாடித் துடிப்பு, மூச்சின் வேகம் முதலியவை அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட அறிகுறிகள் தோன்றினல், குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்பது நிச்சயம். இந்தக் குறிகளெல்லாமே தோன்ற வேண்டும் என்பதில்லை. இவற்றில் சில குறிகள் தோன்றினலே போதும். குழந்தையின் உடம்பு சரியில்லை என்று தெரிந்துகொள்ளவேண்டும். இவை அபாய அறிகுறிகள்!

தொண்டைக் கரகரப்பு, இருமல், மூக்கில் சளி ஒழுகுவது, சாதாரண நிறம் மாறிப் புது நிறமாக மலம் கழிவது, நீர்த்த மலம் ஆகியவையும் அபாய அறிகுறிகளே. குழந்தையின் உடம்பில் ஏதாவது தடிப்பு ஏற்பட்டாலும் சில பகுதிகள் கன்றிப் போனது போல் சிவந்திருந்தாலும் டாக்டரிடம் சொல்லவேண்டும்.

ஜுரம் வருவது சில சமயம் அபாய அறிகுறி; மற்றும் சில சமயம் ஆரோக்கிய சாதனம். தவறில்லாத உஷ்ணமானியைக் கொண்டு ஜுரத்தின் வேகத்தை அளக்க வேண்டும். குழந்தை உடம்பின் ஆசனப் பகுதியில் உஷ்ணமானியை வைத்து அளப்பதுதான் வழக்கம். வாயில் அளக்கும் அளவைவிட இந்த உஷ்ணம் ஒரு டிகிரி அதிகமாக இருக்கும். ஆரோக்கிய நிலையில் குழந்தையின் ஆசன உஷ்ணம் 99-டிகிரி அல்லது 100 டிகிரி இருக்கலாம். குழந்தை உடம்பின் உஷ்ண நிலை ஒரு கட்டுக்கு அடங்காது. ஜுரம் அடிக்கும் போது குழந்தை உடம்பின் உஷ்ணம், பெரியவருக்கு அதே நிலையில் இருக்கும் உஷ்ணத்தைவிட அதிகமாகவும் இருக்கும்.

உஷ்ணமானியைச் சோப்புப் போட்டுக் கழுவி, பிறகு குளிர்ந்த ஜலத்தில் நன்றாக அலச வேண்டும். அதை ஆசனத்தில் செருகுவதற்கு முன்பு, செருகும் முனைக்கு எண்ணெயோ வேஸலைனே தடவ வேண்டும். பிறகு குழந்தையைக் குப்புறப் படுக்கவிட்டு, உஷ்ணமானியை ஆசனத்தில் செருகி, மூன்று நிமிஷம் அப்படியே வைத்திருக்க வேண்டும். அப்போது குழந்தை புரளாமல் கவனித்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு ஜுரம் இருந்தால் டாக்டர் வரும் வரையில் அதை அமைதியாகப் படுக்க வைத்திருக்க வேண்டும். அதிக ஆராட்டம் இருந்தால், உடம்பை ஈரத்துணியால் துடைத்துவிடுங்கள். உடம்பைக் கம்பளியால் போர்த்து வையுங்கள். ஜுரம் அதிகமாக இருந்தால், ஈரத்துணியால் துடைக்கக் கூடாது. அதற்குப் பதிலாக, பாதி 'ஆல்கஹாலும்' பாதி வெந்நீரும் கலந்த ஜலத்தில் துணியை நனைத்து உடம்பைத் துடைத்துவிடுங்கள். இதனல் ஜுர வேகம் கொஞ்சம் தணியும்; ஆராட்டமும் குறையும்.

ஆறு மாதம் முதல் ஒரு வருஷம் வரையில் குழந்தையின் நாடித் துடிப்பு வேகமாகவே இருக்கும். சாதாரணமாக நிமிஷத்துக்கு 120-துடிப்பு வரையில் இருக்கும். மணிக் கட்டில் ஆள்காட்டி விரலை வைத்துக் கடிகாரத்தைப் பார்த்து நாடித் துடிப்பை எண்ணிக் கணக்கிட வேண்டும். சில குழந்தைகளுக்கு மூச்சை உள்ளே இழுக்கும்போது துடிப்பு அதிகமாகவும் வெளியே விடும்போது சற்றுக் குறைவாகவும் இருக்கும். இதனால் ஒன்றும் பாதகமில்லை.

டாக்டரைக் கேட்காமல் குழந்தைக்கு எந்த மருந்தும் கொடுக்க வேண்டாம். மலச்சிக்கலோ, பேதியோ, கெட்டியான மலப்போக்கோ, வாயுவோ அதிகமாக இருந்தால், வயிற்றுவலியைப் போக்க டாக்டர் ஒருவேளை 'எனிமா' கொடுக்கச் சொல்லலாம்.

குழந்தை அடிக்கடி வாந்தி எடுத்தாலும், திடீர் திடீரென்று உரக்க ஒக்காளித்து வாந்தி எடுத்தாலும் ஏதோ வியாதிக் கோளாறு என்று தெரிந்துகொள்ள வேண்டும். டாக்டர் வந்து என்ன வியாதி என்று நிச்சயிக்கும் வரையில் பழரசமும், நிறைய்த் தண்ணீரும் கொடுக்க வேண்டும். குழந்தை பசியினால் கத்தலாம். சில வேளை ஆகாரம் இல்லாததால் ஒன்றும் கேடு வந்துவிடாது. ஆனால் குழந்தைக்குப் பசிக்குமே என்ற தவறான இரக்கத்தால் பாலையோ, வேறு திட ஆகாரத்தையோ கொடுத்துவிட்டால், ஏற்கனவே கெட்டிருக்கும் ஜீரணக் கருவிகள் இன்னும் கெட்டுப்போய்க் குழந்தைக்குக் கடுமையான வியாதி வந்துவிடும்.

குழந்தையின் மூக்கு, தொண்டை, கண், காது ஆகிய அங்கங்களுக்கு அடிக்கடி வியாதி வருவது சகஜம். மூக்கில் சளியும் கோழையும் வருவது வெறும் மார்ச்சளியாக இருக்கலாம். ஆனால், சளி முற்றினால் பெரிய வியாதி ஆகிவிடும். தொண்டை சிவந்த ஊதா நிறமாக இருக்கும். ஆனால் தொண்டை வீங்கி இருப்பதோ தொண்டைக்குள் புள்ளிகள் இருப்பதோ கூடாது. கண் சிவந்திருப்பதும், கண்களில் பீளை கட்டுவதும், வெளிச்சத்தைக் கண்டு கண் கூசுவதும் கண் வியாதியின் அறிகுறிகள். ஒரு டீஸ்பூன் போரிக் ஆஸிட்டை ஒரு பின்ட் சுத்த ஜலத்தில் கரைத்துக் குழந்தையின் கண்களைக் கழுவலாம். கண்ணைத் துடைக்கும்போது ஆஸ்பத்திரியில் உபயோகிக்கும் சுத்தமான பஞ்சை இந்தத் திரவத்தில் நனைத்து மூக்குப்புறமிருந்து கன்னப் புறமாகத் துடைக்க வேண்டும்.

காதுக்கு வியாதி வந்தால் அதுவும் பெரிதாகிவிடலாம். குழந்தை அடிக்கடி தலையைப் புரட்டிக் காதைப் படுக்கையில் தேய்த்துக் கொண்டால், காதைக் கவனிக்க வேண்டும். காதுக்கு மருந்தோ எண்ணெயோ விட வேண்டாம். எண்ணெய் விட்டால் காதுக்குள் டாக்டர் பரீட்சை செய்ய முடியாமல் அது மறைத்துவிடும். இந்த எண்ணெயினால் காதடைப்பும் அதிகரித்துவிடும். கம்பளித் துணி சுற்றிய வெந்நீர்ப் புட்டியால் காதுக்கு ஒத்தடம் கொடுத்தால் வலி சற்றுக் குறையும்.

சொல் பொருந்துமா?

கீழே வரும் சொற்களைப் பலர் உபயோகப்படுத்துகிறார்கள். பல சமயங்களில் அவை பொருத்தமாக அமைவதில்லை. தனியே கொடுத்துள்ள வார்த்தைகளில் பொருத்தமானவற்றைப் பின்னே கொடுத்துள்ள வாக்கியங்களில் பொருத்திப் பாருங்கள்.

வார்த்தைகள்:

1. கரை
2. கறை

பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:

(க) வேட்டியில் கறுப்புக் ... போட்டால் சில சுப காரியங்களுக்கு ஆகாதென்று சிலர் விலக்கிவிடுவார்கள்.

(ங) சந்திரனுக்குக் ... இருப்பது உலகமுழுதும் அறிந்த செய்தி.

(ச) ஆற்றில் வெள்ளம் வந்தால் ... அழியுமென்பது தெரியாமல் இருக்கலாமா?

3. பழக்கம்
4. வழக்கம்

(ஞ) யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்வது.........

(ட) பல நாளாக இந்த மலை ஜாதியினர் கல்யாணகாலத்தில் மணப் பெண்ணை ஒளித்து வைப்பது...

(ண) இந்த மாட்டுக்கு மாத்திரம் வேப்பந்தழையைத் தின்பது...

5. எளிய
6. தெளிவான

(த) விஷயத்தை எடுத்துச் சொல்லும்போது —— நடையில் சொல்லவேண்டும்.

(ந) அலங்காரமில்லாத — நடையில் அவன் எழுதுவான்.

7. அருவருப்பு
8. வெறுப்பு
9. பகை

(ப) நாகத்துக்கு எலியினிடத்தில்—இருப்பதை உலகம் அறியும்.

(ம) அழுக்கடைந்த ஆடையை எப்படித்தான் அந்த மனிதன் — இல்லாமல் கட்டிக்கொள்கிறானோ?

(ய) புறங்கூறுபவனைக் கண்டால் சான்றோர்களுக்கு — உண்டாகும்.

10. குற்றம்
11. குறை
12. தீங்கு

(ர) உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுகிறவர்கள் நட்பானது ... பயக்கும்.

(ல) அழகு மிகுதியாக இருந்தும் குணம் இல்லாவிட்டால் அது பெரிய..

(வ) பண்புடையவர்கள் பட்சமாக நடத்தல்......

[விடைக்கு 12-ஆம் பக்கம் பார்க்க]

சிறுகதை :

உடைந்த பொம்மை

வி. பைரப்பா

உள்ளங் கவரும் கதைகளின் நாயகன் 'கோபால கிருஷ்ணன்'. மனிதருக்கு மனிதர் காட்டும் வேற்றுமை, வெறுப்பெல்லாம் அவனுக்கு ஏது? இந்த வேற்றுமை வெறுப்பெல்லாம் குழந்தை கரீமுக்குத்தான் ஏது? இவன் இருதயத்தில் அவன் குடி புகுந்துவிட்டான். ஆனால், இந்த ஜனசமுகத்துக்கு அதையெல்லாம் கவனிக்க நேரமேது? பொம்மை உடைந்துவிட்டது!

எனக்கும் அப்துல்லாவுக்கும் நட்பு ஏற்பட்டு ஐந்து ஆறு வருஷத்துக்குமேல் ஆகிவிட்டது. ஒரு மகாநாடு சம்பந்தமாக நாகபுரி சென்று திரும்பி வந்துகொண்டிருந்தேன். அவரும் வியாபார சம்பந்தமாக எங்கேயோ சென்றுவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்போது நாங்கள் இருவரும் ஒரே வண்டியில் பிரயாணம் செய்தோம். இருவரும் ஒரே ஊர் என்று தெரிந்ததும் கேட்க வேண்டுமா? பிரமாதமான உறவு ஏற்பட்டுவிட்டது. எங்கள் ஊரிலே அப்துல்லா பெரிய வியாபாரி. அவருக்கு வயது நாற்பது நாற்பத்தைந்து இருக்கும். பிரம்மசாரி; வீட்டில் ஒண்டி. அப்துல்லா அடிக்கடி மலையாளத்துக்குச் சென்று வந்தார். அங்கே அவருக்கு ஒரு தமையனார் இருந்தார் என்று மட்டும் தெரியவந்தது.

வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து, வேண்டிய லாபம் உண்டாயிற்றே ஒழிய, அப்துல்லா அதைப் பற்றிச் சந்தோஷமோ உற்சாகமோ காண்பித்துக்கொள்ளவே இல்லை. "எனக்கு இப்பொழுது சம்பாதித்து என்ன ஆக வேண்டும்? ஏதோ முடிந்தால் இரண்டு காசு தர்மம் செய்யலாம். ஒன்றும் இல்லாமல் வீணே பொழுதைப் போக்க வேண்டாமே என்றுதான் இந்த வியாபாரம் செய்கிறேன்" என்று அவர் என்னிடம் அலட்சியமாகக் கூறுவதுண்டு. அவர் நிலையில் நான் இருந்தால் லட்சக்கணக்கில் பணம் குவித்திருப்பேன். அவருக்கு அது பிடிக்கவில்லை.

அப்துல்லாவுக்கு நண்பர்கள் என்றால் உயிர். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார். வேண்டியதை எல்லாம் தம் கையினாலேயே செய்தால்தான் அவருக்குத் திருப்தி.

மாலையில் நான் தம் வீட்டில் நுழையும்போதே, அவர் ஆசார உபசாரத்துடன் என்னை வரவேற்றார்.

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: ஆண்டு மலர் '47),
20-ஏ, லால்பாக் ரோட், பங்களூர்.

"மணி 7-35-ஆகிறது. நீங்கள் ஐந்து நிமிஷம் தாமதித்துவிட்டீர்கள்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் அப்துல்லா.

நான் ஆங்கிலக் கொள்கைகளை ஆதரிப்பவனாயிற்றே என்று இடித்துக் காட்டுவதற்காகவே இந்த வார்த்தை. நான் கடிகாரத்தைப் பார்த்தேன்.

"கடிகாரம் எல்லாம் சரிதான். உங்கள் கைக்கடிகாரந்தான் தகராறு. வெள்ளைக்காரர்களுடன் பழகும் கடிகாரமோ இல்லையோ? மிகவும் ஜரூராய் ஓடுகிறது" என்றார் அவர்.

நானும் சிரித்துக்கொண்டேன்.

விருந்து வகைகளும் பட்சணங்களும் தடபுடலாக இருந்தனவே

"கரீம் அல்லவா படுத்திருக்கிறான்? என்ன நேர்ந்தது, அப்துல்லா?"

தவிரச் சாப்பிட வந்தவர்கள் மிகவும் சிலரே. விருந்தை உண்டு விட்டு எல்லோரும் ஒருபுறமாக வந்து உட்கார்ந்ததும், "இந்த விருந்து எதற்காகத் தெரியுமா?" என்று கேட்டார் அப்துல்லா.

"உங்கள் விருந்துக்குக் காரணம் வேறே வேண்டுமா? நீங்கள் நினைத்த போதெல்லாம் விருந்துதான். காரணம் எதுவாக இருந்தால் என்ன? சாப்பாடு கிடைத்தது எங்களுக்கு" என்றேன்.

"எப்போதும் உங்களுக்கு இந்தக் கிண்டல்தான்" என்று சொன்ன அப்துல்லா எழுந்து இரண்டடி சென்று, "கரீம்" என்று யாரையோ அழைத்தார்.

உடனே ஒரு பையன் ஓடி வந்து தலை கவிழ்ந்த வண்ணம் அப்துல்லாவின் பக்கத்தில் நின்றான். பையனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கலாம்.

"பார்த்தீர்களா? இவன் என் வீட்டுக்கு வந்ததை முன்னிட்டுத்தான் இதெல்லாம்" என்றார் அப்துல்லா.

என்னுடன் கூட இருந்தவர்களுக்கும் அந்தப் பையனைத் தெரியவில்லை; எனக்கும் தெரியவில்லை. நான் இதுவரையில் இங்கே எவ்வளவோ தடவை வந்திருக்கிறேன்; ஆனால் இவனை ஒருபோதும் பார்த்ததில்லை.

"யார் இவன்? இவனை நான் பார்த்ததில்லையே இதுவரையில்?" என்றேன்.

"பாவம்! இவன் ஓர் அநாதை! நம் நாட்டில் இப்படி எவ்வளவோ பையன்கள்" என்று ஒரு பெருமூச்சு விட்டார் அப்துல்லா.

பையனுடைய வரலாற்றைக் கேட்க எங்களுக்கு ஆவலாக இருந்தது.

"உங்களிடம் இவன் எப்படி வந்தான்?" என்று நாங்கள் கேட்பதற்குள், அவராகவே, "சொல்லுகிறேன். அவசரப்படாதீர்கள்" என்று மேலே சொல்ல ஆரம்பித்தார்.

"அப்படி ஒன்றும் அதிசயமில்லை. இருந்தாலும் கேளுங்கள். குழந்தை பிறந்த இரண்டு நாட்களிலேயே தாயை இழந்துவிட்டான். இரண்டு வயதில் தகப்பன் காரியமும் முடிந்தது. சிற்றப்பன் எடுத்து வளர்த்தான். சிற்றப்பன் பாம்பாட்டியும், கம்பு கட்டி ஆடியும், கண்கட்டி வித்தை காட்டியும் பிச்சை எடுத்துப் பிழைத்தான். அந்த வித்தைகளை இந்தக் குழந்தைக்கும் கற்பித்தான். தொம்பகூத்தாடியைப் போல் விளையாடுவது, பல்டி யடிப்பது இதெல்லாம் இவன் எவ்வளவு அழகாகச் செய்கிறான் தெரியுமா? குழந்தை மிகவும் சூடிகையாக இருக்கிறான். சிற்றப்பாவாவது உயிரோடிருந்தால், இவனுக்குக் கவலை இல்லை. குழந்தை அதற்கும் கொடுத்து வைக்கவில்லை, பாவம்! இவனை வளர்க்கக் கூடியவர் வேறு எவரும் இல்லை. எப்படியோ இவன் என்னிடம் வந்து சேர்ந்துவிட்டான். அநாதைக் குழந்தையை எப்படித் தள்ளுவது? வளர்ப்பதென்று தீர்மானித்துவிட்டேன். உங்கள் எல்லோருடைய வாழ்த்துக்களினாலும் இவனும் ஒரு மனிதனாக வேண்டும். வாழ்த்துங்கள் இவனை" என்று சொல்லி முடித்தார். பிறகு சிறுவனை, "இங்கே வா கரீம்" என்று அழைத்து, "உனக்குத் தெரியும் வித்தைகளை எல்லாம் இவர்களுக்குச் செய்து காண்பி பார்க்கலாம்" என்றார் உற்சாகத்துடன்.

இதை அவர் சொல்லியதுதான் தாமதம்; அது வரைக்கும் தலை குனிந்து நின்றுகொண்டிருந்த பையனுடைய வெட்கம், சங்கோசம் எல்லாம் சிட்டாய்ப் பறந்தன. தன் சிறிய தேகத்தை ஒடித்து வில்லாக வளைத்து, விதம் விதமாகப் பார்ந்து, எவ்வளவோ வித்தை காண்பித்தான் பையன். அவன் தேகத்தையே உருட்டிப் பந்துபோல் காண்பித்தபோது எங்கள் எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. என்னையும் அறியாமல் கரீமிடம் அன்பும் இரக்கமும் என் உள்ளத்தில் எழுந்தன. அவனை அழைத்துப் பக்கத்தில் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று தோன்றியது. தன் விளையாட்டு முடிந்ததோ இல்லையோ, கரீம் அங்கே நிற்கவில்லை. அப்துல்லாவின் தோளில் சாய்ந்தான். பிறகு, கண நேரத்தில் உள்ளே ஓடிவிட்டான்.

அப்துல்லா அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. "பார்த்தீர்களா! பையன் எப்படி?" என்று சொல்லிப் பெருமை பூரித்துவிட்டார்.

* * *

இதற்குப் பிறகு அப்துல்லாவின் வீட்டில் நான் எப்போதும் கரீமைச் சந்திப்பேன். 'அவனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்' என்ற ஒரே எண்ணந்தான் அப்துல்லாவுக்கு. வீட்டில் வந்து சொல்லிக் கொடுக்க வாத்தியாரை வைத்தார். கரீமைப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பினார். பையன் பள்ளிக்கூடம் போவது தவறுது. வாத்தியார் வீட்டிலே வந்து பாடம் சொல்லுவதும் தவறுது. இரண்டும் நடந்துகொண்டிருந்தன. நான் அங்கே செல்லும் போதெல்லாம், கரீம் தன் சிறுவயதில் கற்ற வித்தைகளையும் மறக்காமல் வளர்த்துக் கொண்டு வருவதைக் கண்டேன். அவற்றை அவன் எனக்குச் செய்து காட்டுவதும் உண்டு. மரம் ஏறுவதென்றால் கரீமுக்கு அசாத்தியப் பிரியம்.

"பயல் நேற்றுத்தான் வந்தான் போல் இருக்கிறது. இரண்டு வருஷம் ஆகப்போகிறதே" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டார் அப்துல்லா.

ஒரு நாள் உட்கார்ந்து ஏதோ என் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்துல்லாவின் வேலைக்காரன் நாகண்ணன் ஒரு கடிதத்தை எடுத்து வந்து என்னிடம் நீட்டினான். அப்துல்லா இரண்டே வரிகள் எழுதியிருந்தார். உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று அவர் எழுதுவதற்கு அப்படி என்ன விசேஷம் என்று எனக்குத் தெரியவில்லை. எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, அவசரமாய்ப் போனேன். அப்துல்லா என்றைக்கும்போல் உற்சாகமாக இல்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எனக்கே ஆச்சரியமாய் இருந்தது.

"என்ன? உடம்புக்கு ஏதாவது அசௌக்கியமா?" என்று கேட்டேன்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை."

"பின்னே ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

"இந்தப் பையன் தொந்தரவு தான் பெரிதாய்ப் போய்விட்டது, போங்கள்."

"என்ன வந்துவிட்டது இப்போது திடீரென்று?"

"படிக்கவும் பள்ளிக்கூடம் போகவும் அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எப்போது பார்த்தாலும் பல்டி அடிப்பதிலேதான் குறியாக இருக்கிறான்."

"நான்தான் சொன்னேனே! அன்றைக்கே தெரியும் எனக்கு. குழந்தையிலிருந்து அவன் ரத்தத்தில் அதுதானே ஊறியிருக்கிறது? நீங்கள் வீணாய்ச் சிரமப்படுகிறீர்கள்."

"இதோடு நின்றால் தொலைந்து போகிறதென்று இருந்துவிடலாமே. வர வர அவன் செய்கிற விஷமம் அல்லவா தாங்க முடியவில்லை? ஊரே முறையிடுகிறது. அல் அசல் எல்லாம் சண்டை; அடிதடி. இது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இப்போது உங்களைக் கூப்பிட்டது ஒரு விஷயத்துக்காக. நீங்கள்தாம் எப்படியாவது ஒத்தாசை செய்ய வேண்டும். என்ன? செய்ய முடியுமா?"

"உங்களாலேயே முடியாதது என்றால் என்ன ஆகப் போகிறது? முடிந்தவரையில் அவனைக் கண்டித்துப் பார்க்கிறேன்."

"உண்மையாகச் சொல்லுகிறேன். கரீமுக்குப் படிப்பில் கவனமே இல்லை. நான் என்ன செய்தும் பலிக்கவில்லை. அவனை அப்படியே விடவும் முடியாது. அவனுக்கு ஏதாவது வேலை கொடுத்தாக வேண்டும். உங்கள் அச்சாபீசில் சேர்த்துக்கொண்டு ஏதாவது வேலை கொடுத்துப் பாருங்களேன்."

'இதென்ன பிரமாதம்?' என்று நினைத்துக்கொண்ட நான், "சரி, அதற்கென்ன யோசனை?" என்றேன்.

அப்துல்லா சற்றுச் சிரித்துக் கொண்டார். "அதெல்லாம் சரிதான். கரீம் எல்லோரையும்போலச் சாதாரணமான பிள்ளை இல்லையே? உங்கள் அச்சாபீசில் இவனைக் கட்டிக் காப்பதற்குத்தானே எல்லோருக்கும் பொழுது சரியாய் இருக்கும்? நன்றாய் யோசனை செய்துதான் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டார்.

கரீமைப்பற்றி அவருக்கு இருந்த கவலையைப் பார்க்க எனக்கே பரிதாபமாய் இருந்தது.

"அவனை என்னிடம் விட்டுவிட்டீர்களானால், அதெல்லாம் என் பொறுப்பு. வீணாக என் கவலைப்படுகிறீர்கள்?" என்று சொல்லி அதன் பின்பு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பினேன்.

* * *

கரீம் அச்சாபீசுக்கு வரத் தொடங்கி, இரண்டு வாரங்களும் ஓடிவிட்டன. அப்துல்லா அவ்வளவு பயமுறுத்தினாரே தவிர, கரீம் சாதாரணமாகவே வேலை செய்துவந்தான். அச்சுக் கோக்கும் ராமையனுடன் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். தான் சொல்வதை உடனே பிடித்துக்கொண்டு கரிம் வேலை செய்வது ராமையனுக்கு மிகவும் திருப்தியை அளித்தது. இப்படிப் பதினைந்து நாள் ஓடியது தெரியவே இல்லை. வந்த அடியில் ஒரே ஒரு நாள் மட்டும் கரீம் கொஞ்சம் அமர்க்களப்படுத்திவிட்டான். எதையோ கைவிரலில் மாட்டிக் கொண்டு அவன் சுற்றியிருக்கிறான். ஒரு மணி நேரமாக ராமையன் கோத்து வைத்திருந்த அச்சு எழுத்து வரிசையில் அது போய் விழவே, எழுத்துக்களெல்லாம் சிதறி மூலைக்கு ஒன்றாகப் போய் விட்டன. இதைக் கேட்டபோது

தான் அவனைக் கோபித்துக் கொள்ளவில்லை.

இரண்டு வாரத்துக்குப் பின்பு ஒரு நாள் நாள் என் அறையில் உட்கார்ந்திருந்த போது, கரீம் மெள்ள மெள்ள உள்ளே நுழைந்தான். அவன் முகத்திலும் கண்ணிலும் பயம் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. உத்தரவில்லாமல் அவன் உள்ளே நுழைந்ததற்கு அவனைக் கோபித்துக் கொள்ளவேண்டும் என்று நான் முயன்று பார்த்தேன். ஏதோ சொல்ல வந்த கரீம், என் முகத்தில் ஜொலித்த கோபத்தைக் கண்டுதானோ என்னவோ, தலையைக் கவிழ்த்துக்கொண்டான்.

"என்ன வேண்டும்? உத்தரவில்லாமல் யாருடைய அறைக்குள்ளேயும் போகக்கூடாது. வேண்டுமானால் கதவுப்பக்கத்திலே நின்றுகொண்டு விரலால் கதவைத் தட்டி உத்தரவு பெறவேண்டும். இனிமேல் நீ இப்படிச் செய்யக் கூடாது. தெரிந்ததா, கரீம்?" என்றேன்.

அவனும் தன் தப்பிதத்தை உடனே உணர்ந்து மன்னிப்புக் கேட்டுப் பணிந்து நின்றான். சிறு பிராயம் முதல் அவனுக்குத்தான் என்ன பணிவு!

"சரி, உனக்கு என்ன வேண்டும்?" என்றேன்.

"ஒன்றுமில்லை. எனக்கு நன்றாகப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுக்க வேண்டும்."

யார்? கரீமா இப்படிக் கேட்பவன்? உண்மையாகவா? என்னால் நம்ப முடியவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. புஸ்தகம் அவனுடைய பரம விரோதி. காகிதக் கப்பலும் காற்றாடியும் செய்யத்தான் அவனுடைய கைகள் புஸ்தகத்தையோ காகிதத்தையோ தொட்டிருக்கும். அப்படி இருந்தவனுக்குத் திடீரென்று படிப்பில் என்ன இவ்வளவு ஆசை? இதற்குக் காரணம்?

"அதற்கென்ன இவ்வளவு அவசரம், கரீம்? இவ்வளவு நாள் சும்மா இருந்தவனுக்கு இப்போது திடீரென்று என்ன இந்த ஆசை? படிப்புக் கற்றுக்கொண்டால் போகிறது" என்றேன்.

"நானும் அச்சிலே வார்த்தைகள் ஜோடிக்க ஆசையாயிருக்கிறது. ஜோடிக்கப் போனால், சரியாக வரவில்லை. அதற்குப் படிக்க வேண்டுமென்கிறான் ராமையா" என்று கரீம் மிகவும் துக்கத்துடன் கூறினான். அதைக் கேட்டு எனக்கே மிகவும் பரிதாபமாக இருந்தது.

"அதற்கென்ன கரீம், படிக்கலாம்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டேன்.

அன்று முதல் அச்சாபீஸ் வேலையுடன் கூட அவனுடைய வித்தியாப்பியாசமும் தொடங்கியது.

நாட்கள் ஓட ஓட, கரீமின் உற்சாகம் அதிகரித்தது. பள்ளிக்கூடத்திலும் சேர வேண்டுமென்று வரவர அவன் மிகுந்த ஆசை கொண்டான். தன்னை முதலில் அனுப்பியபோது அங்கே சரியாகப் படிக்காததால், மறுபடியும் தன்னை அனுப்புவார்களோ மாட்டார்களோ என்று அவனுக்கு உள்ளுக்குள் சந்தேகம். தன் ஆசையைத் தைரியமாக என்னிடம் சொல்லப் பயப்பட்டான். அவனுடைய விருப்பத்தை நித்தியம் கேட்டுக்கொண்டிருந்த ராமையன் ஒரு நாள் என்னிடம் வந்து, "கரீம் பள்ளிக்கூடத்துக்குப் போவதாகச் சொல்கிறான்" என்றான். எனக்கும் அதிலே மனப்பூர்வமாகச் சம்மதந்தான். அப்துல்

[illegible]தைக் கேட்டவுடன் அப்படியே பூரித்துப் போய்விட்டான்.

கரீமை நல்ல பள்ளிக்கூடம் ஒன்றில் போட்டோம். அந்தப் பள்ளிக்கூடம் எங்கள் வீட்டுக்குச் சமீபத்திலேயே இருந்தது. எங்கள் அடுத்த வீட்டுப் பெண் சீதையையுங்கூட அதே பள்ளிக்கூடத்தில்தான் சேர்த்தார்கள். கரீமைவிட அவள் வயதில் சிறியவள்; அதனால் அடுத்த வீட்டுக் கோவிந்தராயரின் சம்சாரம் தங்கள் மகள் சீதையைக் கரீமுடன் அனுப்புவதென்று எண்ணி, அவனிடமும் அதைச் சொல்லி ஏற்பாடு செய்தாள். இதனால் கரீமுக்குத் தினம் ஏதாவது தின்பண்டம் கிடைக்கும். கோவிந்தராயரின் வீட்டில் என்ன செய்தாலும் சரி, இவனுக்கு அதில் ஒரு பங்கு உண்டு. அதைச் சீதை தயாராக வைத்திருந்து அவனுக்குக் கொடுத்துவிடுவாள்.

நாள் தவறாமல் அவர்கள் வீட்டுக்கு இவன் போவான். சீதையின் தாய் இவனுக்கு நல்ல நல்ல கதைகள் சொல்லுவாள். காலையில் கதை, மாலையில் கதை, நேரம் கிடைத்தபோதெல்லாம் கதைதான். கரீம் எப்போதாவது பிடிவாதம் பிடித்தால், கதை என்றால் போதும். உடனே எல்லாம் சரியாகப் போய்விடும். கதை கேட்கும்போது இரவு ஒன்பது மணியானாலும் தூங்க மாட்டான்.

சீதையின் தாய் சொல்லும் கதைகளெல்லாம் சாதாரணமாகப் பாரதம், ராமாயணம், பாகவதம் ஆகியவற்றுள் உள்ள கதைகள்தாம். இந்தக் காலத்து நாகரிகமான புதுக் கதை ஒன்றும் அவளுக்குத் தெரியாது. அவள் சொல்லும் கதைகளைக் கேட்டுக் கேட்டுக் கரீமுக்குக் கிருஷ்ண பக்தி அபாரமாகவளர்ந்துவிட்டது. கரீம் சங்கோசப் பிராணி; தாராளமாய் யாரையும் எதுவும் கேட்டுவிட மாட்டான். பாலகோபாலனைப்பற்றி ஏதாவது சந்தேகம் வந்தால் மட்டும் அதை விளக்கும்படி நாகண்ணனைப் பிடித்து நச்சரிப்பான். நாகண்ணன் அதையெல்லாம் விளக்கக்கூடியவன் என்பது கரீமின் நம்பிக்கை. ஒரு நாள் நாகண்ணன் என்னிடம் வந்து, "வர வரக் கரீமுக்குப் பாலகோபாலன் பைத்தியம் முற்றிவிட்டது. கோயிலுக்குப் போகவேண்டுமென்று என்னைப் பிய்த்துப் பிடுங்குகிறான். எங்கள் எஜமானராகக் கொண்டு சரியாகப்போய்விட்டது. வேறு யாராவதாக இருந்தால் இவனுடைய பிடிவாதத்துக்கும் அசட்டுத்தனத்துக்கும் இவனை என்ன செய்வார்களோ" என்றான்.

கரீம் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கொண்டிருந்தான். நாளுக்கு நாள் சீதைக்கும் கரீமுக்கும் நட்பு வளர்ந்துகொண்டே வந்தது. 'கரீம்' என்றுகூட இவனைச் சீதை அழைக்கமாட்டாள். 'க்ரீம்', 'க்ரீம்' என்றே அழைப்பாள். மணிக்கணக்கில் இருவருக்கும் பேச்சு, விளையாட்டு. சீதையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினால் கரீமின் பிடிவாதமும் முரட்டுத்தனமும் குறைந்து படிப்பு விருத்தியாயிற்று. அப்துல்லாவைப்பற்றிக் கேட்கவேண்டுமா? அவருக்கு ஒரே பெருமை. "எப்படியோ அவனையும் ஒரு வழிக்குக் கொண்டு வந்து விட்டீர்களே! நீர்தாம் கெட்டிக்காரர்" என்று என்னையும் உயர்த்திவைத்துச் சந்தோஷப்பட்டார்.

* *

அன்று வெள்ளிக்கிழமை. ஊரில் ஏதோ ஒரு பெரிய கூட்டம்

கூடுவதாக இருந்தது. கூட்டத்திலே அநேக முக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசி முடிவு செய்ய வேண்டுமென்று உத்தேசம் செய்திருந்தோம். கூட்டத்துக்குப்போகச் சீக்கிரம் கிளம்பவேண்டுமென்று நான் சித்தம் செய்து கொண்டிருந்த சமயத்தில், ஏதோ குழந்தை அழும் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கையில் ஒரு பொம்மையைப் பிடித்தவண்ணம் அழுது கொண்டே சீதை என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

"ஏன் சீதை அழுகிறாய்?" என்றேன்.

சீதை அழுதவண்ணம், "க்ரீம், க்ரீம்" என்றாளே ஒழிய, வேறே ஏதும் சொல்லவில்லை. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"என்ன செய்தான் அவன்? வரட்டும் பயல், பேசாமல் இரு. அவன் காலை முறித்துவிடுகிறேன்" என்றேன்.

அப்போதும் சீதையின் அழுகை ஓயவில்லை. அவளுடைய தாயாரைக் கூப்பிட்டனுப்பினேன். பிறகு தான் தெரிந்தது விஷயம்.

"சீதைக்கு அவளுடைய அப்பா ஒரு பாலகோபாலன் பொம்மை வாங்கித் தந்தாராம். அதைத் தனக்கு வேண்டுமென்று கேட்டானும் கரீம். சீதை மறுத்துவிட்டாள். அதனால் கரீம் கோபித்துக் கொண்டு போய்விட்டான்" என்று என்னிடம் சொல்லி, பிறகு குழந்தையைப் பார்த்து, "நீ ஏன் அவனுக்குப் பொம்மை கொடுக்கமாட்டேன் என்று சொன்னாய்? அதற்குத்தான் அவன் கோபித்துக்கொண்டு போய் விட்டான்" என்றாள் சீதையின் தாய்.

சீதை விசித்துக்கொண்டே பதில் சொன்னாள்: "நான் ஒன்றும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. இருவரும் வைத்துக் கொண்டு சேர்ந்து விளையாடலாம் என்றே சொன்னேன்."

"இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறாய், சீதை?"

"எனக்குப் பொம்மையே வேண்டாம். அவனே வைத்துக்கொள்ளட்டும். அவன் என்னுடன் 'டூ' விட்டுவிட்டான்" என்று அவள் சொன்னபோதும், அவளுக்குத் துக்கம் தாங்கவில்லை. 'ஹோ!' என்று அழுதுவிட்டாள்.

"சரி சரி, அழாதே. அவனை அழைத்துக்கொண்டு வரச்சொல்லி, அவனுக்கும் உனக்கும் நிறையப் பட்சணம் செய்து தருகிறேன். பாலகோபாலனை வைத்துக் கொண்டு இரண்டு பேரும் விளையாடலாம்" என்று தாயார் சொன்னதும், சீதையின் மனம் சற்றுச் சமாதானப்பட்டது. நானும் புறப்பட்டேன்.

* *

மகாநாடு ஊருக்கு அடுத்த ஒரு கிராமத்தில் நடந்தது. மூன்று நாள் நடக்க வேண்டிய அது ஏதோ அசௌகரியத்தினால் ஒரே நாளில் முடிந்துவிட்டது. ஊருக்குத் திரும்பினேன். ஊரில் கலகம் நடப்பதாகச் செய்தி எட்டியது. விசாரித்தபோது, அது ஹிந்து முஸ்லிம் சண்டை என்றும் போலீசார் வந்து தடுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டதென்றும் தெரிந்தது. வேகமாக வந்தேன். அப்துல்லாவின் வீட்டுக்கு அருகில் வரும்போது, அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. வீட்டுக்குள் ஒருவரும் நுழையாதபடி வாசலில் பாராப் போட்டிருந்தார்கள். என்ன விசே

...று விசாரித்துக்கொண்டே ...டுக்குள் போக முயன்றேன். அதற்குள் எதிரிலே நாகண்ணன் வந்தான்.

"என்ன நடந்தது, நாகண்ணு?" என்றேன்.

"என்னத்தைச் சொல்வது? ஆக வேண்டியதெல்லாம் ஆகிவிட்டது" என்று நாகண்ணன் தலையைக் கவிழ்த்துக்கொண்டான். அவன் கண்ணில் நீர் ததும்பியிருந்தது. அப்துல்லாவுக்குத்தான் ஏதாவது ஆபத்தோ என்று தோன்றியது எனக்கு.

"என்ன சொல்லுகிறாய், நாகண்ணு?" என்றேன். அதற்குள் உள்ளேயிருந்து அப்துல்லா வெளியே வந்தார்.

"என்ன இவ்வளவு கூட்டம், அப்துல்லா? ஒன்றும் விசேஷமில்லையே?" என்றேன். அவரைக் கண்டதுந்தான் எனக்குச் சற்று நிம்மதி உண்டாயிற்று.

அப்துல்லா பேசவில்லை; உள்ளே வரும்படி எனக்கு ஜாடை காட்டினார். என்னுடன் நாகண்ணனும் வந்தான். உள்ளே ஓர் அறையின் ஓரத்தில் ஒரு கட்டில்; அந்தக் கட்டிலின்மேல் யாரோ படுத்துப் போர்வையால் போர்த்திருந்தது தெரிந்தது. கட்டிலின் அருகில் சென்று அந்தப் போர்வையைத் தூக்கினார் அப்துல்லா. "கரீம் அல்லவா படுத்திருக்கிறான்! என்ன நேர்ந்தது அப்துல்லா?" என்று பதறிக்கொண்டே ஓடினேன். அப்துல்லா பரபரப்புடன் அப்பால் போய்விட்டார். "பொம்மை உடைந்துவிட்டது" என்றுமட்டில் அவர் வாய் முணுமுணுத்தது.

"கரீம்......கரீம்தான்; ஐயோ! நான் போகும்போது நன்றாய் இருந்தானே?" என்று நான் அலறிவிட்டேன்.

"சண்டையில் கல் அடிபட்டுவிட்டது. படுகாயம்" என்று சொல்லிக்கொண்டே, கரீமின் மார்புத் துணியைத் திறந்தான் நாகண்ணன்.

"என்ன கொடுமை இது! அந்த உடைந்த பாலகோபாலனை அல்லவா சாகும் தறுவாயிலும் அவன் தன் மார்பில் அணைத்துக்கொண்டிருக்கிறான்!"

"நம் தெய்வத்தை நாமே கல்லால் அடித்துக் கொன்றுவிட்டோம். இனி என்ன பேச்சு? இந்தப் பாலகோபாலனில் அல்லாவைக் கண்டான் கரீம். இதை அவனிடமிருந்து எடுக்க அப்துல்லா எஜமான் சம்மதிக்கவில்லை. கரீமும் கடைசிவரைக்கும் அதை விடமாட்டேன் என்றான்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான் நாகண்ணன்.

என்ன பதில் கூறுவது? என் கண்ணில் பொங்கிக்கொதித்த கண்ணீர்த் துளிகள் 'பொலபொல' வென்று அந்தப் பாலகோபாலன் பொம்மைமீது சொரிந்து பரவித் தோய்ந்தன.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.